
CONNEMARA PUBLIC LIBRARY
4 - FEB 1963
MADRAS

# திருக்கோயில்


"என்கடன் பணி செய்து கிடப்பதே"



சுவாமி விவேகானந்தர்

மாலை 5] சுபகிருது-தை — பிப்ரவரி '63 [மணி 5

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், தேசீயப் பாதுகாப்பு நிதிக்கு மடத்தின் சார்பில் 15 ஆயிரமும், ஆதீனக் கோயில்களின் சார்பில் 85 ஆயிரமும் ஆக, ரூபா இலட்சத்து ஒன்றினைத் தமிழ்நாடு முதலமைச்சர் திருமிகு. K. காமராஜர் அவர்களிடம் வழங்குதல். உடன் இருப்பவர்: அமைச்சர் திருமிகு. R. வெங்கட்டராமன் அவர்கள்.

## பொருள் அடக்கம்


1. திருஆக்கூர்
2. திருக்கோட்டூர்
3. திருநாவுக்கரசு நாயனர்
4. நம்பியாரூரர்
5. திருப்பாவைச் சிறப்புரைகள்
6. திருஞானசம்பந்தர் திருமுறை
7. கல்வெட்டும் சமயத்தொடர்பும்
8. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
9. சிவஞானபோதம்
10. அர்த்தநாரீசுவரர்
11. வித்தகச் சான்றோர் விவேகானந்தர்
12. திருப்பாவை ஆராய்ச்சி
13. செய்திகள்



ஆண்டுச் சந்தா ரூ. 10- ☼ தனி இதழ் விலை ரூ. ஒன்று


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

சந்தாப்பணம் நிலுவையுள்ள சந்தாதாரர்கள், தம் நிலுவைச் சந்தாப் பணத்தையும், 1962-63 புதிய ஆண்டுக்கான சந்தாப் பணத்தையும், விரைவில் அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர் அலுவலகங்களில் செலுத்திவிடுமாறு, நினைவூட்டிக் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர்கள்.

—ஆசிரியர்

ஈங்கிதுஎன் றதுகடந்த இயல்பி னுனும்
ஈறுமுதல் நடுவொன்றும் இலாமை யானும்...
நீங்கலரும் உயிர்க்குயிராய் நிற்ற லானும்
நிறுத்திடுவன் நினைந்தஉரு நிமலன் தானே.
—சிவப்பிரகாசம்: 15.

எனச் சைவ சித்தாந்த ஞானசிரியர்களான அருள் நந்தி சிவமும், உமாபதி சிவமும் விளக்கி யருளியிருத்தல் கொண்டு உணரலாம்.

**கோச் செங்கணன் :**

ஆக்கூரில் உள்ள தான்தோன்றி ஈசுவரர் கோயில், ''மாடக் கோயில்'' எனப்படும். மாடக் கோயில் என்பது யானை ஏற முடியாதபடி படிக்கட்டுக்கள் வைத்து உயரமாகக் கட்டப் பெற்றதாகும். இத்தகைய மாடக் கோயில்கள் பலவும், **கோச் செங்கணன்** என்னும் சோழ மன்னனால் கட்டப் பெற்றன என்பர்.

**திருஞான சம்பந்தர் ;**

திருஞான சம்பந்தர் இத்தலத்திற்கு ஒரு திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார். அதன்கண் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் ''ஆக்கூர்த் தான்தோன்றி மாடம்'' என அவர் இதனைச் சிறப்புறக் குறிப்பீட்டு அருளிச் செய்துள்ளார். மேலும், அவர் இத் தலத்தின் திருப்பதிகத்தில், அங்கு வாழ்ந்திருந்த வேளாளர் குலப் பெருமக்களை வியந்து பாராட்டி,

''வேளாளர் என்றவர்கள்
வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில்
தான்தோன்றி மாடமே.''

எனச் சிறப்பித்து மொழிந்துள்ளார். அன்றியும், அவ் ஆக்கூரில் உள்ளவர்கள் அனைவருமே ஈகைத் தன்மை யுடையராக விளங்கினர் என்பதனை,

''இன்மையாற் சென்றிரந்தார்க்கு
இல்லை என்னுது ஈத்துவக்கும்
தன்மையார் ஆக்கூரில்
தான் தோன்றி மாடமே''

என்று அருளிச் செய்திருக்கின்றார்.

**சேக்கிழார் :**

இங்ஙனம் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருமொழியினை, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் பெரிதும் வித தெடுத்துப்போற்றி,

''பொன்னிநீர் நாட்டின் நீடும்
பொற்பதி ''புவனத் துள்ளோர்
இன்மையால் இரந்து சென்றோர்க்கு
இல்லைஎன் னதே ஈயும்
தன்மையார்'' என்று நன்மை
சார்ந்தவே தியரைச் சண்பை
மன்னனர் அருளிச் செய்த
மறைத்திரு ஆக்கூர் அவ்வூர்''

எனத் தம் பெரிய புராணத்தின்கண் மேற்கோளாக எடுத்து வழிமொழிந்திருத்தல் காணலாம். மேலும், இக்கோயிலைத் திருஞானசம்பந்தரின் திருப்பதிகம் ''தொல் கோயில்'' எனச் சுட்டிப் புகழ்ந்து வியந்து போற்றுதலால், இக்கோயிலின் பழமையும் பெருமையும் ஆகிய பலதிறச் சிறப்புக்களை உணருகின்றோம்.

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவரின் திருப்பெயர் **தான்தோன்றி**



சேக்கிழார் சுவாமிகள்

யப்பர். வடமொழியில் **சுயம்புநாதர்** என்பர். இறைவியாரின் திருப்பெயர் **வாள் நெடுங்கண்ணியம்மை**. வடமொழியில் **கட்க நேத்திரி** என வழங்கும்.

திருநாவுக்கரசர் திரு ஆக்கூர் பற்றிப் பாடிய திருத்தாண்டகத் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் "ஆக்கூர்த் தான்தோன்றி அப்பனாரே" என அருளிச் செய்துள்ளார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் இருவருமே திருவாக்கூர் இறைவனைத் "தான்தோன்றி" எனக் குறிப்பிட்டுள்ள சிறப்பு அறிந்து மகிழத்தக்கது.

### கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயிலில் ஆறு கல்வெட்டுக்கள் காணப்பெற்றுள்ளன. அவைகள் பல்லவ மன்னனாகிய கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும், சோழ மன்னர்களான இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1171-1178) திரிபுவன சக்கரவர்த்தி இராசராச தேவன் (கி. பி. 1148-1171) காலத்திலும், விசயநகர பரம்பரையில் கிருஷ்ணதேவராயர் காலத்திலும் பொறிக்கப்பெற்றவையாகும்.

ஆக்கூர் "இராசேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம்" என்பதனைச் சார்ந்திருந்தது; ஊர் அலுவல்களைப் பெருங்குடி மக்கள் கவனித்து வந்தனர்; இவர்கள் "கூட்டப் பெருமக்கள்" என வழங்கப்பெற்றனர்; இவ்வூர்க் கோயிலிலுள்ள சிவபெருமானுக்குத் "தான்தோன்றி மாடம் உடையார்" எனப் பெயர் வழங்கியது.

இத்திருக்கோயிலில் வைகாசி மாதத்தில் திருவிழா நடந்து வந்தது; விழா முடிவில் பெருமான் தீர்த்தம் ஆடுவதற்குக் காவிரியாற்றிற்கு எழுந்தருளுவர்; இங்ஙனம் எழுந்தருளுவதற்குப் பெருவழி இன்மையால், அதனைப் புதிதாக அமைக்க வேண்டும் என்று கும்ப ஞாயிறு முதல் ஊர்க் காரியங்களைக் கவனிக்கும் கூட்டப் பெருமக்கள் ஏற்பாடு செய்தனர்.

அழகிய பல்லவர் அரையராகிய வீரப் பிரதாபர், ஹொய்சலர்களைச் சிறையில் அடைத்தும், பாண்டிய மன்னரிடம் கப்பம் வாங்கியும், சோழநாட்டிற் பாடல் பெற்ற பல தலங்களை வணங்கி அவைகளுக்கு இறையிலி நிலங்கள் அளித்தும், பழுதுற்ற கோயில்களைப் புதுப்பித்தும் வந்தார். மேலும், அவர் ஜெயங்கொண்ட சோழவள நாட்டில் ஓர் ஊரில் தங்கியிருந்தபோது, வரி மிகுதியால் துன்பப் பட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு வரிகளைக் குறைத்து, உழவுதொழில் பெருகச் செய்தார்.

இத்தகைய பல செய்திகள், இக் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன.

### சிறப்புலி நாயனார் :

இத்தலத்தில் அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவரான **சிறப்புலி நாயனார்** திருவவதாரம் செய்து வாழ்ந்திருந்தார். அவர் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். சிவபிரானுக்கும் சிவனடியார்க்கும் திருத்தொண்டு புரிந்துவந்த சீலர். ஈகைத் திறத்தினிற் சிறந்த நீரார். சிவனடியார்கள் அணைந்தால், அவர்களின் திருவடிகளை



சிறப்புலி நாயனார்

வணங்கி, இன்சொற்கள் கூறி வரவேற்று, நாளும் நல்லமுதம் ஊட்டி, நயந்தன எல்லாம் நல்கும் இயல்புடையவராக அவர் ஒழுகிவந்தார். திருவைந்தெழுத்தினை முறைப்படி ஓதி, முத்தீச் செல்வம் பேணி, வேள்விகள் பலவும் சிவபிரானின் திருவடிப் பத்திமையோடு சிறக்கச் செய்து மகிழ்வது, அவர் தம் சிறந்த தொண்டாக விளங்கியது. இங்ஙனம் சிவபக்தி சிவனடியார் பக்திகளிற் சிறந்து திகழ்ந்து வீடுபேறு எய்திய சிறப்புலி நாயனார், வாழ்ந்தருளிய மாண்பின் மிக்கது திருஆக்கூர்.

## முடிவுரை

திரு ஆக்கூரின் சிறப்பினைச் சேக்கிழார் சுவாமிகள், தமது பெரிய புராணத்தில் பின்வருமாறு புகழ்ந்து போற்றுகின்றார்.

''தூமலர்ச் சோலை தோறும்
சுடர்தொடு மாடம் தோறும்
மாமழை முழக்கம் தாழ,
மறையொலி முழக்கம் ஓங்கும்;
பூமலி மறுகில் இட்ட
புகையகில் தூபம் தாழ,
ஓமநல் வேள்விச் சாலை
ஆகுதித் தூபம் ஓங்கும்''

இத்தகைய சிறப்பும் பெருமையும் மிக்க திரு ஆக்கூர்த்தலத்தின், ''தான் தோன்றி மாடம்'' என்னும் கோயிலின் படங்கள் சில, இவ்விதழில் தரப்பட்டுள்ளன.

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

**சென்னை, மயிலாப்பூர்:**—கபாலீசுவரர் கோயிலில் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சிச் சொற்பொழிவு.

**ஆடுதுறை:**—அபராத ரட்சகர் கோயிலில் வாரவழிபாடு ஆரம்பவிழா.

**இராமநாதபுரம்:**—தாயுமானசுவாமி கோயிலில், தாயுமானசுவாமிகளின் குருபூஜை விழா.

**ஆத்தூர்:**—கோட்டை காயநிர்மலேசுவரர் கோயிலில் மார்கழித் திருவாதிரை விழா.

**ஆத்தூர்:**—பிரசன்ன வேங்கடேசுவரசுவாமி கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா.

**குளித்தலை:**—நீலமேகப்பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா.

**மதுரை:**—கூடலழகர் கோயிலில் பகல்பத்து விழா.

**வழுவூர்:**—வீரட்டேசுவரசுவாமி கோயிலில் திருவாதிரை உற்சவம்.

**தர்மபுரிகோட்டை:**—பரவாசுதேவ சுவாமி, மல்லிகார்ச்சுன சுவாமி கோயிலில் திருப்பாவைப் பாராயணம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாராயணம்.

**மன்னார்குடி:**—இராஜகோபாலசுவாமி கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா.

**நாகப்பட்டினம்:**—நவநீதகிருஷ்ணசுவாமி கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா.

**பாரியூர்:**—கொண்டத்துக்காளியம்மன் கோயிலில் இரதோற்சவம்.

**வீரவநல்லூர்:**—பூமிநாதர் கோயிலில் திருவாதிரை விழா.

**திருப்பூர்:**—சற்குருநாதன் முருகப்பெருமான் கோயிலில் குருபூஜை விழா.

**பவானி:**—ஆதிகேசவப்பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா.

**செட்டிகுளம்:**—ஏகாம்பரேசுவரர் கோயிலில் தைப்பூச விழா.

**கும்பகோணம்:**—நாகேசுவரசுவாமி கோயிலில் மார்கழித் திருவாதிரை விழா.

**பூவாளூர்:**—திருமூலநாதசுவாமி கோயிலில் ஆருத்ரா தரிசன விழா.

**பூவாளூர்:**—திருமூலநாதசுவாமி கோயிலில் நான்காவது ஆண்டு வாரவழிபாட்டு விழா.


**தாராபுரம்:**—அகத்திசுவரர் கோயிலில் திருவாதிரை விழா.

**தென்கரை:**—நவநீதகிருஷ்ணசுவாமி கோயிலில் இராப்பத்து உற்சவம்.

**அரிகேசவநல்லூர்:**—அரியநாதசுவாமி கோயிலில் ஆதிரைத் திருவிழா.

நிதி கிழக்குப் பார்த்துள்ளது. கோயிலுக்கு அருகில் திருக்குளம் இருக்கின்றது. சுவாமி யின் பெயர் **கொழுந்தீசுவரர்.** இதனை "கோட் டூர் நற்கொழுந்தே" என்று திருஞானசம் பந்தர் தமது திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் குறிப்பிட்டிருத்தல் காணலாம். அம்பிகையின் பெயர் **தேன்மொழிப்பாவை.** இதனையும் திருஞானசம்பந்தர்,

"பந்துலாவிரற் பவளவாய்த் தேன்மொழிப்
பாவையோ டுருவாரும்
கொந்துலாமலர் விரிபொழிற் கோட்டூர்நற்
கொழுந்தே..."



**அர்த்தநாரீசுவரர்**

எனவரும் திருக்கடைக்காப்பில் குறிப்பிட் டருளுகின்றார். 'தேன்மொழிப்பாவை' என் னும் தொடரையே, பிற்காலத்தார் **மதுரவசனி** என மொழிபெயர்த்து வழங்குவாராயினர்.

## கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் 23 கல்வெட்டுக்கள் படி யெடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற் பெரும் பாலானவை சோழர்களுடையன. முதலாம் இராச இராச சோழன் (கி. பி. 985—1014) காலத்தில், இவ்வூர் "அருண்மொழித்தேவ வளநாட்டு நென்மலி நாட்டிலுள்ள கோட் டூர்" எனவும், முதற் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070—1120) காலத்தில் "இராசேந் திர சோழவளநாட்டு நென்மலி நாட்டிலுள்ள கோட்டூர்" எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

மூன்றும் குலோத்துங்க சோழன் (கி. பி. 1170-1216) ஆட்சியில் இரண்டாம் ஆண்டில் "குலோத்துங்க சோழ வளநாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் பல்லவரையன் களப்பாளராயர்" ஒரு நுந்தா விளக்கினுக்குப் பொருள் உதவியுள்ளார். இவ்வாறே "குன் றத்தூர்ச் சேக்கிழான் பாலறுவாயன் களப் பாளராயன்" என்ற ஒரு பெருமகனார் பெய ரும் கல்வெட்டில் காணப்படுகின்றது. இப் பெயர்கள் பெரியபுராணம் இயற்றிய ஆசிரியர் **சேக்கிழார்** பெருமானையும், அவரது உடன் பிறந்த தம்பியாகிய **பாலறுவாயர்** என்பவரை யுமே குறிப்பதாக, அறிஞர்கள் கருதுகின் றனர்.

இத்திருக்கோயிலில் திருஞானம் பெற்ற பிள்ளையாரை எழுந்தருளுவித்தவர், "**நாகமங் கலமுடையான்** அம்பலம் கோயில் கொண்ட டவர்" என்னும் வள்ளல் ஆவர்.

இராசேந்திரசோழ வளநாட்டு வெண் டாழை வேளிர்க் கூற்றத்துத் திருத்தருப் பூண்டியில், திருமாளிகைப் பிச்சர் என்ற திருமடத்துத் தலைவர் ஒருவர் திகழ்ந்திருந்த செய்தியும், மூன்றும் குலோத்துங்க சோழ னின் மூன்றும் ஆண்டுக் கல்வெட்டிற் காணப் படுகின்றது.

## தேவாரத் திருமொழி


கோட்டூர்க் கொழுந்தீசுவரர், தம்மை விடியற்காலையில் துயில் நீத்து "**கோட்டூர் நற் கொழுந்தே**" என்று எழுந்து தொழுபவர்க

ளுக்கு, எல்லா வகையான நலங்களையும் அருளிச் செய்வர் எனத் திருஞானசம்பந்தர் தம் தேவாரத் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் வற்புறுத்தி அருளுகின்றார். இத்தேவாரத் திருமொழியினை யுணர்ந்து, துயிலெழும் போதே இறைவனை நினைந்து தொழுது, நாம் உய்ய முயலுவோமாக!


''கொங்கையார்குழாம் குணலைசெய் கோட்டூர்நற்
  கொழுந்தேஎன் றெழுவார்கள்
சங்கையொன்றிலர் ஆகிச்சங் கரன்திரு
  வருள்பெறல் எளிதாமே.'' —சம்பந்தர்

தெள்ளும்நீ றவன்நீறு என்னுடல் விரும்பும்!
  செவியவன் அறிவுநூல் கேட்கும்!
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய்! கண்கள்
  விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்!
சிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
  கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணிஅம் பலத்துள்நின் றுடும்
  மைந்தனே! என்னும் என் மனனே!

—கருவூர்த் தேவர்



அரம்பை



பிரதோஷமூர்த்தி

# திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமபுரம்.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## தொண்டை நாட்டுச் செலவு

நாயனார் அண்ணாமலைப் பெருமானைப் பெரிதும் வணங்கவேண்டும் என்னும் பேரன்பினால் பலநாள் தங்கித் திருப்பதிகங்கள் அருளிச்செய்து திருத்தொண்டு புரிந்திருந்த பின், பிற தலங்களையும் வணங்குதல் வேண்டும் என்னும் பெருவிருப்பத்தால் தொண்டை நாட்டை நோக்கிப் புறப்பட்டுக் காடு, மலை, கான்யாறு, வயல்சூழ்ந்த ஊர்கள் முதலியவற்றை யெல்லாங் கடந்து சென்று, தொண்டை நாட்டில் திருவோத்தூரை அடைந்தருளினார்.

## திருவோத்தூரை வணங்குதல்

பின்பு, அங்குள்ள திருக்கோயிலை அடைந்து, வலம்வந்து, திருமுன்பில் வீழ்ந்து வணங்கி, அன்பின் மிகுதியால் கண்ணில் நீர்பெருக, பெருமானுக்குத் திருத்தாண்டகம் முதலிய நல்ல சொன்மாலைகளைச் சாத்தித் திருத்தொண்டு புரிந்து அங்கே எழுந்தருளியிருந்தார். இங்கும் சேக்கிழார்,

"முக்கட் பிரானை விரும்புமொழித்
திருத்தாண் டகங்கள் முதலாகத்
தக்க மொழிமா லைகள்சாத்தி"

எனத் திருத்தாண்டகம் என்பதைக் குறிப்பிட்டு அருளிச்செய்திருத்தலால், இத்தலத்தில் நாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்களுள் திருத்தாண்டகத் திருப்பதிகமேனும் அவருக்குக் கிடைத்திருத்தல் வேண்டுமென உறுதியாக எண்ண இடம் உண்டு. ஆயினும், இத்திருத்தலத்திற்கு நாயனாரது திருப்பாடலாக ஒன்றேனும் இப்பொழுது கிடைத்திலது.

## கச்சியம் பதியில் எழுந்தருளுதல்

திருவோத்தூரை வணங்கிய பின்னர், நாயனார், தொண்டைநாட்டுத் தலங்கள் பலவற்றை வணங்கி, அந்நாட்டின் தலைநகராகிய, 'அம்மை அன்பினால் எழுந்த அச்சங் காரணமாகத் தழுவ, அதற்கு உள்ளமேயன்றி உடலுங்குழைந்த பெருமான் எழுந்தருளியிருக்குந் திவ்விய திருத்தலம்' என்று உலகம் முழுவதும் சிறந்தெடுத்துச் சொல்லிப் போற்றுகின்ற காஞ்சியம்பதியை அணுகியருளினார்.

காஞ்சி நகரமக்கள், 'உலகம் உய்தற் பொருட்டுத் திருவதிகைப் பெருமான் சூலைநோய் கொடுத்து ஆட்கொள்ளப்பெற்ற திருநாவுக்கரசர் இவண் எழுந்தருளிவரப் பெற்றோம்' என்று மகிழ்ச்சிமீதூரப் பெற்றவர்களாய், தெருக்களில் தோரணங்கள் கட்டி, வாழை, கமுகு முதலியன நாட்டி, நிறைகுடங்கள் வைத்து, விளக்குக்கள் ஏற்றி, பூப்பந்தர்கள் அமைத்து, இடபக் கொடிகளை ஆங்காங்கு உயர்த்தி நன்கு அலங்கரித்து நாயனாரை எதிர்கொண்டார்கள். அப்பொழுது அடியவர் பலர் திரள்திரளாக இருந்தனர். அவர்கள், திருவீதிப் பணிசெய்யும் திருவலகு, உழவாரப்படை முதலியவைகளை ஏந்திவந்து நாயனாரை வணங்கினார்கள். தம்மை எதிர்கொண்டு வணங்கிய அடியார்களை நாயனார் தாமும் வணங்கி, அவர்கள் புடைசூழ்ந்து வரத் திருவீதியினுட் சென்று, திருவேகம்பநாதர் திருக்கோயிலை அடைந்து, திருவாயிலை, விழுந்து வணங்கினார்.

பின்னர் எழுந்து சென்று திருமுன்பையடைந்து, திருமாளிகையை வலமாக வந்து, எம்பெருமாட்டி தழுவக்குழைந்த அழகிய திருமேனியோடு எமக்கெல்லாம் பெருவாழ்வாய் வீற்றிருந்தருளும் ஏகம்பப் பெருமானை நேரே கண்டு வணங்கி, அழியாத பேரன்பு பெருக்குற்றுப் பொங்க, கண்களில் அருவி போல நீர்மிகுந்து பொழிய, உடம்பெங்கும் மயிர்பொடிப்ப, என்பும் உருகப்பெற்று, கண் பெற்றபயன் கைகூடப் பெற்றவராய் மகிழ்ச்சி ததும்ப, அப்பெருமானை என்றும் நீங்காதவாறு தமது உள்ளத்தே இறுகப் பதித்தவராய், அவ்வனுபவத்தைக் காந்தாரப்

பண் திருப்பதிகத்தினால் எடுத்து மொழிந்து போற்றினார். அதன் முதற்றிருப்பாடல் வருமாறு :

"கரவாடும் வன்னெஞ்சர்க்
கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை
விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ
அங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை
என்மனத்தே வைத்தேனே"

இதனுள், கரவு சிறிதுமில்லாது தனக்கே தொண்டுபூண்டொழிந்தமை பற்றித் தமக்கு மிக எளியனாய்த் தமது உள்ளத்தில் இறைவன் தானே வந்து கலந்தருளிப் பேரின்பஞ் செய்த தமது அரிய அனுபவத்தை அருளிச் செய்வார், அது மாட்டாத பிறருக்கு அவன் மிக அரியனாதலை முன்னர் அருளிச்செய்தார். ஆகவே, எத்துணையும் அரியனாய அவன் தமக்கு எத்துணையும் எளியனாய் வந்து இன்பம் அருளிய அதனைத் தாம் எவ்வாறு மறத்தல் கூடும் என்பதை இறுதிக்கண் அருளிச் செய்தார். இவ்வாறே இத்திருப்பதிகம் முழுவதும் அப்பெருமானைத் தாம் என்றும் எப்பொழுதும் எவ்வாற்றானும் மறவாதொழிந்த தன்மையை நாயனார் அருளிச் செய்தமை யறிக.

இங்ஙனம் போற்றிய பின் நாயனார், புறத்தே போந்தருளிக் கைத்திருத் தொண்டாகிய உழவாரப் பணியை அளவற்ற பேரன்போடு செய்தார். அங்ஙனஞ் செய்யுங்கால், 'திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை' ஆகிய எல்லாவகையிலும் திருப்பதிகங்களை அருளிச் செய்து கொண்டே செய்தருளினார். அவற்றுள், திருநேரிசைத் திருப்பதிகம், "நம்பனை நகரம் மூன்றும்" எனத் தொடங்குவது. அதன் இரண்டாவது திருப்பாடலுள் இவ்வுடலின் இழிபினை நாயனார் நகைச்சுவைபட அருளிச்செய்துள்ளார். அது,

"ஒருமுழம் உள்ள குட்டம்
ஒன்பது துறை யுடைத்தாய்
அரைமுழம் அதனகலம்
அதனில்வாழ் முதலை ஐந்து
பெருமுழை வாய்தல பற்றிக்
கிடந்துநான் பிதற்று கின்றேன்
கருமுகில் தவழு மாடக்
கச்சியே கம்பனீரே"

என்பது. இதனுள், 'குட்டம்' என்றது கைகால்கள் ஒழிந்த பகுதியை. 'ஒருமுழம் அரை முழம்' என்றது, சிறுமை கூறியவாறு. ஒரு முழ நீளமும் அரை முழ அகலமுமே உடைய ஒரு குட்டத்துள் ஒரு முதலை தானும் இருத்தல் இயலாது; அங்ஙனமாக, அதனுள் ஐந்து முதலைகள் வாழ்தல் அதிசயம் என வியந்தபடி.

'முதலை'என்றது ஐம்பொறிகளை. அவை உயிரின் அறிவினை ஈர்க்கும் வலிமை உடைமைதெளிவிப்பாராய் அவற்றை முதலையாக உருவகஞ் செய்கின்றவர் அதற்கேற்ப உடம்பினைக் குட்டமாகவும், வாய் முதலிய ஒன்பது துவாரங்களையும் ஒன்பது துறைகளாகவும் அருளிச் செய்தார். பெருமுழை வாய்தல் - பெரிய மலைமுழைஞ்சு போலும் வாயில்; என்றது, வாயினை. அது வழியாகவே யான் பயனில் சொற்கள் பலவற்றை இடையறாது சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்றதாம்.

இன்னும் அதனுள், "ஏகம்ப மேவினாரைத் தலையினால் வணங்குவார்கள் தலைவர்க்குந் தலைவர் தாமே" "ஏகம்ப மேவினாரைக் கையினாற் றொழவல் லார்க்குக் கடுவினை களைய லாமே" "ஏகம்ப மேவினார்க்கு வருத்தி நின் றடிமை செய்வார் வல்வினை மாயு மன்றே" என்னும் அரிய பொருள்கள் வெளியாகியுள்ளன.

"ஏகம்ப மேவி னான்றன் நடமுடை ஆடல் காண ஞாலந்தான் உய்ந்த வாறே" என இறைவனது திருக்கூத்தின் பெருமையை நாயனார் இத் திருப்பதிகத்துள் சிறந்தெடுத் தோதியருளினமையால், இத் தலமும், பஞ்ச சபைகள் போல்வ தொரு சபையாக வழங்கப்படாவிடினும், இறைவனது திருக்கூத்துச் சிறந்து நிற்பதொரு தலமாதல் பெறப்படும். இங்கு ஏனைத் தலங்கள் போலாது கூத்தப் பெருமான் ஒரு தனிப் பெருங்கோயிலில் எழுந்தருளியிருத்தலும்,இங் நடனம் 'காப்பு நடனம்' என இதன் வரலாறு காஞ்சிப் புராணத்துள் விரித்துப் பேசப் படுதலும், திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "அந்தம் இல்குணத்தாரவர் போற்ற அணங்கினோடாடல்புரி எந்தை மேவிய ஏகம்பம்" எனவும், "எழில்கொள் கச்சி நகர் ஏகம்பத்து அண்ணலார் ஆடுகின்ற அலங்காரமே" எனவும் அருளிச் செய்தலும் இதனை இனிது விளக்கும்.

இனித் திருவிருத்தத் திருப்பதிகம், "ஓதுவித்தாய் முன்" எனத் தொடங்குவது. இதன் முதற்றிருப் பாடலில், நாயனார் தம்மை இறைவன் செய்வித்த செயலை எல்லாம் நினைவு கூர்ந்து மகிழ்ந்தருளுகின்றார். அது,

"ஓதுவித் தாய்முன்; அறவுரை
காட்டி அமணரொடே
காதுவித் தாய்,கட்ட நோய்பிணி
தீர்த்தாய்; கலந்தருளிப்
போதுவித் தாய்;நின் பணிபிழைக்
கிற்புளியம் வளாராய்
மோதுவிப் பாய்;உகப் பாய்;முனிவாய்
கச்சி யேகம்பனே"

என்பது. ஓதுவித்தது, சமய நூல்களை எனவும்; அமணரோடு கூடித்தலைமயிரைப் பறித்துக் கொண்டும், பட்டினியாகியும், வெயிலிற் சுடுபாறையிற் கிடந்தும், உடையின்றித் திரிந்தும் பேரிடர்ப்படச் செய்தது, அறவுரையான் மயக்கி எனவும்; நோயைக் கொடுத்து அவரினின்றும் பிரித்து மீட்டு நோயைத் தீர்த்தது அருள் கூர்ந்து எனவும்; கூறியவாறறிக. காதுவித்தல் என்றது, கொன்றாற் போலும் பேரிடர்ப் படச் செய்வித்தலை, "கொல்லப் பயன்படுங் கீழ்" (குறள் 1078.) என்றாற் போல. "கட்ட நோய்பிணி தீர்த்தாய்" என்பது, "போதுவித்தாய்" என்பதன் பின் இயையும். அருளி - அருள்கூர்ந்து. "கலந்து அருளி" என்றது, முன்பு அயலார் போல நின்று மறக் கருணை செய்தாற் போலன்றி, அப்பனும் அம்மையும் ஐயனும் அன்புடைய மாமனும் மாமியும் ஒப்புடைய மாதரும்போல நின்று அறக்கருணை செய்தமையை. இங்ஙனம் இறைவன் தம்மைச் செய்வித்த செயல்களை எல்லாம் வகுத்துரைத்து, 'இதனால் நின்னைப் பணியும் நெறியே நன்னெறி எனத் தெளியாதவர்களை முனிந்து, தலைவன் ஒருவன் குற்றம் செய்த தன் அடிமையைத் தண்டலாளரைக்கொண்டு புளியம் வளாரால் மோதுவிப்பதுபோல ஆதியான்மிகம் முதலிய மூவகைத் துன்பத்திற்குள்ளாக்கி, அதனைத் தெளிந்த பின்னர் அம்முனிவு தீர்ந்து திருவுளம் இரங்கி, "ஏமாப்போம் பிணியறியோம்......இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என அவர் மகிழுமாறு அருள்புரிவாய் என்பது தெளிவாகின்றது' என அருளிச் செய்தார் என்க. "தீர்த்தாய்" என்பதன் பின், 'ஆகவே' என்பது வருவித்து, "முனிவாய்" என்பதை, "பிழைக்கின்" என்பதன் பின் வைத்துப் பொருள் காண்க.

இன்னும் அமணரொடு கூட்டித் தம்மைத் துன்புறுவித்தமையை இரண்டாவது திருப்பாடலினும்,

"கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு
வித்தென்னைக் கோகுசெய்தாய்"

என்றருளிச் செய்தார்.

கொத்தை - குருடன். மூங்கர் - ஊமையர். கோகு - கழுதை; அஃது அதுபோலும் இழிவினைக் குறித்து நின்றது. குருடன் ஒருவனுக்கு ஊமையர் பலர்கூடி வழிகாட்டினாற் போலத் தமக்கு அமணர்கள் மெய்ந்நெறி காட்டினர் என்பதாம். இருமுது குரவரும் கல்வி ஆசிரியரும் கற்பித்த நெறியை நெறியெனத் தெளியாது கைவிட்டு 'நெறிதான் இன்னது' என அறியாது, அதனை அறிவிப்பாரை நாடி நின்றமையின் தம்மைக் குருடராகவும், தாம் வேண்டிய தொன்றையே நெறியெனப்பற்றி, மெய்யுணர்ந்தார் சொல்லைக் கேளாதவராயும், கேளாமையின் நன்னெறியிது தீநெறியிதுவென அவற்றது இயல்பினை உணரவும் உணர்ந்து உரைக்கவும் மாட்டாதவராயும் நின்றமையின், அமணரைத் தாம் கண்ணிற் கண்ட தொன்றையே வழியெனக் கொண்டு 'இவ்வழி இன்ன தன்மைத்து' என அறிந்தார் சொல்லுஞ் சொல்லைக் கேட்டுணரவும், உணர்ந்து உரைக்கவும் மாட்டாது, தாம் கண்ட வழியையே பிறருக்கும் வழியாகத் தமக்கு இயன்ற வகையில் காட்ட முயலும் ஊமையராகவும் அருளிச் செய்தார். தருமை ஆதீனப் பதிப்பில், "வழிகாட்டு வித்தென்ன" எனப் பாடங் கொள்ளப் பட்டுளது.

மற்றும், "நுன் கழலடி போற்றாக் கயவர்நெஞ்சிற் குய்யம் பெய்தாய்"

(குய்யம் - வஞ்சனை; கரவு; தீக்குணங்கள்.) எனவும் அதன்கண் அருளிச்செய்யப் பட்டது.

ஐந்தாவது திருப்பாடலில், சிவபிரான், தேவர் முப்பத்து மூவராலும், மற்றும் பிரமன் முதலியோராலும் அறிதற்கரியவன் என்பது உணர்த்தப்பட்டது.

ஆறாவது திருப்பாடலில், தாயாரது வயிற்றில்தாம் கருவாய்ப் புகுந்தது முதலாகவே சிவபிரானது திருவடியை அடையத்

தாம் அவாமிக் குடையராய் இருந்தமையை யும், அங்ஙனம் இருந்தும் அதுகாறும் அந் நிலை முழுவதூஉம் எய்தப்பெறாது நின்றமை யையும் தெளிவாக உரைத்தருளினார். பிற இடங்களிலும் இவ்வாறருளிச் செய்த திருப் பாடல்கள் சில உள. இவற்றால், "சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன் — நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்நாமம்என் நாவில் மறந்தறியேன்" என முதற்றிருப்பதிகத்துள் அருளிச் செய்தது, தாம் இயல்பாகவே இளமைதொட்டு மேற்கொண்டு செய்துவந்த செயல்களைக் குறித்ததே என்பது பெறப் படும்.

ஏழாவது திருப்பாடலில் தேவர் கூட்ட மும், முனிவர் கூட்டமும் சிவபிரானைக் காணு தற்குச் செவ்வி பெறாது வாயிலில் காத்து நின்று வருந்துதல் குறிப்பிடப்பட்டது.

எட்டாவது திருப்பாடலில், அடியவரது வருத்தத்தை நீக்கியருளுமாறு இறைவனை வேண்டியுள்ளார்.

ஒன்பதாவது திருப்பாடலில், இறைவன் தம்மை ஐந்து பேர்க்கு ஒற்றிவைத்ததாகவும், பின்பு மீட்டுக்கொண்டதாகவும் அருளிச் செய்து, தமக்கு அவன் பந்தமும் வீடுமாய் நின்றமையைக் குறிப்பித்தருளினார், இதனுள் 'குன்று' என்பது 'சோன்று' என நின்றது.

பத்தாவது திருப்பாடலுள் 'திருமாலும் பிரமனும் மற்றுந் தேவரும் என்ற இவர் தாமே நின்னை வணங்குதற்குச் சமயங் கிட்டாது வாயிலில் நிற்கும்பொழுது; அவர் கட்கு இப்பால் உள்ள நாங்கள் உன்னை எவ் வாறு வந்து வணங்குவது!' எனக் குறையிரந் தருளினார்.

இங்ஙனம் இத்திருப்பதிகம் அருமை வாய்ந்த ஒரு திருப்பதிகமாய் விளங்குகின் றது. "கச்சி யேகம்பனே" என்று முடியும் பிற்காலக் கட்டளைக் கலித்துறை நூல்கட் கெல்லாம் இத்திருப்பதிகமே முதலாய் நிற்ப தும் ஓர்க.

இனித் திருக்குறுந்தொகையாய் உள்ள திருப்பதிகங்கள் இரண்டு; அவை; "பண்டு செய்த பழவினை யின்பயன்" எனவும், "பூமே லானும் பூமகள் கேள்வனும்" எனவும் தொடங் குவன. அவைதாமும் மிக்க அருமைப்பா டுடையனவாய் விளங்குகின்றன.

முதற்றிருக்குறுந்தொகையின் முதற் றிருப்பாடலில், 'முன்னை வினைவந்து துன்ப மாய் வருத்துதலைப் பலகாலும் அனுபவித் தறிந்தும் (இன்று நன்றாகும்; நாளை நன்றா கும் என்னும் நினைப்பினாலே) மகிழ்ச்சியுறு கின்றாய், மனமே! என்றுதான் நீ தெளிவுறு வது? நீ துன்பம் நீங்கி இன்புற நினைப்பை யாயின், உன்னை, 'இவன் திருவேகம்பப் பெருமானது அடியவன்' என்று பலருங் கூறு மாறு அப்பெருமானுக்குத் தொண்டுபூண்டு உழலக் கடவாய்' என அறிவுறுத்தருளினார்.

இன்னும், 'ஏகம்பநாதனை அடியவர்கள் விரும்பித் தொழ, உமையம்மை என்றும் வழி பட, அறிவில்லாதவர் அவனை யடையாது, வாளா பொழுது கழிப்பர்' எனவும்,

"நமை ஆளும் அவன்"

எனவும்,

'எனக்கு அமுதமும், சுற்றமும்,
மககளும் ஆயினான்'

எனவும்,

'ஐவர்தம் ஆப்பை(தளையை) அவிழ்த்து, நோயும் வினையும் வாராது அருள்நோக்கு நோக்கி நம்மைக் காக்கும் நாயகன் கச்சி ஏகம்பன்' எனவும்,

'கச்சி ஏகம்பன், பண்ணில் ஓசை; பழத் தினில் இன்சுவை; பெண் என்றோ ஆண் என்றோ சொல்ல ஒண்ணாதவன்; நிறம் இல் லாதவன்; வடிவம் இல்லாதவன்; கண்ணில் உள்ள கருமணியை ஒத்தவன்' எனவும்,

'உலகீர், மாதர் வடிவில் மயங்கி அவர் பால் மனம் வையன்மின்; ஏனெனில், அவர் தீராத் துயரைத்தருவர். கச்சியிலுள்ள எம்அடிகள்பால் மனம் வைம்மின்; ஏனெ னில், அவர் தீராத் துயர்முழுதையுந் தீர்த் தருளுவர்' எனவும் அருளிச்செய்தார்.

"பூமேலானும்" என்னும் திருக்குறுந் தொகை இரண்டாவதாய்க் காணப்படினும், அது, நாயனார் திருவேகம்ப நாதரைத் தொழ விரும்பிக் காஞ்சியை நோக்கிச் சென்ற பொழுது அருளிச்செய்ததாகக் கருத இடந் தருகின்றது. சேக்கிழார் இவ்வாறு எடுத் தோதவில்லை. எனினும், எல்லாவற்றையும் எடுத்தோதியே தெளிவித்தல் வேண்டும் எனக் கொள்வதும் பொருத்தம் ஆகாது.

(தொடரும்)

# நம்பியாரூரர்

[வித்துவான் திரு. மு. அருணாசலம் பிள்ளை, தமிழ்த்துணைப் பேராசிரியர்]
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைத் தீண்டி வழிவழியாக வழிபாடியற்றும் ஆதி சைவர் மரபில் தோன்றியவர் நம்பியாரூரர். இவர் சிவபிரானால் வலிந்து தடுத்து ஆட்கொள்ளப் பெற்றவர்; அங்ஙனம் ஆட்கொள்ளப் பெற்ற நிலையில் 'நீ என்னைப் பாடுக; தமிழிற் பாடுக; அதுவே நீ எனக்குச் செய்யும் வழிபாடு; பித்தன் எனத் தொடங்கிப் பாடுக' என்று இறைவன் கட்டளையிட்டவாறே 'பித்தா பிறை சூடி,' என்னும் பெரிதாம் திருப்பதிகத்தை முதலிற் பாடினார். நம் சைவ சமய குரவருள் ஒருவராகிய இவர் பாடியருளிய திருப்பதிகங்களின் தொகுப்பு, சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஏழாந் திருமுறையாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. இவ்வேழாம் திருமுறைப் பதிகங்களுள் ஒன்றாகிய திருத்தொண்டத் தொகையும், திருவாரூர்த் தியாகபெருமான் எடுத்துக்கொடுத்த 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்', என்ற அடியினை முதலாகக் கொண்டு பாடப் பெற்றதாகும். இத் திருத்தொண்டத் தொகையே, நம்பியாண்டார் நம்பிகள் வகுத்து இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதிக்கும், சேக்கிழார் பெருமான் விரித்துப் பாடியருளிய திருத்தொண்டர் புராணத்திற்கும் முதல் நூலாய் அமைந்தது. இம் முதல் நூலைப் போலவே இதன் வழிவந்த திருத்தொண்டர் புராணமும், தில்லைக் கூத்தப் பிரான் வான் நிழலாய் நின்று வழங்கிய 'உலகெலாம்' என்ற மங்கலத் தொடரை முதலாகக்கொண்டு பாடப்பெற்ற செய்தி, உலகம் அறிந்த தொன்றாகும். எனவே, ஏழாந் திருமுறையின் தொடக்கமும், அத் திருமுறையின் கண் அடங்கிய திருத்தொண்டத் தொகையும், அதன் விரி நூலாகிய பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணமும், முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் உதவியருளிய முதலில் இருந்து, முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து முதிர்ந்து விளைந்த விளைவுகளே யென்பது நினைந்து நினைந்து போற்றற்குரியதாம்.

பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும் மெய்யடியார்களின் அருஞ்செயல் திறங்களைத் தெரிந்து தெளிந்து, சிவநெறியாகிய செந்நெறியில் ஒழுகி, உலகம் உய்திபெறற் பொருட்டுத் திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்தவர் நம்பியாரூரர் ஆதலின், அவரது வரலாற்றினையே முதலும் முடிவுமாகக் கொண்டும், ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் அவர்க்கு வணக்கங் கூறியும், விரிநூலாகிய திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் இயற்றுவாராயினர். எனவே, இத் திருத்தொண்டர் புராணம், திருக் கைலையிலிருந்து நம்பியாரூரரின் முன்னைய வரலாற்றில் தொடங்கி, மீண்டும் அவர் கயிலைபோய்ச் சேர்ந்ததுடன் முற்றுப் பெறுவதாயிற்று. இக் கருத்துப்பற்றியே நம்பியாரூரரின் தோற்றச் சிறப்புக் கூறுமிடத்து, 'தீதகன் றுலகம் உய்யத் திருஅவ தாரம் செய்தார்' என்று சேக்கிழார் பாராட்டிக் கூறினர். இத் திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப் பெற்றிருப்பது யாவரும் அறிந்ததே.

நம்பியாரூரர் பாடியருளிய தேவாரப் பாடல்கள் எல்லாம் சொற்சுவையும், பொருட்பொலிவும், மெய்ந்நூற் கருத்துக்களும், இயற்கை யெழிலும், உலகியல் வழக்கங்களும், அறநெறிகளும், பத்திச்சுவையும் செறிந்து, கற்பார்க்குக் கழிபேருவகை பயப்பனவா யுள்ளன. ஆகலின், இவர் பாடல் இனிமையில் ஈடுபாடுற்ற இறைவன் இவரைத் தமக்குத் தோழமையாக ஏற்றுக்கொண்டார். இதனால் இவர்க்குத் 'தம்பிரான் தோழர்' என்ற சிறப்புப் பெயரும் வழங்குவதாயிற்று. உள்ளங் கலந்த நண்புடையார் இருவரில் ஒருவர் மற்றொருவர்க்குச் செய்யும் உதவிகள் அனைத்தையும், இவரைத் தோழனாக ஏற்றுக்கொண்ட

நாள்முதல் சிவபிரான் இவர்க்குச் செய்து வராயினர். இவர் தந்தையாராகிய சடையனுர் முயன்று இவர்க்குச் செய்து வைக்கத் தொடங்கிய திருமணம் நடைபெருதவாறு தடுத்து ஆட்கொண்டமையால், பரவையார், சங்கிலியார் என்னும் இருவரைத் தாமே முன்னின்று இவர்க்குத் திருமணம் செய்து வைத்தார்; இவர் எப்போதும் மணக்கோலத்துடன் இருக்கவும் பணித்தார்; இவர் நல்வாழ்வு நடாத்துதற்கு வேண்டும் பொன்னும் பொருளும் ஆடை அணிகலன்கள் முதலிய பிறவும் வழங்கினுர்; திருக் கோயில்கள் தோறும் சென்று வழிபாடு செய்து வருங்கால் இவர் பசியால் வருந்தும் இடங்களில் சோறு கொண்டு சென்று கொடுத்து உண்பித்தார்; தம்பால் மெய்யன்புடையவரும் பேரரசருமாகிய சேரமான் பெருமாளுடன் இவர்க்கு நட்புரிமை யுண்டாக்கி வைத்தார்; கணவன், மனைவியரிடையே நேர்ந்த ஊடல் தீர்க்கும் வாயிலாகவும் சென்று உதவினுர்; மீண்டும் கயிலைக்கு அழைக்குங்கால் வெள்ளை யானையை விடுத்து அதன்மேல் இவர்ந்து வரவும் செய்தார். எனவே, சிவபிரான் நட்பு முறையால் இவர்க்குச் செய்த உதவிகட்கு அளவேயில்லை என்று கூறலாம்.

பிறர் எவர்க்கும் கிடைத்தற்கரிய 'தம்பிரான் தோழர்' என்னும் பெரும்பேறு நம்பியாரூரர்க்குக் கிடைத்த அருமைப் பாட்டினையும், அதனுல் அவர் பெற்ற சிறப்புக்களையும் எண்ணி வியந்த புலவர் பெருமானுகிய சிவப்பிரகாசர் கூறியிருப்பவை அறியற்பாலன. [1]"ஞான வடிவாய் விளங்குபவரும் நெற்றிக் கண்ணுடையவரும் ஆகிய சிவபிரான், கல்வியினும் செல்வத்தினும் சிறந்தார் இருவரைத் தமக்கு நண்பராகக் கொள்ளுதல் வேண்டுமெனக் கருதி, செல்வத்தில் மேம்பட்ட குபேரனைத் தோழனுகக் கொண்டு, பின்னர்த் தனக்கு நிகரான கல்வியுடையார் ஒருவர் எளிதின் அகப்படாமையால் நெடுங்காலங் காத்திருந்து உன்னைத் தோழமையாகக் கொண்டான்' என்றும், [1]"நின்னைத் தடுத்தாட்கொண்டும், நின் மனைவியர்பால் நினக்காகத் தூது சென்றும், மனைதோறும் சென்று உணவு வாங்கி வந்து உண்பித்து நின் பசி தீர்த்தும் வருந்தியமையால் சிவபிரான் நின்பாட்டில் பெரு விருப்பம் உடையவன் என்பதை யான் அறிந்தேன்' என்றும் சிவப்பிரகாசர் வியந்து கூறியுள்ளனர். மேலும்,

[2]"ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்டு
ஆட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன் எல்லாம் உய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகை [விரித்த
பேரருளின் பெருமாள் என்றும்
திருமணக்கோலப்பெருமாள் மறைப்பெருமாள்
எமதுகுல தெய்வம் ஆமால்"

என மாதவச் சிவஞான முனிவரர் வாயாரப் பாராட்டி வாழ்த்தியிருப்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது. இவையெல்லாம் நம்பியாரூரருடைய பெருமையினையும், பாடலின் இனிமையினையும் புலப்படுத்துவனவாம்.

பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் பல பொதிந்து கிடக்கும் என ஆன்றோர் கூறுவர். அங்ஙனமே நம்பியாரூரர் வரலாறும் நல்ல பல கருத்துக்களைத் தெளிவாக அறிவிக்கின்றது. திருக்கயிலாயத்து எழுந்தருளியிருக்கும் சிவபிரானுக்கு அணுக்கத் தொண்டராய், ஆங்குள்ள தெய்வப் பூங்காவில் நறுமண மலர் கொய்து பல்வேறு வகையில் மாலைகளாகத் தொகுத்து வழங்குதலும், திருநீறளித்தலும் ஆகிய திருத்தொண்டினை மேற்கொண்டிருந்தனர் ஆலாலசுந்தரர். இவர் வழக்கம் போல் மலர்கொய்யச் சென்றவிடத்து, உமையம்மையின் பணிப்பெண்களாய் ஆங்கு மலர் கொய்ய வந்திருந்த அநிந்திதை, கமலினி என்னும் மாதரார் இருவர் மீதும் மனஞ்செலுத்தினர். அவ்விருவரும் இவர்பாற் காதல் கொண்டனர். இவ்வாறு எதிர்பாராத வகையிற் சென்ற உள்ளங்களைத் தடுத்துத் தம் வயப்படுத்தி, மலர் கொய்து கொண்டு இருபாலாரும் தத்தம் உறையுளைச் சார்ந்தனர். இந்நிகழ்ச்சியை அறிந்த சிவபிரான் ஆலாலசுந்தரரை நோக்கி, 'நீ தமிழ் நாட்டிற் பிறந்து, அம்மாதரார் இருவரையும் மணந்து, காதலின்பம் துய்த்து மீள்க' எனப் பணித்தனர். அவ் ஆலாலசுந்தரரே 'மாதவஞ் செய்த தென்திசை வாழ்ந்திடத், தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர' நம்பியாரூரராக அவதரித்தார். அம் மகளிர் இருவரும்

---

[1] நால்வர் நான்மணி மாலை-செய்யுள்-3.

[2] காஞ்சிப் புராணம்-பாயிரம்-செய்யுள்-12.

முறையே சங்கிலியாராகவும் 'பரவையாரா கவும் தோன்றினர் என்பது வரலாறு. ஒரு சிறு போதில் தோன்றி மறைந்த காத லுணர்ச்சியே அவர்கள் மக்களாய்ப் பிறந்து இன்ப துன்பங்களை நுகர்தற்குக் காரணமா யிற்று என இதன்வாயிலாக அறிகிறோம். இதனை, "அவாவென்ப எல்லா உயிர்க்கும் எஞ் ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து" என் னும் தமிழ் மறைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகக் கொள்ளலாமன்றோ?

நம்பியாரூரரைத் தோழமையாகக் கொண்ட நாள் முதல் சிவபிரான் அவர்க்குப் பல்லாற்றானும் செய்து வந்த உதவிகளை மேலேகண்டோம். ஆயினும், சங்கிலியாரை மணமுடித்தற் பொருட்டுச் செய்து தந்த சூளுரையைப் புறக்கணித்துத், திருவொற்றி யூர் எல்லையைக் கடந்து செல்ல நினைத்த அளவில், நம்பியாரூரருடைய கண்கள் இரண் டும் ஒளியிழந்தன. 'முகத்திற் கண்ணின்றி யெங்ஙனம் வாழ்வேன்' என்றும், கண்ணில் லாமையால் நேரும் இளிவரல்களை எடுத்துக் கூறி முறையிட்டும், தமக்குக் கண்ணொளி நல்குமாறு நம்பியாரூரர் சிவபிரானை வேண் டினர். எனினும், அங்ஙிலையில் சிவபிரான் தம் தோழரென்று கருதிச் சிறிதுங் கண் ணோட்டங் காட்டினாரல்லர். பொய்யா விளக்க மாகிய வாய்மையில் தப்பியவர், கண்ணொளி யிழந்து கவலுதல் வேண்டுமென்பது இறை வன் கருத்துப்போலும். பின்னர்ப் பல்காற் குறையிரந்து நின்றமைபால் முதற்கண் ஊன்றுகோல் உதவியும், அதன்பின் ஒருகண் ஈந்தும், அப்பால் இரண்டு கண்களையுங் கொடுத்தும், இவ்வாறாக அவரது இடுக்கண் களைந்தார். இஃது இறைவனது "ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும், தேர்ந்து முறை செய்யும்" செம்மையைக் காட்டுகின்றது.

இவையன்றி, நம்பியாரூரர் மேற் கொண்ட செயல்களெல்லாம், தன் முனைப் பின்றி இறைவன் அருள்வழி நின்று செய்யப் பெற்றன ஆகலின், அவற்றின் விளைவுகள் அவரைத் தொடராதொழிந்தன. "ஏகனாகி யிறைபணி நிற்க, மலமாயை தன்னொடு வல் வினை யின்றே" எனவும்,

[1]"இவனுலகில் இதம் அகிதம் செய்த
வெல்லாம் இதம் அகிதம் இவனுக்குச்
செய்தார்பால் இசையும்
அவன் இவனாய் நின்றமுறை யேக
னாகி அரன்பணியில் நின்றிடவும்
அகலும் குற்றம்
சிவனும் இவன் செய்தியெல்லாம் என்செய்தி
யென்றும் செய்ததெனக்கு இவனுக்குச்
செய்த தென்றும்
பவமகல உடனாகி நின்று கொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும்
பணியாக்கி விடுமே"

எனவும் கூறியுள்ள ஞானநூற் கருத்துக்கள் இங்கு நினைக்கத்தகும். ஏனைய நாயன்மார்கள் கைக்கொண்டொழுகிய வினைகள் பின் தொடர்ந்து பயன் விளைவியாது எடுத்த உட லளவாய் நின்று கழிந்தமைக்கும் இவ்விதி பொருந்தும்.

திருநாவுக்கரசர் கைத்தொண்டு செய்த திருவதிகையிலும், திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்த சீகாழிப் பதி யிலும், காரைக்கால் அம்மையார் தலையால் வலம்வந்த திருஆலங்காட்டிலும், மிதித்தலும் செய்யேன் என ஒதுங்கிப் புறத்தேயிருந்து நம்பியாரூரர் இறைவனை வழிபட்டனர். மேலும், நாயன்மார்கள் அனை வர்க்கும் அடியேன் எனத் திருத்தொண்டத் தொகையிற் பாடியுள்ளனர். இவை, இவர் தம் பணிவையும் மெய்யடியார்கள் பாற் கொண்டுள்ள பெருமதிப்பையும் உணர்த்து கின்றன. இவ்வாறு பல உண்மைகளை நாம் அறிந்துகொள்ளுதற்கு இவர் வரலாறு இடனு தல் காணலாம்.

இனி, நம்பியாரூரர் அருளிச் செய்த பதிகங்களில், திருநெல்வாயில் அரத்துறையிற் பாடப் பெற்ற ஒரு பதிகத்தின் கருத்துக்களை இங்கே காண்போம்.

நல்வாழ்வு வாழ்ந்தார், நடந்தார், உடுத் தார், நரைத்தார், இறந்தார் என்று நானிலத் தில், வெறுஞ் சொல்லாய்க் கழிகின்றது மக்கள் வாழ்க்கை என்பதனை அறிந்தேன்;

நெல்லின் நுனியால் அழுத்தி ஊன்றி னும் அதனைப் பொறுக்கலாற்றாது வருந்தும் நொய்ம்மையானது இவ்வுடம்பு ('நெல், வாலூன்ற வருந்தும் உடம்பு');

பெருகி யோடும் நீரால் தாக்குண்டு, இடிந்து வீழ்ந்து, அந்நீரிற் கரைந்து போகும்

1. சிவஞான சித்தியார்-சுபக்கம். 10 ஆம் சூத்திரம்-செய்யுள்-1.

ஆற்றங்கரைபோல்வது இளமை ("தூடுபுனற் கரையாம் இளமை");

இளமை யின்பந் துய்க்க விழைந்து மணஞ்செய்பவர், மணக்கோலத்துடன் இருக்கும்போதே பிணக்கோலம் எய்தும் பெற்றியது இப்பிறவி ("மணக்கோலமதே பிணக் கோலமதாம் பிறவி இதுதான்");

உறங்கி விழித்தல் போல்வது இப்பிறவி ("உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி");

இத்தகைய நிலையில்லாத உலகத்தில் என்னை ஒரு மானிடனாகப் பிறப்பித்தாய் ("வறிதே நிலையாத இம்மண்ணுலகில் நரனாக வகுத்தனை");

மகளிர் காமவலையில் அகப்பட்டு உழல்வது, பலாப் பழத்தில ஈக்கள் மொய்த்து வீழ்வது போலும் ('வாணுர் நுதலார் வலைப் பட்டடியேன் பலவின்கனியீயது போல்வதன் முன்");

ஐம்பொறிகளையும் வழிபாகவுடைய ஐந்து அவாவினையும் கெடுத்தல் வேண்டும் ("பொறிவாயில் இவ்வைந்தினையும் அவியப் பொருது");

முன்பு செய்த நல்வினையால் உன்னுடைய திருவைந்தெழுத்தை இடையறாது ஓதும் பேறுபெற்றேன் ("பண்டே மிக நான் செய்த பாக்கியத்தால் பரஞ்சோதி நின்னாமம் பயிலப் பெற்றேன்")

எனக்கு வேறு பற்று ஒன்றும் இல்லை ("மற்றேல் ஒரு பற்றிலை எம்பெருமான்");

எழுத்துக்களுள் அகரம் தலைமையாயது போல் நீ உலகிற் கெல்லாம் ஒரு முதல்வனாக இருக்கின்றாய் ("அகரம் முதலின எழுத்தாகி நின்றாய்");

இப்பிறவிக் கடலை நீந்திக் கரையேறி அடியேன் உய்தி பெறுதற்கு ஓர் உபாயங் கூறுவாயாக ("அற்றார் பிறவிக் கடல் நீந்தியேறி அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே").

என்பனவும், பிறவும் ஆகிய கருத்துக்கள் இத்திருப்பதிகத்திற் காணப்படுகின்றன. இவற்றால், மக்களுடைய இளமை, யாக்கை, செல்வ வாழ்க்கை என்னும் இவற்றின் நிலையாமை பற்றிய உணர்ச்சியும், அகர உயிர் போல் அறிவாகி உயிர்கள் தோறும் கலந்து நிற்கும் இறைவனது திருவடியாகிய புணையைப் பற்றிப் பிறவிக் கடலை நீந்திக் கரையேற வேண்டும் என்ற பேரார்வமும், உடையவராயிருந்தார் நம்பியாரூரர் என்பது நன்கு விளங்குகின்றது.

மேலும், இப்பதிகத்தின் கண், திருக்குறள், நாலடியார், திருஞானசம்பந்தர் தேவாரம், திருவாசகம், சித்தாந்த நூல்கள் ஆகிய பெரு நூல்களின் சொல்லும் பொருளும் கருத்துக்களும் சுவைபெற அமைந்து மகிழ்விக்கின்றன. இவ்வாறே நம்பியாரூரருடைய தேவாரப் பதிகங்களெல்லாம் பலப்பல நல்லியல்புகளை நமக்கு எடுத்து ஓதுவன என்பதைக் கற்றோர் அறிவர்.

---

**சென்னை :** வன்னிய தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் 21—12—62-ல் வார வழிபாட்டு ஆரம்ப விழா நடைபெற்றது. விழாவைத் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலைய வித்வான் ஸ்ரீசோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் துவக்கி வைத்தார்கள். விழாவிற்குச் சென்னை, அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. டி. இராமலிங்க ரெட்டியார், எம் ஏ., பி.எல். அவர்கள் தலைமை வகித்தார்கள். சென்னை, அற நிலைய ஆட்சித் துறை உதவி ஆணையாளர் திரு. ஏ. இராமசந்திர அய்யர், எம்.ஏ., பி.எல்., அவர்களும் கலந்து கொண்டார்கள். வழிபாடு பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலை 7 மணிக்கு மயிலை திரு. எம். வி. சிங்காரவேலு முதலியார் அவர்களால் தொடர்ந்து நடைபெறும்.

**குடியாத்தம் :** சீதா ராமாஞ்சநேயர் கோயிலில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி விழா 6—1—63-ல் நடைபெற்றது.

**நாகப்பட்டினம் :** சௌந்திரராஜப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி விழா 27—12—62 முதல் 5—1—63 வரை நடைபெற்றது.

**திருச்சுழியல் :** திருமேனிநாத சுவாமி கோயிலில் 27—12—62-ல் பாவை மகாநாடு நடைபெற்றது. இரவு 8-30 மணிக்குத் தேவகோட்டைக் கழகத்தினரால் மாணிக்கவாசகர் நாடகமும், குறவஞ்சி, ஆண்டாள், ஆறுபடைவீடு ஆகியவற்றிலிருந்து சில பாகங்களும் நடிக்கப்பெற்றன.

# திருப்பாவைச் சிறப்புரைகள்

## 11. கற்றுக் கறவைக் கணங்கள்

**கற்றுக் கறவை :** எல்லாம் தலைநாகுக ளாய் இருக்கை; கறக்கும் பருவமாய் இருக்கச் செய்தே கன்று நாகாய் இருக்கை. நித்ய சூரிகள் பகவத் ஸ்பரிசத்தாலே பஞ்ச விம் ஸதி வார்ஷிகராய் (இருபத்தைந்து வயது டையவராய்) இருக்குமாபோலே, இப்பசுக்க ளும் கீழ்நோக்கிப் பிராயம் புகுகை. முலை சரிந்தாரைப் பாராத ராஜ குமாரனைப் போலே, கன்று மேய்க்கப் பெற்றால் பசுக்க ளைப் பாரான்.

**கணங்கள் பல:** தனித்தனியே எண்ணி முடியாமையன்றிக்கே, ஸமூகங்களும் எண்ணி முடியாது. "பல" என்னும் இத்தனை. ஆத் மாக்களுக்குத் தொகையுண்டாகிலிறே பசுக் களுக்குத் தொகையுள்ளது?

**பலகறந்து:** அநேக ரித்விக்குகள் செய்யக் கடவ சடங்கை அதில் கூர்மையுடையவன் ஒருவனே செய்யுமா போலேயும், ப்ராஹ் மணர் வேதத்தை யடைய அதிகரிக்குமா போலேயும், க்ஷத்ரியன் பருவம் நிரம்புவ தற்கு முன்னே நிலவனுமாபோலேயும், ஈச் வரன் ஒருவனுமே ஸர்வாத்மாக்களி னுடைய வும் கர்மாநு குணமாக நாம ரூபங்களைப் படைத்து நியமநாதிகளைப் பண்ணுமாப் போலேயும், பசுக்கள் அநேகமாகிலும் ஜாதி யில் மெய்ப்பாட்டாலும், ஜாத்யுசித வ்ருத்தி யாகையாலும், ஒருத்தனே அடங்கக் கறக்க வல்ல ஸாமர்த்யம். அரியது செய்யவல்ல குடி யிலே பிறந்தோம் என்று, உன்னையல்லாது அறியாத எங்களுக்கு அரியையாக ஒண் ணுதுகாண் என்கை.

**செற்றார் :** இவர்களுக்குச் சத்ருக்கள் ஆகிறார்கள் கிருஷ்ணனுடைய பெருமை பொறுதவர்கள். இராவண ஸாகசத்தினின் றும் வந்தான் என்னாதே, நம் எதிரியான பையல் ஓலக்கத்தினின்றும் வந்தான் என்று அங்கதப் பெருமாள் பேசினாற்போலே, ஆண் டாளும் இவ்வூரில் ஸம்ருத்தி பொறுதவர்க ளைச் சத்ருக்கள் என்கிறாள்.

பகவத் ஸம்ருத்தி பொறுதார் பாகவதர் களுக்குச் சத்ருக்கள்; பாகவத ஸம்ருத்தி பொறுதவர்கள் எம்பெருமானுக்குச் சத்ருக் கள்.

**திறல் அழிய :** "தேவர்களும் எனக்கு எதிர் அன்று" என்றிருக்கும் கம்ஸாதிகளுக் கும் புகுர ஒண்ணாதை மிடுக்கையுடையவர்கள்.

**சென்று செருச்செய்யும்:** எதிரிகள் வந் தால் பொருகை யன்றிக்கே இருந்த இடங்க ளிலே சென்று பொருகை. சக்ரவர்த்தித் திரு மகனைப்போலே இவர்கள் வீரம். எதிரிகள் வந்து ஊரை அடைமதிள்படுத்த வெல்லுகை குற்றமானாற் போலே, நாங்கள் வரப் புறப் படாதிருக்கை உனக்குக் குற்றம் அன்றோ? ராஜாக்கள் எதிரிகளைத் தோற்பிக்கும்படி வ்யாபரித்தார்களே யாகிலும், அந்தப்புரத் தில் வந்தால் எளியராய் அன்றோ இருப்பது?

**குற்றம் ஒன்று இல்லாத.** எடுத்துவரப் பார்த்திருக்கும் குற்றம் இல்லை; கையில் ஆயு தம் போகட்டவர்களை எதிர்க்கும் குற்றம் இல்லை என்றுமாம்; அழியச் செய்யா நின்றார் கள் என்று கிருஷ்ணனுக்கு முறையிட்டால் "செய்தாரேல் நன்று செய்தார்" என்னும் படி பிறந்தவர்கள் என்றுமாம்.

**கோவலர்தம் பொற்கொடியே:** ஊருக்காக ஒரு பெண்பிள்ளை. தர்சநீயமாய் இருக்கை யும், பர்த்தாவாகிற கொழுகொம்பை ஒழிய ஜீவியாமையும்பற்றிப் "பொற்கொடி" என்ற வாறு. "ஆவிக்கோர் பற்றுக் கொம்பு நின் அலால் அறிகின்றிலேன் நான்" என்றிறே யிருப்பது.

**புற்று அரவு அல்குல்:** புறம்பே புறப் பட்டுப் புழுதி புடைத்த உடம்பு அன்றிக்கே தன் நிலத்திலே வர்த்திக்கிற ஸர்ப்பத்தி னுடைய பணமும்கழுத்தும்போலே, ஒளியை யும் அகலத்தையும் உடைய நிதம்ப ப்ரதே சத்தை யுடையவளே. ஸஜாதீயையான பெண்களும் நாயக ஸமாதியிலே சொல்லுகிற படி பாரீர். அவர் ஆண்களையும் பெண் ணுடை யுடுக்கப் பண்ணுமாபோலே, பெண் களை ஆண்கள் ஆக்குகிறது இவளுடைய அல்குல்.

**புனமயிலே:** தன் நிலத்திலே நின்ற மயிலி னுடைய தோகைபோலே யிருக்கிற அளக

பாரத்தை யுடையவளே. கிருஷ்ணனையும் தங்களையும் பிச்சேற்ற வல்ல அளகபாரத்தை யுடையவள்.

"பொற்கொடி" என்கையாலே ஸமுதாய சோபை; "புற்றரவல்குல்" என்கையாலே அவயவ சோபை கூறியவாறு.

**போதராய்:** எங்களை அவனோடு கூட்ட வேண்டா, எங்களுக்குத் தாரகமாக நாலடி நடந்துகாட்டாய். இவளை முன்னே போக விட்டு, இவள் நடையழகு கண்டு பின்னே போகையிலே காணும் ஆசை.

**சுற்றத்துத் தோழிமார்:** இவ்வூர் அடங்க இவருக்குத் தோழிமார்; இவ்வூர் அடங்க இவருக்கு உறவு.

**எல்லோரும் வந்து:** உன்னை ஒழிய ஒரு ப்ரயோஜநம் உண்டு என்று இருக்கில் அன்றோ இவர்களுக்குக் கண் உறங்குவது?

**நின் முற்றம்:** ஒரு த்ரிவிபாத் விபூதியிலும் இடம் உடைத்தாய் இருக்கை.

**புகுந்து:** எங்களுக்குப் ப்ராப்யமான முற்றத்திலே புகுந்து, சேஷியானவனுக்கும் ப்ராப்யமான முற்றம் ஆகையாலே சேஷபூதர்களான எங்களுக்குச் சொல்ல வேணுமோ?

**முகில்வண்ணன் பேர் பாட:** நீ உகக்கும் அவன் அழகிலும் ஔதார்யத்திலும் ஈடுபட்டு அவன் திருநாமத்தைப் பாடச் செய்தேயும்.

**சிற்றாதே பேசாதே:** "முகில் வண்ணன்" என்றவாறே, அவ்வடிவை நினைத்துப் பேசாதே கிடந்தாள் இவள் சேஷ்டிதமும் வார்த்தையும் தங்கள் கண்ணுக்கும் செவிக்கும் போக்யம் ஆகையாலே இன்னாதாகிறார்கள்.

**செல்வப் பெண்டாட்டி நீ:** உன்னோடே கூடுவதே எங்களுக்கு எல்லா ஐச்வர்யமும் ஆன நீ. கிருஷ்ண குணாநு ஸந்தானத்தாலே புஷ்கலையான நீ என்னவுமாம்.

**எற்றுக்கு உறங்கும் பொருள்:** உன்னுடைய உத்தேச்யத்தைப் பாராதே, எங்களுடைய ஆற்றாமையைப் பாராதே, கிருஷ்ணனுடைய நிரதிசய போக்யதையைப் பாராதே, ஏதுக்காகக் கிடக்கிறாய்?

அவனை உகப்பிக்கப் பார்த்தாய் ஆகில், அவனுடையாரையும் உகப்பிக்க வேணுங் காண். ஸ்வப்ரயோஜநமான கைங்கர்யத்தைக் காட்டில் ஒரு வாசி கண்டிலோமே உனக்கு, எங்களை ஒழிய உனக்கு உறங்க விரகு உண்டோ?



## 12. கனைத்திளங் கற்றெருமை

**கனைத்து:** உதாரர் கொடுக்கப் பெறாவிட்டாற் படுமாபோலே, ஆச்ரிதர் கார்யம் செய்யப் பெறாவிட்டால் ஈச்வரன், "ரிணம் ப்ரவருத்தம்" என்னுமாபோலே, ப்ராப்த காலத்தில் கறப்பார் இல்லாமையாலே முலை கடுத்துக் கதறுகை.

**இளங் கற்றெருமை:** இளங்கன்று ஆன எருமை என்னுதல்; இளங் கன்றையுடைய எருமை என்னுதல்; இரண்டாலும் பாடு ஆற்றமாட்டாமை சொன்னபடி. "கறவா மடநாகு தன்கன்று உள்ளினாற் போல்" என்னக் கடவதிறே.

**கன்றுக்கு இரங்கி:** தன் முலைக் கடுப்புக் கிடக்க, கன்று என்படுகிறதோ என்று இரங்கி. எம்பெருமான் ஆச்ரித விஷயத்தில் "ஏழை ஏதிலன் கீழ்மகன் என்னாது இரங்கி"ப் படும் பாட்டுக்கு நிதர்சனமாய் இருக்கிறது.

**நினைத்து:** கன்றை நினைத்துப் பாவநா ப்ரகர்ஷத்தாலே, அது முலையிலே வாய் வைத்ததாகக் கருதிக்கொண்டு பால் சொரியா நிற்கும். நினைத்த அநந்தரம் பால்சொரியும் என்றுமாம்.

**முலைவழியே:** நினைவின் முதிர்ச்சியாற் கன்று முலையிலே வாய் வைத்ததாகக் கருதிக் கொண்டு, கைவழியும் அன்றிக்கே, கன்றின் வாய்வழியும் அன்றிக்கே இருக்க, முலைவழியே தானே பால் சொரியா நிற்கும்.

**நின்று பால் சோர:** மேகங்களுக்குக் கடலிலே புக்கு முகந்து கொடுவந்து வர்ஷிக்க வேணும்; அவ் வருத்தம் இல்லை இவற்றுக்கு. நினைவு மாறாமையாலே, திருமலையில் திரு அருவிகள்போலே, பால் மாறாதே சொரிந்து கொண்டு நிற்கை.

பகவத் விஷயம் கேளாதேயிருக்கத் தன் செல்லாமையாலே சொல்லுவாரைப் போலே, பால் தானே பெருகிநின்று சொரிதல்.

**நனைத்து இல்லம் சேறு ஆக்கும்:** பாலின் மிகுதியால் அகம் வெள்ளம் இடும். எருமைகள் துகைக்கையால் சேறாய்க் கிடக்கும்.

**நற்செல்வன்:** தோற்றிமாயும் ஸம்பத் தன்றிக்கே நிலைநின்ற ஸம்பத்து. கைங்கர்ய ஸம்பத்திறே இவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஸம்பத்து. அதாகிறது ஸ்ரீகிருஷ்ணன் திருவடிகளிலே நிரந்தர ஸேவை.

**"ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல்"** என்கிறபடியே, தன் வைஷ்ணவ ஸ்ரீயாலே ஜகத்துக்கு அடைய வைஷ்ணத்வம் உண்டாகும்படி யிருக்கை என்றுமாம்.

**தங்காய்:** குணக் கேட்டுக்கு "இராவணன் தம்பி" என்னுமாபோலே, குணத்துக்குத் தமையனிலும் தன்னேற்றம் மிகுதியுடையவள் என்கை.

**பனித்தலை வீழ நின் வாசல் கடை பற்றி:** மேலே மழை வெள்ளமிட, கீழே பால் வெள்ளமிட, நடுவே மால் வெள்ளமிட நின்ற நிலையாகையாலே, தெப்பம் பற்றுவாரைப் போலே நின் வாசற் கடையில் தண்டியத்தைப் பற்றிக் கிடக்கிற இந்தத் தர்மஹாநி அறிகிலை.

[இப்படிச் சொன்ன இடத்திலும் இவர்கள் படும் அலமாப்புக் காண்போம் என்று பேசாதே கிடக்க, பெண்களைத் தீரா மாற்றாக நெஞ்சாரல் பண்ணும் கிருஷ்ணனை ஒழிய, பெண் பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவோம் இவள் எழுந்திருக்கைக்காக என்று, ஸ்ரீராம வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகின்றார்கள்.]

**சினத்தினால்:** தண்ணீர்போலே இருக்கிற சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சினம் உண்டோ? என்னில்; ஆச்ரித சத்ருக்கள் இவர்க்கும் சத்ருக்கள் இறே? இராவணனால் ஏற்பட்ட காயத்தையுடைய திருவடியாகிய வாநரத் தலைவனைப் பார்த்து; இராமபிரான் கோப பரவசராயினர் அல்லரோ? மஹாராஜர் (சுக்ரீவர்)க்குச் சீற்றம் பிறந்தபோது தாமும் சீற்றம்கொண்டு வாலியை எய்தார், அவர் அழுதபோது தாமும் கூட அழுதார் இறே? ஆச்ரித கார்யம் என்றும் தங்கார்யம் என்றும் இரண்டில்லை இவருக்கு.

**தென்னிலங்கை:** பையல் செய்த அநீதியை நினைத்து, 'அத்திக்கும் அஸஹ்யம் ஆனபடி.

**கோமானை:** "அஹோ வீர்யம்" என்று திருவடி மதித்த ஐச்வர்யம் இறே? ஓர் அம்பாலே தலையைத் தள்ளிவிடாதே, படையைக் கொன்று, புத்ர பௌத்ராதிகளைத் தலை சாய்த்து, ஆயுதங்களை முறித்து, "அரக்கர் தங்கள் கோன்போலும்" என்ற அபிமானத்தை அழித்து, பட்ட இளிவரவெல்லாம் அறிவிப்பார் இல்லாதபடி தரம் கெடுத்து, நெஞ்சாரல் படுத்திக் கொன்றபடி.

**மனத்துக்கு இனியானை:** பெண்களைப் படுகுலை யடிக்கும் கிருஷ்ணனைப்போல் அன்றிக்கே, ஏகதார வ்ரதனாய் இருக்கை; சத்ருக்களுக்கும் கண்ணநீர் பாயுமவரை என்றுமாம்.

**பாடவும் நீ வாய் திறவாய்:** நம்மை நலியும் கிருஷ்ணனுடைய பேரைக் காற்கடைக் கொண்டு, "இறந்தோர்கட்கு உயிர் கொடுக்கத் தக்க சஞ்சீவி ஆகிய இராம வ்ருத்தாந்தம்" என்னும்படியே, கிருஷ்ண விரகத்தாலே கமர் பிளந்த நெஞ்சு பதம் செய்யும்படியான சக்ரவர்த்தித் திருமகனைப் பாடச் செய்தேயும், நீ வாய் திறக்கின்றிலை. ப்ரீதிக்குப் போக்கு விட வேண்டாவோ?

**இனித்தான் எழுந்திராய்:** எங்கள் ஆர்த்திக்கு உணராவிட்டால் உன்பேற்றுக்கேனும் உணர வேண்டாவோ? எங்கள் ஆற்றாமை அறிந்த பின்பும் எழுந்திராது ஒழிவதே. பிறர் ஆர்த்திக்குத் த்வரித்து உணருமவனோடே பழகி வைத்து இங்ஙனே யுறங்குவதே என்கிறார்கள். ஆபந்நர்க்காக உணரும் அவன்படியும் அன்றிக்கே, காலம் உணர்த்த உணரும் ஸம்ஸாரிகள்படியும் அன்றிக்கே, இரண்டிலும் வியாவிருத்தமாய் இருப்பதே, உன் உறக்கம்? ஈதொரு பத்தொன்பதாம் பாஷையாய் இருந்ததீ!

**அனைத்து இல்லத்தாரும் அறிந்து:** எல்லோரும் அறிந்தாயிற்று. இனி எழுந்திராய், பகவத் விஷயம் ரஹஸ்யமாக அநுபவிக்கும் இத்தனை.

## 13. புள்ளின்வாய் கீண்டானை

**புள்ளின் வாய் கீண்டானை:** "பள்ளத்தில் மேயும் பறவை யுருக்கொண்ட கள்ள அசுரன்" ஆகிய பகாஸுரனைப் பிளந்தபடி.

**பொல்லா அரக்கனை:** உயிரையும் உடலையும் பிரித்தாற்போலே, தாயையும் தமப்பனையும் ஓர் இடத்தில் சேர இருக்க ஒட்டாதே பிரித்த நிர்க்ருணன். "பொல்லா இராவணன்" என்னும் இத்தனை போக்கி, அவன் தண்ணிமைக்கு ஒரு பாசுரம் இல்லையிறே.

திருவினைப் பிரித்த கொடுமையிறே. பிராட்டியும் "த்வம் நீச" என்றாளிறே. "விபீஷணஸ்து தர்மாத்மா" என்று நல்ல அரக்கனும் ஒருத்தன் உண்டென்கை.

கிள்ளிக் களைந்தானை: திருவிளையாடு சூழலிலே நோய்புக்க இடங்களைக் கிள்ளிப் போகடுமா போலே, தோஷாம்சத்தை வாங்கிப் போகட்டபடி.

வீரபத்நி யாகையாலே "கல்லெடுத்து" என்னுமா போலே, "கிள்ளி" என்கிறார்கள்.

கீர்த்திமை: எதிரிகளுக்கும் நெஞ்சு உளுக்கும்படியான வீரசரிதம்; உகவாதார்க்கும் விட வொண்ணாத வீரம், உகந்த பெண்களுக்குச் சொல்ல வேணுமோ? இராவணன் பெருமாள் வீரத்துக்கு இலக்கானான்; தங்கை அழகிலே கண்கலங்கினாள்; தம்பி சீலத்துக்கு இலக்கானான்.

முன்பு "மனத்துக்கு இனியானைப் பாடவும்" என்று இவர்கள் சொன்ன பாசுரத்தை அயல் மாளிகையிலே கேட்டுக் கிடப்பாள் ஒரு பெண்பிள்ளை, நம் அபராதம் தீர இவர்களுக்கு வார்த்தை சொல்லுவோம் என்று, "பெண்காள்! இங்கு இராம வ்ருத்தாந்தம் சொன்னார் உண்டோ?" என்ன, "இராம வ்ருத்தாந்தமும் சொன்னோம்; கிருஷ்ண வ்ருத்தாந்தமும் சொன்னோம்; ஸ்ரீஇராமாயணமும், பாரதமும், ஸ்ரீ பாஞ்சராத்ரமும் அகப்படச் சொன்னோம்" என்கிறார்கள்.

பாடிப் போய்: பாட்டே தாரகமாகப் போனார்கள்; கால்நடை தருகைக்குத் தாரகம் திருநாமமிறே. "பாதேயம் புண்டரீகாக்ஷ நாம ஸங்கீர்த்தநாம்ருதம்" என்றபடி, வழிக்குத் தாரகம் திருநாமமிறே.

பிள்ளைகள் எல்லோரும்: நாம் சென்று எழுப்ப வேண்டும் பாலைகளும்கூட, உனக்கு முன்னே யுணர்ந்து புறப்பட்டார்கள்.

பாவைக்களம் புக்கார்: கிருஷ்ணனும் தாங்களும் கழகமிடும் ஸங்கேத ஸ்தலம் புக்கார்கள். "பாவைக்களம்" என்றது மழைக்காக இந்த்ராணியையும், கலவிக்காக ரதியையும் நோற்கைக்குப் பெண்கள் திரளும் இடம். திரளும் இடத்தை "நெற்களம்" "போர்க்களம்" என்னுமா போலே.

வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று: (போது புலர்தலு அறிகுறியாக) சுக்கிரனும் மத்தியகதனாக உச்சிப்பட்டது, வியாழம் அஸ்தமித்தது.

புள்ளும் சிலம்பின காண்: பறவைகள் துயிலுணர்ந்த மாத்திரமே யன்றிக்கே இரை தேடிச் சிலம்பிக் கூவிச் சென்றன.

கீழேயும் "புள்ளும் சிலம்பின" என்றது; அங்குக் கூட்டில் நின்றும் சிலம்பினபடி சொல்லிற்று; இங்கு வழியே போமிடமெல்லாம் போய் ஆகாரார்த்தமாகச் சிதறினபடி சொல்லுகிறது.

போதரிக் கண்ணினாய்: பூவும் மானும் போன்ற கண்; பூவில் படிந்த வண்டுபோன்ற கண்; பூவோடே சீறுபாறு என்கிற கண்; உலாவுகின்ற மான்போலே இருக்கின்ற கண் எனப் பல பொருள்படும். "அரி" என்பது மான் என்னவும், வண்டு என்னவும், சத்ரு என்னவுமாம்.

குள்ளக் குளிர: ஆதித்யன் உதித்து நீர் கொதிப்பதற்கு முன்னே.

குடைந்து நீராடாதே: கிருஷ்ண விரஹம் ஆற நீராடப் போகாமல்.

பள்ளிக் கிடத்தியோ: கிருஷ்ண ஸ்பர்சம் உடையதொரு படுக்கையை மோந்து கொடு கிடக்கிறாயோ? விளைந்து கிடக்க உதிர்நெல் பொறுக்குகின்றாயோ?

பாவாய்நீ: தனிக்கிடை கிடக்க வல்லள் அல்லையே நீ.

நன்னாளால்: மேல் வருகிற நாள் இராவணாதிகளைப் போலே பிரிக்கிற நாளிறே. இசையாத நாட்டாரும் இசைந்து அவனும் நாமுமாய் ஜலக்ரீடை பண்ணி அவன் மடியிலே சாயலாம் காலத்தைப் பெற்று வைத்தும், படுக்கையை மோந்துகொடு கிடப்பதே.

கள்ளம் தவிர்ந்து: "கள்ளம்" ஆவது தனியே கிருஷ்ண குணசேஷ்டிதங்களை நினைத்துக் கிடக்கை; அதனைத் தவிர்த்து எங்களோடே கலந்து. எங்களுக்கு உன்னைக் காட்டாதே மறைக்கையாகிற "ஆத்மாபஹாரத்தை"த் தவிர்ந்து எங்களோடே கல என்றுமாம்.

சேஷத்வத்தை அபஹரித்தால் சேஷியை க்ஷமை கொள்ளலாம்; சேஷித்வத்தை அபஹரித்தால் பொறுத்தோம் என்பார் இல்லை; குற்றம் நின்றேபோம் இத்தனை.

(தொடரும்)

# திருஞான சம்பந்தர் அருளிய திருமுறை

[முதுபெரும் புலவர். திரு. சிவஞானத் தம்பிரான் சுவாமிகள், திருவெண்காடு]

## திருவைந்தெழுத்து

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் அருளிச்செய்த திருமுறைகளில், நாவினுக்கு அருங்கலம் ஆகிய நமச்சிவாய மந்திரத்தின் அரும்பேருண்மைகளைத் தெளிவுறுத்திய திருப்பதிகங்களும் திருப்பாடல்களும் பல உள்ளன. அவற்றுள் இரண்டு திருப்பதிகங்கள் திருவைந்தெழுத்தின் உண்மைச் சிறப்புக்களை விளக்கும் பொருளவாய் அருளப் பெற்றிருக்கின்றன. அவை 'பஞ்சாக்கரத் திருப்பதிகம்' என வழங்கப் பெறுகின்றன.

அகத்தியர் தேவாரத்திரட்டிலும், அவை திருவைந்தெழுத்து என்னும் பிரிவிற் கொள்ளப்பெற்றன. 'பஞ்சாக்கரத் திருப்பதிகம்' 'நமச்சிவாயத் திருப்பதிகம்' என்னும் வழக்கு நோக்கத்தக்கது. 'துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்' என முதலுந் திருப்பதிகம் பஞ்சாக்கரத் திருப்பதிகம் என வழங்கப்பெறும். 'காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி யோதுவார்' எனத் தொடங்கும் திருப்பதிகம் நமச்சிவாயத் திருப்பதிகம் எனப் போற்றப்பெறும். காரணம்:—முன்னதில் ஒவ்வொரு திருப்பாடலின் முடிவிலும் 'அஞ்செழுத்துமே' என்றுள்ளதால், பஞ்சாக்கரம் எனத் தொகையைக் குறித்து வழங்கலாயிற்று. அஞ்செழுத்து என்பது தமிழ். பஞ்சாக்கரம் (பஞ்சாக்ஷரம்) என்பது வடசொற்றிரிபு. நமச்சிவாயத் திருப்பதிகத்தின் முடிவில் 'நமச்சிவாயவே' என்றிருத்தலால் அதுவே பெயராயிற்று. திருவைந்தெழுத்துள் பலவகை உண்டு. அவற்றுள் முதலாவதும், (தூலம் என்னும்) பருமை குறித்ததும் ஆவது, 'நமசிவாய' என நிற்கும் திருமந்திரம் ஆகும்.

திருவைந்தெழுத்தின் வகையை உணர்த்தும் தன்மையதாக வரும்,

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்
பெருவெழுத்தும்—நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே
பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி."

என்னும் 'கொடிப் பாட்டு' ஐந்தனுள் ஒன்று இங்குக் குறிக்கொளத் தக்கது. இஃது உமாபதிசிவம் அருளியது.

இவ்வகையுள் 'அஞ்செழுத்து' என்பது பலர்க்குந் தெரியும். இதில் [1]எட்டு, [2]ஆறு, [3]நான்கு, [4]பிஞ்சு, [5]பெரிது, [6]பேசுவது, [7]பேசாதது என்னும் ஏழுவகையையும் சிலரே விளக்கம்உற உணர்வர். சிலர் இவ்வகையெல்லாம் பின்னேர் வகுத்துக்கொண்டன என்பர்.

1. எட்டெழுத்து:— விசேடதீட்சை பெறுவார்க்கு உபதேசிக்கப்பெறும் திருவைந்தெழுத்து. அதில் முதலிற் பிரணவம், அடுத்துச் சிவபீசத்தில், இயைந்த ஆகாரமும் மகரமெய்யும், பின்னர் அதனொடியைந்த ஔகாரமும் மகரமெய்யும், முடிவில் சிவ முதலாகிய திருவைந்தெழுத்தும் அமைந்த மந்திரமே எட்டெழுத்து எனப்பெறும். இஃது உபதேசத்திற் பெறுவது.

2. ஆறெழுத்து:—இதற் பிரணவமும் தூலபஞ்சாக்கரமும் இருக்கும்.

3. நாலெழுத்து:—இஃது அறிவான் முதிர்ந்து பக்குவம் உற்றோர்க்கு உபதேசிக்கப் பெறுவது. இதிற் பிரணவமும் நம நீங்கிய மூன்றும் மட்டும் இருக்கும். இஃது அதிரகசிய மந்திரம். இது பின் உள்ள தேவாரப் பாடலிற் காண்க.

4. பிஞ்செழுத்து: —வகாரமாகிய பராசத்தியைக் குறித்த சிவஞான மந்திரம்.

5. பெருவெழுத்து:—சிகாரமாகிய சிவ மந்திரம்.

6. பேசும் எழுத்து:— பிஞ்செழுத்துக்கே பிறிதொரு பெயர். இது தக்கதொரு காரணங் குறித்துண்டாயது.

7. பேசா எழுத்து:—இது பேரெழுத்தின் மற்றொரு பெயர். இது தனக்குமேல் ஒரு தலைமைப் பெருமை இல்லாமையைக் குறித்துண்டாயது. முன்னது (பிஞ்சு) பிரவிருத்திக்கும் நிவிருத்திக்கும் தொடக்கம் ஆதலின், 'பிஞ்சு' எனவும், பின்னது (பேரெழுத்து) பிரவிருத்தி நிவிருத்தி ஆகும் இரண்டன்

எல்லைக்கும் முடிவாய்த் தனிப்பெரும் பொருளா யுள்ளதாதலின் 'பேரெழுத்து' எனவும் குறிக்கப் பெற்றன.

"ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமயம் உற்றதும் உள்ளொளி பெற்றதும்
நாமயம் அற்றதும் நாம்அறி யோமே."

என்பது திருமந்திரம். இதில், 'ஊமை யெழுத்து' என்றது பேசா எழுத்து. அடுத்துள்ள 'பேசும் எழுத்து' கொடிப்பாட்டில் அறிவிக்கப் பெற்றதே.

இக்கட்டுரையில், 'பெறுதல்' என்னும் தொழிலால் குறித்து வருதலைக் குறிக்கொள்ளல் வேண்டும். அஃறிணை, விருப்பம் இன்மை, துன்பம் முதலியவற்றைக் குறித்து, 'படுதல்' என்னும் தொழிற்சொல் ஆளப்படும். மாடு ஒட்டப்பெற்றது எனலாகாது. ஒட்டப்பட்டது என்றே கூறல்வேண்டும். திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் திருத்தேரை இழுத்தமையால் மாடு வீடுபெற்றது என்றெழுதத்தக்க இடத்தில் மாடு வீடுபட்டது எனலாகாது. ஊர்ப்பட்டியில் அடைபட்ட மாடு அப்பட்டியினின்றும் விடுபட்டது என்பது ஆண்டைக்குத் தகும். நாய் அடிபெற்றது எனில், அடிபடுவதில் நாய்க்கு விருப்பு உண்டு என்பதுபடும். அடிபட்டது என்பதே அதில் அதற்கு விருப்பம் இன்மையைக் காட்டும். துன்பப்பட்டது என்னும் தொடர் துன்பம் பெற்றது என நிற்கின், பொருந்துமோ? இங்கும் இம்முறையில் அறிக. திருமந்திரத்தைக் காட்டிலும் உயர்வுடையது யாதுளது? அதனைப் படுதற்றொழிலால் குறித்தல் பெரும் பாதகம் விளைக்கும்.

ஆமை என்றது யகாரம் ஆகிய ஆன்மாவைக் குறித்த உருவகம். 'அஞ்சும்' அடங்கிடும், என்றது பொறியடக்கத்தை யுணர்த்தி நின்று, பாசநீக்கத்தைக் குறிப்பது.

"ஓமயம் உற்றது" என்றது பரநாத ரூபமான நிலையைக் குறிப்பது

"உள்ளொளி பெற்றதும்" என்றது உயிரது சிவஞானப் பேற்றைக் குறிப்பது.

'நாமயம் அற்றதும்' என்றது நகாரம் மகாரம் யகாரம் ஆகிய மூன்றும் அற்ற உண்மையைக் குறிப்பது. நகாரம் அறுதல் திரோதான சத்திநீக்கம். மகாரம் அறுதல் மலசத்தி நீக்கம். யகாரம் அறுதல் தற்போதம் தவிர்தல். நகாரம் எதுகை நோக்கி நீண்டது. 'நாமயம்' என்பதன் ஈற்றில் உள்ள மகரமெய் 'சிவாயம்' 'சிவம்' 'நமசிவாயம்' என்பவற்றிற்போல நின்றது. 'தவம்' என்றதிற் போல நின்றவாறு வேறு.

இங்கே, "ஊமையெழுத்தொடு பேசும் எழுத்துறில் ஆமையகத்தில் அஞ்சும் அடங்கிடும்" என்றுபதேசித்த திருமந்திரம், திருஞானசம்பந்தப்பெருமான் திருவாக்கிற் பல இடங்களில் வந்துள்ளது.

"துன்பாய மாசார் துவராய போர்வையார்
புன்பேச்சுக் கேளாதே புண்ணியனை
நண்ணுமின்கள்"

என உபதேசித்தருளிய திருஞானசம்பந்தப் பெருமானார், அப்புண்ணியனை நண்ணும் சாதனம் ஈது என்று தம் பெருங்கருணைப் பெருக்கால், உணர்த்தியருளத் திருவுளங் கொண்டார். அதனால், எவ்வாறு புண்ணியனை நண்ணும் ஆறு என நாடுவார்க்குத் தெளியச் செய்யும்பொருட்டு,

'நண்பாற் சிவாய எனு' என்றருளினார். 'சிவாய' என்னுந் திருமந்திரத்தில், முதலிற் பேசா எழுத்தாகிய பேரெழுத்தும், அடுத்துப் பேசும் எழுத்தாகிய பிஞ்செழுத்தும், முடிவிற் பேரன்புடைய ஆன்மாவைக் குறிக்கும் ஆமையும் நிற்றல் அறிக.

"நண்பாற் சிவாய எனு நாலூர் மயானத்தே
இன்பாய் இருந்தானை ஏத்துவார்க்கு இன்பமே."

'நண்பு' என்றது சிவத்துவம் உற்றவர்க்குள்ள மெய்யன்பு குறித்தது. இங்கு 'நன்பு' என்றே திருவாய் மலர்ந்தருளியிருப்பார் காழி வேந்தர். முச்சுழி வேண்டுவதின்று. 'நன்பு' என்ற செந்தமிழ்ச் சொல்லிற்கும் சிறந்த பொருள் உண்டு. அது நண்பினும் சாலச் சிறந்தது. நன்பு, நன்கு, நற்கு, நன்மை, நலம், நன்றி, நன்று, முதலியவை 'நல்' என்னும் பண்படியிற் றோன்றியவை. நன்மை + தீமை, நன்கு + தீங்கு, நலம் + பொலம், (சிவபோகசாரம் பார்க்க.) நல்லாங்கு + பொல்லாங்கு, நன்று + தீது, நன்பு + தீன்பு என்றவற்றை நோக்கின் அதன் உண்மை புலப்படும். 'தீன்பு' என்பது திம்பு என மருவி வழங்குமாறு 'நன்பு' என்பதும் 'நம்பு' என மருவி வழங்கப்பட்டது. 'நம்பும் மேவும் நசையாகும்மே' என்றதில் உள்ள 'நம்பு' என்பதன் முதனிலை எது? 'நம்' என்பது முதனிலையாயின் 'நம்பன்' என்றதிற் பகரம் எவ்வாறு வரும்? இன்பன்,

வன்பன், அன்பன் முதலியவற்றிற் பகரம் எவ்வாறு வந்ததோ அவ்வாறே 'நம்பன்' என்றதிலும் வந்தது. இன்பு+அன், வன்பு +அன், அன்பு+அன் என்றவாற்றுல் வந்த பகரம் நன்பு+அன் என்றலும் வந்தது. அதனுல், நம்பன் என்றது நன்பன் என்றதன் மரூஉ வேயாம். 'நம்' என்பது எவ்வாற்றுனும் முதனிலையாகாது. மலையகராதியில், 'நன்பன்' என்றதொரு பெயர் சணலைக் குறித்துளதாக உளது. அதனுல், 'நன்பு' என்னும் செந்தமிழ்ச் சொல் இருப்பது தெளிவாயிற்று. வன்பு+ மென்பு, துன்பு+இன்பு என்றிருத்தல் போலத் திம்புக்கு நம்பு இருத்தல் வேண்டும். அவை தின்பு+நன்பு என்றவற்றின் மரூஉ வேயாகும். ஆதலின், இந்நாலூர்த் திருப் பதிகப் பாடலில், 'நன்பாற் சிவாயஎனு' என்றிருப்பது பொருத்தமே. டண்ணகரம் இருத்தலால் எதுகை நயம் கெட்டிலதெனினும், திருவருட் பாடலிலும் இலக்கணம் செவ்விதின் அமையும் உண்மையைக் கற்றுணர்ந்தோர் முற்றும் அறிவர்.

''வசிவல அவனதிடம்
கசிதத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினம்
காரார் காரரார் நீள்சோலைக் கழுமல வளநகரே'' (126: 2)

''விதியுமாம் விளைவாம் ஒளியார்ந்ததோர்
கதியுமாம் கசிவாம் வசிஆற்றமா
மதியுமாம் வலியாம்மழ பாடியுள்
நதியந் தோய்சடை நாதன்நற் பாதமே''

என்னும் திருக்கடைக்காப்பில் திருவடிப் புகழ் உணர்த்தும் வாயிலாக அதைப்பெறும் சாதனம் ஆகிய திருவைந்தெழுத்து (பிஞ்செழுத்தும் பேரெழுத்தும்) உபதேசித்தருளப் பெற்றமை உணர்க. 'வசி' ஆற்றல் அறிவாற் கணிக்கும் திருமந்திரஜபம் ஆகும்.

'வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமும்ஆம் ஆங்கு'

என்று திருவருட்பயன் (88) உணர்த்தும் உண்மையை இங்கு உற்றுணர்தல் பெருநலம் பயக்கும். அதற்கு நிரம்ப அழகியதேசிகர் அருளிய உரை இது:—''அவ்வாறு உச்சரிக்குங்கால், வகாரம் ஆகிய அருள் சிகாரம் ஆகிய சிவத்தினைக்காட்டி, யகாரம் ஆகிய உயிரினை வீட்டின்பத்திலே இருத்தும். அன்றியும், அவ்வருளே அந்தச் சிவத்திற்குக் குற்றம் தீர்ந்த திருமேனியாய் இருப்பதும்'' ''இதனுல் திருவைந்தெழுத்தில் வகாரம் ஆகிய அருளினது தன்மை வகுத்துக் கூறப்பட்டது.

இதன் உரையில், சிவசத்தியினைக்காட்டி என்றுள்ளது ஏடெழுதிஞேர் பிழையாகலாம். சிகாரம் ஆகிய சிவசத்தி எனல் குற்றமே. வகாரம் சிவசத்தியே அன்றிச் சிகாரம் சிவசத்தி அன்று. சிவம் சிவசத்தி இரண்டும் சிகாரம் எனப்பெறின், சிவத்தைக் குறித்த திருவைந்தெழுத்து யாது?

சிவஞானபோதப் பேருரையில், ''மானதம், மந்தம் உரை என உச்சரிக்குமாறு மூவகைப்படும். அவற்றுட் சுத்தமானதம் எனப்படும் அறிவாற் கணித்தலே ஈண்டு உச்சரித்தல் என்பார் (ஒன்பதாவது) சூத்திரத்துள் உச்சரிக்க என்னுது எண்ணுக என்றுர்'' என்று மாதவச் சிவஞானயோகிகள் எழுதியருளியதை அறியக்கடவர் சைவர்.

'வசி' என மாறுதலின் விளக்கம் 'உண்மை விளக்கம்' முதலியவற்றுல் உணரத் தகும்.

''ஆதிமலம் இரண்டும் ஆதியாய் ஓதினுல்
சேதியா மும்மலமும் தீர்வாகா;—போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம்; மாறி
விதிப்படிஓ தஞ்செழுத்து மே.''

(உண்மை விளக்கம் 43)

'மாறுதல்':—'சிவாய நம' என மாறுதல் முதலாகப் பல உள. அவற்றுள், ஒன்றும், முடிவும் ஆகும் 'வசி' என்பது.

''சோதிமிகு நீறதுமெய் பூசியொரு தோலுடைபுனைந்து தெருவே மாதர்மனை தோறும் இசைபாடி வசி பேசும் அரனுர் மகிழ்விடம்...நீடுதவி மாணிகுழியே''(335:-2) என்னுந் திருக்கடைக்காப்பில் 'வசி' என்பது, 'அறிவனூற் பொருளும் உலகநூல் வழக்கும்' ஆகிய இருதிறத்திலும் பொருள் கொள்ள நின்றது. 'அறிவனூற் பொருள்' என்றது ''ஆகமநூல் வழியின் நுதலிய ஞானயோக நுண்பொருள்'' ஆதலைத் திருக்கோவையார்க்குப் பேராசிரியர் எழுதியருளிய உரையின் தொடக்கத்திற் காண்க. இவ்வுண்மையைத் திருவிழாவிற் பிச்சாடனர் திருவுலாவைக் காணப் பெரியோர் பெரிது விழைதலாலும் உணரலாம். அத்திருக்கோலம் மருள்நீக்கித் தெருளளிக்கும் அளவிலாப் பெருமையுடையது.

''இலங்கிய மேனியிராவணனே
யெய்துபெயரு மிராவணனே

கலந்தருள் பெற்றதுமாவசியே
காழியரனடி மாவசியே''

என்னும் திருக்கடைக்காப்பில், திருஞான சம்பந்தர் இத் திருவைந்தெழுத்தை 'மாவசி' என்றுகூறி அதன் மாட்சி தோற்றிக் காட்சி யருளினர்.

''திக்கமர் நான்முகன் மால்அண்ட மண்டலம் தேடிட
மிக்கமர் தீத்திரள் ஆயவர் வீழி மிழலையார்
சொக்கம தாடியும் பாடியும் பாரிடம் சூழ்தரும்
நக்கர்தம் நாமம் நமச்சிவாயவ் வென்பார் நல்லாரே''

எனத் தனியாகத் திருவீழிமிழலையிற் பாடியருளியதோடு, திருநல்லூர்ப் பெருமணத்தில் வந்தவர் அனைவரும் தம் இழிந்த பிறவி தீர்ந்து இறைவன் திருவடி நீழலிற் சேர்ந்து அழிவிலாத இன்பம் ஆர்ந்து வாழ்வுகூர்ந்து விளங்கத் திருவுளங்கொண்டருளிப் பாடிய 'நமச்சிவாயத் திருப்பதிகம்' ஒவ்வொன்றின் ஈற்றிலும் தூலபஞ்சாட்சரத்தை உபதேசித்ததும் சைவ நன்மக்கள் நினைவிற்கொண்டு, தங்கள் கடமைகளுள் திருவைந்தெழுத்தோதும் பழக்கத்தை மேற்கொள்வாராக.

இங்கு இத் திருவைந்தெழுத்துக் குறித்துப் பல அரிய கருத்துக்களைத் தெரிவிக்க எண்ணம் உண்டு. அவ்வளவும் கூற இடன் இல்லை. அதனால், சிலவற்றை மட்டும் தெரிவிக்கின்றேன்.

திருவைந்தெழுத்தில், சிகாரம்-சிவத்தையும், வகாரம் - சிவை (சத்தி)யையும், யகாரம் - தற்போதத்தை (ஆன்மா)வையும், நகாரம் - திரோதானத்தையும் (+ மாயையையும்), மகாரம் - பாசத்துள் முதலாய ஆணவத்தையும் குறிக்கும்.

''சிவசிவைதற் போதம் திரோதானம் பாசம்
இவை யிவையே யஞ்செழுத்தின் எல்லை...''

இப் பஞ்சாட்சரத்தை 'நாவார அஞ்செழுத்தை யோதின் நரகு' என்றருளினர் காழிக்கண்ணுடைய வள்ளலார். அதற்குக் கருத்து, சிவஞானிகள் சீவன்முத்தர்கள் மும்மலம் அற்றவர்களாதலின், அவர்கள் மாயா மல சம்பந்தமான வாக்குடைய நிலையினரைப் போல அநுட்டித்தல் குற்றம் ஆகும் என்பது. அதை,

''நாவார அஞ்செழுத்தை
யோதில்நர கென்றுரைத்தீர்
ஓவாத முத்தர்எலாம்
ஓதுவதென்—பாவாய்கேள்
சொல்லிறந்த அஞ்செழுத்தைச்
சொல்லிறந்த உண்மையிலே
சொல்லிறந்து நின்றோது வார்.''

என்றதால் அறிக. இவ்வுண்மையைத்தான் சிவஞானபோதப் பேருரை விளக்கம் என இக்கட்டுரையிற் காட்டிய வாக்கியம் உணர்த்திற்று.

''நெஞ்சால் நினையும்நெறி யுண்டாகில் நீள்பிறப்பாம்
பஞ்சாக் கரத்தின்அருள் பாராமல்—எஞ்சா
எழுத்தென்று கொள்ளில் எரிவாய் நரகில்
விழுத்துஞ் சிவன்ஆணை மெய்.''

''மாறு வலக்கரத்தாற் பூசிக்கின் மாநரகம்
ஏறு நரகம் இடக்கரத்தால்—கூறுத
அஞ்செழுத்தை நாவால் அறைகுவையே ஆமாகில்
விஞ்சுபிறப் பேழாய் விடும்''

இவையெல்லாம் சிவஞானநிலையில் நிற்பாரைக் குறித்து எழுந்தவை. இவற்றால், 'பேசா எழுத்து' என்றதன் உட்கோள் வெளிப்பட்டது. இதை யோகநிலையில், ''பதுமாசனத்தில் இருந்துகொண்டு தலையும் கழுத்தும் அசையாமல், மகாபஞ்சாக்கர மந்திர தியானமாய், நாவசையாமல், உமிழ்நீர் இறக்கப்படும் இடத்திலே சிம் என்று இருக்கவும். இது பேசாத மந்திரம் எனத் திருநந்தி தேவர் திருமூலநாயனார்க்கு அநுக்கிரகம் செய்தருளியது'' என்னும் ஆன்றோர் எழுதிய வசனமும் இங்கு அறியத்தக்கதாகும். (திருமந்திரம், சிவயோக சிந்தனை பக்கம்: 56 பார்க்க).

''பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே
விழுந்துஅங்கு உறங்கும் வினைவறிவார் இல்லை
எழுத்தறி வோம்என் றுரைப்பர்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்தறி யாரே''

என்னும் திருமந்திரத்தைப் பலமுறை நோக்கியுணர்வது நன்றாகும்.

''நாந்தாதி ஐந்தி னோடே
பாந்தாதி ஐந்தும் கூட்டச்
சேர்ந்தாய வாறே செப்பத் திகழ்தூலம்
சூக்கந் தன்னில்
வாய்ந்தாய பஞ்ச வன்னம்
வகைவகை யுச்சரிக்கச்
சேர்ந்தாய புத்திமுத்தி சேர்வது
திண்ணம் ஆமே''

என்னும் தத்துவரத்தினகர விருத்தம் ஓர் அதி ரகசிய மார்க்கத்தில் திருவைந்தெழுத்தை உணர்த்துகின்றது. இக்காலத்திற் போல முற்காலத்தில் இத் திருமந்திரங்களை வெளிப் படச் சொல்வதும் எழுதுவதும் இல்லை. பொய்வழிச் செலவு வளரவளர மெய்வழிச் செலவிற் கொளுத்த வேண்டி, முன்னோர் நெறியிற் பிறழ்ந்தும் உண்மையை வெளிப் படுத்தத் துணியும் ஆவசியகம் உண்டாய்விட் டது. இது பழங்காலத்துக் கொள்கையிற் பாடப்பட்ட செய்யுள். அதனால் இரகசிய மாக உணர்த்திற்று. இதன் பொருள், சம் பிரதாயம் அறியாதார்க்கு விளங்குவது அரிது. 'தாந்தாதி' 'பாந்தாதி' என்னும் இரண்டு மட்டும் விளங்கினால், இப்பாடற் பொருள் இனிது விளங்குவதாகும். நன்னூற் சூத்திரத்தில், பகரத்தை அந்தமாக உடைய சொல் எனக் குறிக்கத்தக்க இடத்தில், 'பாந்தம்' என்றார். ஆண்டுப் ப+அந்தம் என்பன 'பாந்தம்' என்று புணர்ந்து நின்றன. அவ்வளவில் மட்டும் அப்புணர்ச்சியை ஒப்புக் காட்டலாகக் கொண்டு, 'தாந்தாதி' 'பாந்தாதி' என்பவற்றை உணர்தல்வேண்டும். இப் 'பாந்தாதி'யிற் கொள்ளும் வண்ணம் அப் 'பாந்தம்' என்பதற்குப் பொருள் கொள்ளின் கற்பவர்க்கு நன்னூலார் கருத்துண்டாகாது. அங்குப் பகரத்தினை அந்தமாக உடைய சொல் என்றும், இங்குப் பகரத்திற்கு அந்தமான எழுத்து என்றும் பொருள் கொள்ளவேண் டும். அங்கு செய்ப, கொள்ப, என்ப முதலிய வற்றை உணர்த்துவது எண்ணம். இங்குப் பகரத்திற்கு அந்தமான அடுத்து நிற்கும் மகரத்தை யுணர்த்துவது எண்ணம். அவ் வாறே தகரத்திற்கு அந்தமாய் அடுத்து நிற் கும் நகரத்தை உணர்த்துவது எண்ணம். தந, பம என்பது வழக்கம். அவற்றுள் ஆதி யந்தம் கொள்ள வைத்தார். தாந்தம்—தகரத் திற்கு அந்தமான நகரம். பாந்தம்—பகரத் திற்கு அந்தமான மகரம். இந் நகார மகாரம் இரண்டும் ஆதியாக நின்றது தூலபஞ்சாக் கரம் (நமசிவாய). இது கால முன்னகக் கொண்ட கூற்று. பாந்தாதி—மகாரம் ஆதி யாக நின்றது. அஃது இடம் முன்னகக் கொண்ட கூற்று. அது சூக்கும பஞ்சாக்கர மான சிவாயநம என்பது. இதில் முதல் மூன் றெழுத்தும் இடப்பின்; பின் இரண்டும் இட முன். அவ்விரண்டில் மகாரம்முன். அதையே பாந்தாதி என்றார். தூலபஞ்சாக்கரம் புத்தி யைத் தரும். சூக்கும பஞ்சாக்கரம் முத்தியை நல்கும். அதனால், "தூல சூக்கம்" என்றும் "புத்திமுத்தி சேர்வது திண்ணம்" என்றும் கூறினார்.

---

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

**ஆத்தூர்:**—மாரிமுத்து சுவாமிகள் மடத்தில் ஷை சுவாமிகளது 74-வது குருபூஜை விழா.

**கோயில்குருவித்துறை:**—சித்ரா ரதவல்லப பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா.

**வடுவூர்:**—கோதண்டராமசுவாமி கோயிலில் இராப்பத்து விழா.

**மேலக்கரிவலங் குளம்:**—சுவாமி சௌந்திரபாண்டீசுவரர் கோயிலில் திருவிழா.

**சென்னை, மயிலாப்பூர்:**—கபாலீசுவரர் கோயிலில் பாரத நாடு வட எல்லைப் போரில் வெற்றி காணச் சோமவார 1008 சங்காபிஷேக விழா.

**சென்னை:**—சென்னமல்லீசுவரர், சென்னகேசவப்பெருமாள் கோயிலில் திருவெம்பாவை, திருப் பாவை விழா.

**ஸ்ரீ வில்லிபுத்தூர்:**—நாச்சியார் கோயிலில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா, மார்கழி நீராட்டு விழா.

**கங்கைகொண்ட சோழபுரம்:**—பிரகதீசுவரர் கோயிலில் பெரியநாயகி அம்மைக்கு 8-வது ஆண்டு லட்சார்ச்சனை பூர்த்தி விழா.

**அய்யம்பாளையம்:**—வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலில் திருவாதிரை விழா—அய்யன் குருபூஜை விழா.

**மன்னார்குடி:**—செயங்கொண்டநாதர் கோயிலில் திருவாதிரை விழா.

**கடயம்:**—வில்வவனநாத சுவாமி கோயிலில் திருவாதிரைத் திருவிழா.

# கல்வெட்டும் சமயத் தொடர்பும்

(கோவை திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L., அவர்கள்)

கல்மேல் எழுத்தும் நீர்மேல் எழுத்தும், நிலைமை நிலையாமைத் தன்மைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகத் தமிழ்ப் புலமை கூறுகின்றது. நிலைமைக்கு ஏற்ற இடமாக இருப்பது கோயில் கற்சுவர்களே. ஆகவே, அவைகளில் செய்திகளைப் பொறித்துவிட்டால் பின் வருபவர்களுக்குத் தாம் எண்ணிய செய்திகளை நன்கு உணர்த்த முடியும். கோயில்களில் பொறிக்கப்பட்ட செய்திகள் அக்கோயில்களுக்குத் தந்த தானதருமங்கள் கொடைகள் என்பவையே முதன்மை நோக்கமாக இருந்த போதிலும், அவைகளை விவரிக்கும்பொழுது ஏனைய வரலாற்றுச் செய்திகளும் அவைகளோடு சேர்ந்துவிடும். ஆகவே நாட்டு வரலாறு, மக்கள் வரலாறு, அரசியல் முறை, வாணிபம், எழுத்தின் வளர்ச்சி, இலக்கியப் பகுதி, நாட்டு வழக்கங்கள், நீதிமுறை, உலக வாழ்க்கைச் செய்திகள், போர், நற்கலைகள் முதலான பல விவரங்களும் கல்வெட்டுக்களில் தெரிகின்றன.

என்றாலும் சிறப்பாகக் கோயில் கல்வெட்டுக்கள் சமய சம்பந்தமான செய்திகளே கூற வந்தவையாகும். இந்தக் கலியுகத்தில் யாகங்களைக் காட்டிலும் தானங்களே புரிய வேண்டும் என்றும் அவைகளே புண்ணியம் பயக்கும் என்றும் அற நூல்கள் கூறியபடியால், முன்னோர்கள் தானங்களைச் செய்து கற்களில் அழிந்து போகாதபடி பொறித்து வைத்தார்கள். இந்தப்படி செய்த தானக் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு பழைய கோயிலிலும் உண்டு. எல்லாச் சமயத்தார்களும் இச்செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். பௌத்த, ஜைன, சைவ, வைணவக் கோயில்கள் எல்லாவற்றிலும், காணலாம். இவைகளில் தானங்கள் மட்டும் அன்றி மற்ற செய்தியும் சமய ஒழுக்கங்களும் போதிக்கப்பட்டுள்ளன. 22, 23 நூற்றாண்டுகளின்முன் அசோகன் பௌத்த நெறிகளையும் ஒழுக்கங்களையும் மக்களுக்குப் போதிக்கக் கற்றூண்களில் வெட்டி வைத்தான். பிற்காலங்களில் சைவ வைணவ நெறிகள் சில ஆலயங்களில் புகட்டப் பெற்றன.

அந்த வகையில் தேவாரப் பிரபந்தப் பாடல்கள் சில காணப்படுகின்றன. சமயப் பிரசாரம் இந்த வகையில் நடைபெற்றது.

காஞ்சியில் ஆயிரக்கால் மண்டபத்தின் முகட்டில் சில வடமொழிச் சுலோகங்கள் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. இன்னும் பல கோயில்களில் துதிப்பாடல்கள் எழுதப் பெற்றிருக்கின்றன. திருச்சிக் கோட்டைக் கல்மண்டபத்தில் 'திருச்சிராப்பள்ளி அந்தாதி' ஒன்று கலித்துறையில் ஒருபழம் புலவர் இயற்றி அதை முழுவதும் பொறித்துள்ளார். இவ்வாறு தலத் தெய்வங்களின் துதிப் பாடல்கள் பல தற்போது கிடைத்திருக்கின்றன.

இனி சமயமாற்றமும் பண்டைக் காலத்தில் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்பர் சமணசமயத்திற்குச் சென்று பிறகு சைவத்திற்குத் திரும்பி வந்தது திருத்தொண்டர் புராணத்தினல் அறிகிறோம். அக்காலத்து அரசன் மகேந்திரன், சைவன் ஆகிப் பல கல் மண்டபங்களை வெட்டுவித்தான் என்பதும் அறிகிறோம். இதனை நிரூபிக்கும் கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளில் பழமையானது மண்டகப்பட்டுக் குடைவரைக் கோயிலில் உள்ளது ஒன்றாகும்.

மேலும் திருச்சிக் குடைவரை மண்டபத்தில் உள்ள ஒரு கல்வெட்டும் அவன் சமணத்திலிருந்து சைவத்திற்குத் திரும்பின செய்தியை ஒருவாறு கூறுகின்றது. மத்திய இந்தியாவில் யவன நாட்டரசன் ஒருவன் பாரத நாட்டிற்கு வந்து அரச கன்னிகையை மணந்துகொண்டு, வாசுதேவன் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டு, இங்கேயே தங்கினதாக ஒரு கல்வெட்டு நடுநாட்டுக் கோயிலில் இருக்கின்றது.

மேலும் கோயில்கள் புதிதாகக் கட்டுவது புதுப்பிப்பது முதலிய செய்திகளும் கல்வெட்டுக்களினல் அறிகிறோம். மேலே கூறிய ஆர்க்காட்டு வட்டம் மண்டகப்பட்டில் குடைவரைக் கோயிலிலுள்ள கல்வெட்டு அது செதுக்கப்பட்ட செய்தி கூறுகிறது. அது பல்லவன் மகேந்திரனுடையது. "கல்லில்லா

மலும், மரம் இல்லாமலும் உலோகம் இல்லாமலும் சுண்ணும்பு இல்லாமலும் பிரம்மா, ஈசுவரன், விஷ்ணு ஆகிய மூவர்க்கும் இருப்பிடமாகவும்'' அக்கோயில் அமைக்கப்பட்டது என்று அந்தச் சுலோகம் கூறுகிறது.

இதனுலே அதற்குமுன் கோயில்கள் செங்கல் சுண்ணும்பு மரம் உலோகம் ஆகியவற்றுல் கட்டப்பட்டன என அறிகிறேம். அவைகள் அழிந்துவிடும் என்று எண்ணிய மகேந்திரன், பாறைகளைக் குடைந்து நிலையாகக் கோயில்களை எழுப்பினும். முன் இருந்த செங்கற் கோயில்கள் பல கருங்கற் கோயில்களாகச் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டன. அவைகளில் சிறந்த திருப்பணி செய்தவர் செம்பியன் மாதேவியார் என்ற அரசி ஆவார். தஞ்சைத் திருக்கோடிகாவில் இந்த அரசியார் (36—1931) அவ்வூர்ச் செங்கற் கோயிலைக் கருங்கல்லாகச் சமைத்தார் என்று கூறுகிறது. இவ்வாறு வேறு பல கோயில்களையும் இந்தத் தேவியாரே செய்திருக்கிறர்கள். அக்காலத்தில் இருந்த பழைய சாசனங்களையும் புதிய கோயில்களில் பொறித்தார்கள் என்று அறிகிறேம். இவ்வாறு அந்தப் புனித தேவியார் திருப்பணிகள் 26 கல்வெட்டுக்களில் உள்ளன. வரலாற்று ஞானம் பண்டைய மக்களுக்கு எப்படி மிக உறுதியில் இருந்தது என்று கூறவும் வேண்டுமா?

இந்த வகையில் நமது தென்னுட்டில் கோயில் கட்டினதும் அவைகளைப் புதுப்பித்ததும், அவைகள் நன்கு நடைபெற நிலங்களையும் வரிகளையும் அளித்ததும், விளக்குகளை வைக்கவும் நைவேத்தியப் பொருள்களை வாங்குவதற்கும் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கும் திருவிழாக்களை நடத்துவதற்கும், ஆராதனைகளுக்கு நந்தவனங்களை வைத்துக் காப்பாற்றுவதற்கும் தவசிகளுக்கு உணவளிப்பதற்குமாக அத் தானதருமங்கள் செய்யப்பட்டன. இவைகள் எல்லாம் சமயப் பரப்பிற்காகவே செய்யப்பட்டன.

மேலும் நுந்தா விளக்குகளை வைப்பதற்குக் கால்நடைகள், சிறப்பாக 'சாவா மூவாப் பேராடுகள்' தரப்பட்டன. அரசர்களும் அவர்களுடைய தேவிமார்களும் தாங்கள் பிறந்த திருநாள்களில் சிறப்புக்களை நடத்த நிலமும் பொன்னும் தந்தார்கள். மேலும் கோயில் ஆராதனைகளுக்காகப் பூங்காக்கள் வைப்பதற்கு இடமும் நீர்பாய்ச்சலுக்காகக் குளங்களும் கால்வாய்களும் அவைகள் செப்பனிடுவதற்குப் பொன்னும் தரப்பட்டன. இப்படிப்பட்ட சாசனங்கள் ஆயிரக்கணக்காக இருப்பதைப் பார்த்தால் மக்களுக்குச் சமய ஈடுபாடு எந்த முறையில் இருந்தது என்று கூறவும் வேண்டுமா?

சமயப் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் சோழ மன்னர்கள் கோயில்களில் பெரிய மண்டபங்களைக் கட்டி அவைகளில் தேவாரத் திவ்யபிரபந்தங்களை ஓதுதற்கு ஏற்பாடுகள் செய்தது மிகப் பிரசித்தமானதே. தஞ்சைப் பெருங்கோயிலிலே இந்தச் செய்தி மிகவும் புகழ்பெற்ற நிலைமையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. 50 பேர் இப்புனிதத் தொழிலை நடத்தப் போதுமான நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன. இதுபோலவே பல கோயில்களிலும் காண்கிறேம்.

கோயில்களைக் கட்டினது மட்டுமேயன்றி, படிமங்களை வார்த்துக் கோயில்களில் ஸ்தாபித்தும், அந்தப் படிமங்களுக்கு மிக விலையுயர்ந்த ஆபரணங்களைச் செய்து பூட்டினதும், திருவிழாக்களில் உலா நடத்த ஏற்பாடு செய்ததும் வியக்கத்தக்கன. இந்த முறை தஞ்சைக் கோயிலில் மட்டுமேயன்றிப் பல பெரிய கோயில்களிலும் செய்யப்பட்டது. அத்திருப்பணிகளில் சோழ மன்னர்களும் அவர்களின் தேவிமார்களும் ஈடுபட்டதும் அன்றிப் பாண்டிய மன்னர் காடவ மன்னர் (கோப்பெருஞ்சிங்கன்) முதலியோர் ஈடுபட்டிருக்கிறர்கள். பவானி கோயிலுக்குப் பிற மதத்தினர் ஆன ஒரு வெள்ளையனும் தந்தப் பல்லக்கை சயனச் விழாவிற்கு அளித்தது இங்கே குறிப்பிடத்தக்கது. தேர் வாகனம், பரிவட்டம், பூசைச் சாமான்கள் முதலியவைகளும் அன்பர்கள் அளித்துள்ளார்கள்.

மேலும் திருக்கோயிலுக்கு ஒட்டினுற் போலக் கல்லூரிகளையும் நடத்தி வந்திருக்கிறர்கள். தென்னுர்க்காடு வட்டத்தில் எண்ணுயிரம் என்ற ஊரில் இராசேந்திரன் காலத்துக் கல்வெட்டு ஒன்றினுல் வேதம், வேதாந்தம், தர்க்கம் வியாகரணம் முதலியவற்றைக் கற்பிப்பதற்குப் பதினுன்கு ஆசிரியர்களையும் முந்நூற்று நாற்பது மாணவர்களையும் கொண்ட ஒரு கல்லூரியை ஸ்தாபித்து அன்னுருக்கு உணவு வசதிகளை ஏற்படுத்த இரண்டு கிராமங்கள் அளிக்கப்பட்டன

# மலைநாட்டுத் திருப்பதி யநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. **அண்ணங்கராசார்ய சுவாமிகள்**, காஞ்சிபுரம்]

“அமரராய்த் திரிகின்றார்கட்கு” என்பதனால் பிரமன் முதலான அமரர்கள் வந்து பணிவது சொல்லப்படுகிறது. அவர்கள் திருநாபியைக் காட்டும் திருவாசலிலே புகுவார்களாம். “நமர்களோ சொல்லக் கேண்மின் நாமும் போய் நணுகவேண்டும்” என்பதனால் ஆழ்வாருபதேசங் கேட்ட சிஷ்யர்களான நம் போன்றவர்கள் சென்று பணியவேண்டுவது சொல்லப்படுகின்றது. இவர்கள் திருவடியைக்காட்டுந் திருவாசலாலே புகக்கடவர்கள். ஆக, மூவகை யதிகாரிகட்கு மூன்று திருவாசல்கள் அமைந்தனவென்று கொள்வதற்கு இப்பாட்டு மிகமிக இணங்கியிருக்கின்றதென்று கொள்க.

**நமர்களோ சொல்லக் கேண்மின்:** மேலே எட்டாம் பாட்டிலும் “நடமினோ நமர்களுள்ளீர்” என்கிறார்; இப்பாட்டிலும் “நமர்களோ! சொல்லக்கேண்மின்” என்கிறார். இவற்றால் ஆழ்வாரோடு நமக்கு ஸம்பந்தம் வேணுமென்றிருக்குமவர்கள் திருவனந்தபுரஞ் சென்று அவசியம் ஸேவித்தாகவேண்டுமென்பது பெறப்படும். மற்ற திருப்பதிகள் திறத்தில் இங்ஙனே வாக்குக் காணாமையாலே இத்தலத்திற்கு இது விசேஷித்துச் சொல்லப்படுவதாகத் தெரிகின்றதல்லவா?

குமரனார் தாதை துன்பந்துடைத்த செய்தி “வெந்தாரென்பும் சுடுநீறும் மெய்யில் பூசிக் கையகத்து, ஓர் சந்தார் தலைகொண்டுலகேழுந்திரியும் பெரியோன் தான் சென்று, என் எந்தாய்! சாபந்தீரென்ன இலங்குமுதநீர் திருமார்பில் தந்தான்” என்றும் “கண்ட கடலும் மலையுமுலகேழும் முண்டத்துக்காற்றா முகில்வண்ணா! ஓவென்று இண்டைச் சடைமுடி யீசனிரக்கொள்ள, மண்டை நிறைத்தானே!” என்றுமுள்ள பாசுரங்களில் விளங்கக் காணத்தக்கது......

7. துடைத்த கோவிந்தனாரே! உலகுயிர்
தேவும் மற்றும்
படைத்தவெம் பரமமூர்த்தி பாம்பணைப்
பள்ளி கொண்டான்
மடைத்தலை வாளைபாயும் வயலணி
யனந்த புரம்
கடைத்தலை சீய்க்கப் பெற்றால்
கடுவினை களையலாமே.

உலகங்களையும் மநுஷ்யாதி பிராணிகளையும் தேவஜாதிகளையும் மற்றும் ‘மஹான்’முதலிய தத்துவங்களையும் ஒன்றொழியாமல் ஸம்ஹரித்த பெருமாள்தானே அவற்றையெல்லாம் மறுபடியும் படைத்தருளின பரமபுருஷன்; அப்பெருமான், நீர் நிலங்களிலே வாளை மீன்கள் களித்துப்பாய நின்ற வயல்களை அலங்காரமாகக்கொண்ட திருவனந்தபுரத்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்று காண்கிறோம். (1917—333 கல்வெட்டு) இதன் முழுவிவரங்களும் நன்கு விரிக்கப்பட்டுள்ளன. இதைப்போல வேறு சில தானங்களும் பிற கோயில்களில் காணலாம். திருமுக்கூடலில் ஒரு ஆதுலர்சாலையும் (மருத்துவ சாலை), மருத்துவம் கற்பிக்கும் ஒரு கலாசாலையும் வைக்கப்பட்டதாகவும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. இவையெல்லாம் சமயநிலையங்களை ஒட்டியே உள்ளன.

கிறிஸ்தவப் பாதிரிகள் இந்தக் காலத்தில் இம்முறையைத் தழுவிச் சமயசேவை செய்கின்றனர். தென்னாட்டில் முன்காலத்திலேயே நமது மன்னர்கள் அச்சேவை செய்து வந்தார்கள். இடைக்காலத்தில் இந்தப் புனிதச்செயல் நின்றுவிட்டது. தற்காலத்தில் நமது அறநிலையத்தார் இந்தத் திருப்பணியில் இறங்கியிருக்கும் கருத்து மிகவும் போற்றத்தக்கது அல்லவா!

இந்த முறையில் கல்வெட்டுக்கள் மூலமாகச் சமயப்பணிகள் எவ்வாறு செய்யப்பட்டன என்று நன்கு அறிகிறோம். அவைகளை நிர்ணயிக்கும் சான்றுகள் நிரம்ப இருக்கின்றன. இவைகளை நன்கு ஆராய்ந்து நம் பிற்காலப் பணிகளை நாம் வகுத்துக் கொள்ளுவோமாக.

திலே ஆதிசேஷ சயனத்திலே பள்ளிகொண்டருளாநின்றான்; அவ்விடத்தே சென்று திருவாசல் விளக்குதல் முதலிய கைங்கரியங்களைச் செய்யப்பெற்றால் கொடிய பாவங்களைப் போக்கிக்கொள்ள இயலுமென்கை.

திவ்ய தேசங்களிலே பலவகைக் கைங்கரியங்களைச் செய்யக் கடமைப்பட்டவர்கள்; கைங்கரியம் மூவகைப்படும், மனத்தினால் செய்வது, வாக்கினால் செய்வது, உடலினால் செய்வது. மனத்தினால் செய்வது நிற்க. வாக்கினால் செய்வதும் உடலினால் செய்வதும் சிறக்கும். வாக்கினால் செய்வது வேதபாராயணம், திவ்வியப் பிரபந்த சேவை தோத்திர பாடம் முதலியன. உடலினால் செய்வது பெருமாளை யெழுந்தருளச் செய்தல், குடைபிடித்தல் சாமரை வீசுதல் முதலிய பல்வகைப் பணிகள். இவை தவிர, பொருளினால் செய்யும் பணிவிடையுமுண்டு. பணம் படைத்த தனிகர்கள் செய்யக்கூடியதாமது. ஆனால் அக்கைங்கரியத்தை எம்பெருமான் அவ்வளவாக உகந்துகொள்வதில்லை, ஏனென்னில், உலகில் மக்களுக்கு உடலில் அபிமானம் அதிகமா? பொருளில் அபிமானம் அதிகமா? என்று பார்ப்போம். குற்றஞ் செய்து நீதிமன்றத்தில் கைது செய்யப்பட்ட வொருவனுக்கு "ஆயிரம் ரூபா அபராதம்; அது செலுத்தத் தவறினால் ஒருமாதம் கடுங்காவல்" என்று தண்டனை விதிக்கப்பட்டால், பொருளில்லாதவனுங்கூட எப்படியாவது பொருள் திரட்டி அதைச் செலுத்த முற்படுகிறானேயொழிய தேஹதண்டனையை ஏற்றுக்கொள்ள இசைவதில்லை. இதனால் என்ன அறிகிறோம்; பொருளை அலக்ஷியஞ் செய்தும் தேஹத்தையே போரப்பொலிய அபிமானிப்பதாக அறிகின்றோம். நாம் எதை விசேஷித்து அபிமானிக்கிறோமோ அதைத்தான் எம்பெருமானும் விசேஷித்து உகந்தருள்வன். நாம் பொருளை வெறுத்து உடலை மிக மிக அபிமானிக்கின்றோமாதலால் இவ்வுடலினால் செய்யும் கைங்கரியத்தையே எம்பெருமான் உகந்தருள்வன்.

மற்றுமொன்று பாருங்கள். தேவாலயங்களில் திருத்தேர்த் திருநாள் நடைபெறுகின்றது. அத்திருத்தேரை யிழுக்கப் பலர் வேண்டியிருக்கிறது. 'தேரிழுக்க வாரும்' என்று சில பெரிய மனிதர்களை யழைத்தால் 'வேணுமாகில் எவ்வளவும் பொருள் தருகிறேன்; தேரையிழுக்க நான் வர இயலாது' என்பர். இதனாலும் மக்களுடைய தேகாபிமானம் விளங்காநின்றது. இத்தகைய தேகத்தைக்கொண்டு செய்யும் பணிவிடையே எம்பெருமானுக்கு மிகவுகப்பாகும். ஆகவே இப்பாட்டில் "அனந்தபுரம் கடைத்தலை சீய்க்கப் பெற்றால்" என்கிறாராழ்வார். கீழே ஒன்பதாம்பத்திலும் (2-1.) "பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங் கொண்டு, நின் கோயில் சீய்த்துப் பல்படிகால் குடிகுடி வழி வந்தாட் செய்யுந் தொண்டரோர்க்கு அருளி" என்றருளிச் செய்தார். கடைத்தலை சீய்க்கையென்றாலும் கோயில சீய்க்கை யென்றாலும் பொருள் ஒன்றே. பெருக்கி மெழுகிக் கோலமிடுதலாகிற கைங்கரியமிது.

முந்துற முன்னம் "உலகுயிர் தேவும் மற்றும் துடைத்த கோவிந்தனே" என்று ஸம்ஹாரத்தைச் சொல்லி, பிறகு "படைத்த வெம் பரமமூர்த்தி" என்றது வேதாந்த நூற்கொள்கையைக் காட்டினபடி. (அதாவது) வேதாந்தங்களில் "அப்யயபூர்விகா ஸ்ருஷ்டி:" என்பதொரு முறையுண்டு. எம்பெருமான் பிரபஞ்சங்களை முதன் முதலாகப் படைப்பதென்பது யார்க்கும் அறிவரிது. உலகப் படைப்பு தொடங்கியது என்றைக்கு? என்பது தெரியாது. "ஸூர்யா சந்த்ரமஸௌ தாதா யதாபூர்வம் அகல்பயத்" என்று உபநிடதம் ஓதுகின்றது. முன்னிருந்தபடியே படைத்தானென்றவாறு. 'முன்னிருந்தபடியே, முன்னிருந்தபடியே' என்று சொல்லுவதன்றிப் புதியபடி யாதுமில்லை. ஆகவே முன்னம் தெரிவது ஸம்ஹாரந்தான். அதற்கிணங்கவே இங்கு "துடைத்த கோவிந்தனே......படைத்த வெம்பரம மூர்த்தி" என்றது.

**பாம்பணைப் பள்ளிகொண்டான்** கீழே "உலகுயிர் தேவும் மற்றும் படைத்த" என்றது; அங்ஙனம் படைக்கப்பட்ட உலகங்களைக் காப்பதற்கான உபாயத்தைச் சிந்தனை செய்வதற்காகத் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளுகிறபடி. அப்படிக் கண் வளர்ந்தருள்பவனுடைய அனந்தபுரம் என்று அந்வயம்....(7)

(தொடரும்)

# சிவஞானபோதம்

[திரு க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., காஞ்சிபுரம்]

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

5-ஆம் சூத். 2-ஆம் அத்.

'ஐம்பொறிகள் ஆன்மாவால் விளக்கம் உடையனவாய்ப் புறப்பொருள்களை அறிந்து வரும்; ஆயினும், அவை தம்மையும் அறிவதில்லை; தம்மை உடனின்று செலுத்திநிற்கும் ஆன்மாவையும் அறிவதில்லை' என்னும் உண்மை மேலை அதிகரணத்தில் விளக்கப்பட்டது. இங்கு அதனை உவமையாக வைத்து 'அவ்வான்மாவும் முதல்வன் உபகாரத்தை இன்றியமையாது' என்னும் உண்மை துணியப்படுகிறது.

சூத்திரப் பகுதி.—'ஆங்கவைபோலத் தாம் தம் உணர்வின் தமியருள் (ஆல் அளந்தறிந்தும் அறியா); காந்தம் கண்ட பசா சத்து அவையே!'

வார்த்திகம்;—'இனி அதுவும் தமது முதலாலே உணரும் என்றது, இவ்வான்மாத் தன்னாலே உணரும் இந்திரியங்களைப்போலத் தானுந் தன்னை உணராது நிற்றலான்.

1. இங்குத் தன்றாற் கூறப்படும் பொருள் :

உயிர் உடம்போடு கூடிநின்றே உலகப் பொருள்களை அறிந்துவரும் என்பதுதெளிவு; அவ்வாறு அறிந்துவரும்போது, அதற்கு உடம்பின் துணைமட்டும் போதாது. முதல்வன் திருவருளின் உதவியும் வேண்டும். காந்தக் கல்லின் அணிமையில் உள்ள இரும்பு இயங்குகிறது. அவ்வியக்கத்திற்கு அடிப்படைக் காரணமாகக் காந்தத்தின் ஈர்ப்பு ஆற்றலை உடன்படுகின்றோம். ஆயினும் அவ்வாற்றல்கூடப் புலனாதலில்லை. அதுபோல, நம் அறிவில் தட்டாது நின்றே, முதல்வன் திருவருள் நம் அறிவுக்கு விளக்கத்தைக் கொடுத்து உடம்பைப்பற்றவும், பற்றிநின்று பிறபொருள்களை உணரவும் உதவி வருகின்றது. இங்ஙனம் தன்னைக் காட்டாது உயிர்களுக்கு உபகரித்துவரும் முதல்வன் ஆற்றலுக்கு மறைப்பாற்றல் (திரோதான சத்தி) என்பது பெயர். இது திருவைந்தெழுத்தில் ந என்னும் எழுத்தால் குறிக்கப்படுவது; இதனால் உயிரின்கண் நிகழும் செயல் முதல்வன் ஐந்தொழில்களுள் ஒன்றாக வைத்து, மறைத்தல் (திரோபவம்) எனக் கூறப்படும்.

2. ஐயப்பாடு;

உயிர் முதல்வன் உபகாரத்தைப்பெற்றே அறிந்து வருகிறதோ, பெறாதே அறிந்து வருகிறதோ என இரட்டுறத் தோன்றும் உணர்வு.

3. பிறர்கூறும் பக்கம்:

ஐம்பொறிகள் அறிவில்லவை (சடம்). ஆதலால், அவை உயிரால் செலுத்தப்பட்டுப் பொருள்களை அறியும் என்பது பொருந்தும். உயிர் அறிவுடைப்பொருள் ஆதலின், அது முதல்வன் உபகாரம் பெற்றே அறியும் என்பது பொருந்தாது, உடம்பும் அதன்கண் உள்ள கருவிகளும் ஆயவற்றோடு கூடிய அளவானே அறியும் எனக் கொள்வதே பொருத்தமாம். அன்றியும் ஐம்பொறி உவமைபற்றி உயிர்க்கு உணர்த்துதற்கு ஒரு முதல்வன் வேண்டும் என்போம் ஆயின், அக் காரணம்பற்றி, முதல்வனும் தான் உயிர்களுக்கு உணர்த்துவதற்கு வேறொரு முதல்வனின் உதவியை வேண்டிநிற்பன் எனப்படும். படவே, வரம்பின்மை (அநவத்தை) என்னும் குற்றமாம். இங்ஙனம் கூறி மறுப்பவர் சாங்கியர்.

மேலும், உயிர் ஐம்பொறிகளைச் செலுத்தி அறிவதால் வரும் பயன் உயிர்க்கு ஆகிறது. அதுபோல, முதல்வன் உயிர்களைச் செலுத்தி அறிவிப்பான் எனின், அவ்வறிவால் வரும் உலக நுகர்ச்சி முதல்வனுக்கு உண்டு எனல்வேண்டும். இன்னும், ஓரே முதல்வன் பல்லுயிர்களையும் பலவகையிற் செலுத்தி உணர்த்தி வருதலின், அதனால் அவன் செயற்கைக் குணங்களோடு சம்பந்தப்பட்டு விகாரமுறுவன் எனவும் வேண்டும். ஆதலால், உயிர்கள் முதல்வனது உபகாரம் இன்றியே உடம்பைச் செலுத்தி உணரும் எனக்கொள்வதே பொருத்தமாம். இங்ஙனம்

கூறி மறுப்பவர் ஈசுவர அவிகார வாதிகள் எனப்படுவர்.

## 4. இவற்றை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு;

ஐம்பொறிகள் அறிவில்லனவாகவும் உயிர் அறிவுள்ளதாகவும் இருக்கும் வேறுபாடுபற்றி இவை இரண்டும் தம்முள் ஒவ்வா என்றது பொருந்தும்; ஆயினும், தம்மை உணரமாட்டாமையும் தமது முதலை அறியமாட்டாமையும் ஆகிய பொதுத்தன்மையால் தம்முள் ஒக்கும். இனி, அறிவிக்க அறியும் முறைமை தமக்கு ஒரு முதல் உடையவற்றுக்கேயன்றி, தனக்கு மேலொரு பொருளும் இல்லாத முழுமுதலுக்கு அம்முறைமை இல்லை என்பதும் உணரத்தக்கது. இதனால் சாங்கியர் எழுப்பிய தடை, தடையன்று என்பது விளங்கும். இம்மறுப்பு வார்த்திகத்தில் உள்ள சொல்லமைதியாலும் அதன் செம்பொருளாலும் பெறப்படுதல் காண்க. சிற்றறிவுள்ள உயிர்களுக்குத்தான் அறிவிக்கும் முதல் வேண்டப்படும்; இயற்கை முற்றுணர்வுடைய முதல்வனுக்கு வேறொரு முதல்வன் வேண்டப்படுதல் இல்லை என்றபடி.

இனி, ஈசுவர அவிகாரவாதியின் தடை பின்வருமாறு விடுக்கப்படுகின்றது:—உயிரால் செலுத்தப்பட்டு உணரும் ஐம்பொறிகளுக்கு வரும்பயன் உயிர்க்கே ஆனதுபோல, உயிர்க்கு வரும் இன்பத்துன்பங்கள் அதனைச் செலுத்தியறிவிக்கும் முதல்வனுக்கும் ஆம் என்பது ஒவ்வாது. "அவன்றன் (அருள்) ஒளியால் இது முழுவதும் விளங்குகிறது" (தஸ்ய பாஸா ஸர்வம் இதம்விபாதி) என்றாற்போல வரும் உரையளவைகளால், முதல்வன்றன் அருள் நினைவால் உந்தப்பட்டே உலகெலாம் தொழிற்படும். திருவருளின் முந்தும் தன்மையே சந்நிதி எனப்படும். பொறிகள் தமக்கெனத் தொழிற்படாமல் உயிர்க்காகவே அதனாற் செலுத்தப்பட்டுத் தொழிற்படுகின்றன. ஆனால், உயிர் தான் செய்தவினைக்கீடாக ஒன்றனை அறிந்து நுகர்தற்பொருட்டுப் பேரின்ப காரணனாகிய சிவன் அதனைச் செலுத்துகின்றான்; ஆதலால், தூய அருள் உருவினனாகிய சிவன் நன்மையில்லாத அசத்தாகிய உலகப் பொருள்களை நுகரான். அவன் பேரறிவின்முன் உலகம் ஒரு பொருளாக முனைந்து தோன்றாது.

மன்னுசிவன் சந்நிதியில்
மற்றுலகம் சேட்டித்த(து)
என்னும் மறையின்
இயல்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணா உளம்வினையாற்
கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணான் சிவனசத்தை இன்று.

அங்ஙனமாயின், சிவன் உலகத்தைச் சேட்டிப்பிக்கும்போது, ஒன்றாய் நின்றோ வேறாய்நின்றோ சேட்டிப்பிப்பது எனின், அவ்விருதன்மைக்கும் பொதுவாயுள்ள இருமை ஒருமை எனப்படும் உடனாய்நிற்குந் தன்மையில் என்பது விடை.

வியாழன், வெள்ளி முதலிய கோள் மீன்கள் தமக்கென ஒளியில்லன; ஆயினும் ஞாயிற்றின் ஒளியைப் பெற்று அதனால் விளங்கி, தம் ஒளி ஞாயிற்றின் ஒளியில் அடங்குவதாய் அதனின் வேறாதலும் ஒன்றாதலும் இன்றி உடனாய் நின்றவாறு போல, உயிரின் அறிவும் முதல்வன் திருவருளும் நிற்கும் எனக் கொள்க.

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனைக்
கண்டுடனாய் மன்னுதலைக் காண.

உயிர்களின் அறிவு பல்வேறு வகையாயிருத்தலின், அங்ஙனம் பல்வேறு வகைப்பட உணர்த்தும் முதல்வன் விகாரம் எய்துதல் கூடும் அன்றோ எனின், கூடாது

ஈசன் இயற்கை முற்றுணர்வுடையன்; ஆதலால், உயிர்கட்குத் தளைப்படும் தன்மையின் நீக்கித் தன்வண்ணமாக்கி இன்புறுத்தும் இரக்ககுணம் அவனுக்கு அநாதியே உள்ளது. அதுவே சத்தி எனப்படும். ஞாயிறும் அதன் ஒளியும் ஒருமையின் இருமையாந் தன்மையில் நிற்றல் போலச் சிவனும் சத்தியும் ஒருமையின் இருமைப்பட்டு உலகெலாம் ஆண்டுநிற்பர். ஞாயிற்றின் ஒளியைப் பெற்று அரும்பவேண்டுவது அரும்பியும், மலரத்தக்கது மலர்ந்தும், உலரத்தக்கது உலர்ந்தும் வருதல்போல உலகு பல்வேறு வகைபடத் தொழிற்பட்டுவரும். அதுபற்றி முதல்வன் விகாரி ஆதல் இல்லை.

அருளுண்டாம் ஈசற்(கு) அதுசத்தி யன்றே
அருளும் அவனன்றி இல்லை—அருளின்(று)
அவனன்றே இல்லை அருட்கண்ணார் கண்ணுக்(கு)
இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து.

இதனைக் "குவளைக் கண்ணி கூறன் காண்க! அவளுந் தானும் உடனே காண்க!!" "காண்பார் ஆர்? கண்ணுதலாய்க் காட்டாக் காலே" என்றாற்போல எழுந்த உண்மை மறைகளால் தெளிக! ஐந்தாம் சூத்திரம் முற்றிற்று.

# அர்த்த நாரீசுவரர்

## முன்னுரை

சிவபெருமானது திருவுருவங்கள் பலவற்றுள் "அர்த்தநாரீசுவர மூர்த்தம்" என்பது ஒன்று. 'அர்த்தம்' என்பது பாதி. 'நாரி' என்பது பெண். சிவபெருமான் தன் உருவத்திற் பாதி ஆண் உருவமும், பாதி பெண் உருவமும் கொண்டு விளங்குகின்றான். எனவே, சிவபிரானுக்கு 'அர்த்தநாரீசுவரன்' என்பதும் ஒரு பெயர் ஆயிற்று. "மாதியலும் பாதியன்" "மாதொரு பாகன்" "மங்கை பங்கன்" எனவும் சிவபெருமானுக்குப் பெயர்கள் வழங்கும்.

## அம்மையப்பர்

"அர்த்தநாரீசுவரர்" என்பதனைத் தமிழில் "அம்மையப்பர்" எனவும் வழங்கலாம். இறைவன் பெண் வடிவம் பாதியும், ஆண் வடிவம் பாதியுமாக விளங்குதல், அவனே உலகுயிர்கள் அனைத்திற்கும் தாயும் தந்தையுமாக விளங்குகின்றான் என்னும் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. எனவே, அப்பெருமானை "அம்மையப்பர்" என வழங்குதல் மிகவும் பொருத்தமேயாகும். கடவுள் நம்பிக்கையும் கொள்கையும் இல்லாதவரும்கூட, உலகில் தாய்தந்தையரின் சிறப்பினையும் இன்றியமையாமையினையும் மறுத்தல் இயலாது. எனவே, நம் முன்னைத் தமிழ்ச் சான்றோர்கள் கடவுளை "அம்மையப்பர்" எனக்கொண்டு சிறப்புற வழிபட்டுப் போந்தனர்.

> "அம்மையப்ப ரேஉலகுக்கு
> அம்மையப்பர் என்றறிக
> அம்மையப்பர் அப்பரிசே
> வந்தளிப்பர்—அம்மையப்பர்
> எல்லா உலகுக்கும்
> அப்புறத்தார்! இப்புறத்தும்
> அல்லார்போல் நிற்பர் அவர்"
>
> —திருக்களிற்றுப்படியார்.

## சங்க நூல்கள்

உலகிற் சில மதங்கள் கடவுளை ஆணாக வைத்துப் போற்றுகின்றன. மற்றும் சில மதங்கள் கடவுளைப் பெண்ணாக வைத்துப் போற்றுகின்றன. ஆனால் தமிழர்கள் தொன்றுதொட்டே கடவுளைத் தனியே ஆணாகவோ பெண்ணாகவோ கருதாமல், இருகூறும் இயைந்த நிலையில் இனிது வழிபட்டு வருகின்றனர்.

> "நீல மேனி வாலிழை பாகத்து
> ஒருவன் இருதாள் நிழற்கீழ்
> மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே"

என ஐங்குறுநூறு என்னும் சங்கநூல், அர்த்தநாரீசுவர மூர்த்தத்தின் அருமைப் பாட்டினை வியந்து துதிக்கின்றது.

> "பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
> தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"

எனப் புறநானூறு இதனைப் போற்றுகின்றது. இவ்வாற்றால் மிகப் பழைய காலத்திலேயே, தமிழ்ப் பெருஞ்சான்றோர்கள், இறைவன் "மாதியலும் பாதியன்" என்னும் நிலையில் விளங்கும் மாண்பினைப் போற்றி மகிழ்ந்த தன்மையினை, நாம் நன்கினிது உணரலாம்.

எகிப்து பாபிலோனியா சாலடியா பினிசியா அசிரியா கிரீசு இத்தாலி மெக்சிகோ பெரு முதலிய நாடுகளிலும்கூட, ஒருவகையில் இத்தகைய கருத்தும் வழிபாட்டு முறையும் நிலவி வந்தன என அறிஞர்கள் கூறுகின்றனர். இறைவன் இங்ஙனம் ஆண் ஒரு கூறும் பெண் ஒரு கூறுமாகத் திகழும் தெய்வ வடிவத்தினை மேலை நாட்டார் "Aphrodite" (The divinity, half male and half female, uniting in itself the active and passive functions of creation.) என வழங்கி வந்தனர் எனத் தெரிகின்றது,

## ஆண் பெண் அமைப்பு

இஃதெங்ஙனமாயினும், இவ்வுலகியற்கை யமைப்பினை நாம் கூர்ந்து காண்போமாயின், ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள் அனைத்திலும் ஆண் பெண் பாகுபாடு அமைந்து கிடத்தலைக் காணலாம். புற்பூண்டுகளிலும், மரஞ்செடி கொடிகளிலும் ஆண் பெண் அமைப்பு தவறுமற் பொருந்தியுள்ளது. கற்களிலும்கூட, ஆண்கல் பெண்கல் முதலிய பாகுபாடுகள் இருப்பதாகச் சிற்பிகள் கூறுகின்றனர்.

இறைவன் தாயும் தந்தையும் ஆக, அம்மையும் அப்பனும் ஆக, சிவமும் சத்தியும் ஆகத் தன் திருவுருவத்திலேயே இருவேறு வகைப்பட்ட தன்மைகளைக் கொண்டு திகழ்தலினுல்தான், உயிர் வடிவங்கள் அனைத்தும் குறியானும் குணத்தானும் ஆண் பெண் என அவ்வவ் யோனிக்குள் இருவேறு வகையாய் அடங்கித் தம்முள் கூடிக்களித்து மகிழ்ந்து வாழ்ந்து வருகின்றன. உலகியல் வாழ்வுகள் அனைத்தும் சிவமும் சத்தியும் தம்முள் இயைந்து ஒன்றி நிற்கும் பெற்றியின் விளைவேயாகும்.

''ஆதி யேஉல கத்தில் ஆணொடு
பெண்ணு மாய்அணை காரியம்
நாதன் நாயகி யோடு கூடி
நயந்த காரணம் என்பரே''

—சித்தியார் பாபக்கம்: 47.

சத்தியும் சிவமும் ஆய
தன்மை,இவ் வுலகம் எல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்
உயர்குண குணியும் ஆக
வைத்தனன்! அவளால் வந்த
ஆக்கம்இவ் வாழ்க்கை எல்லாம்!
இத்தையும் அறியார், பீட
லிங்கத்தின் இயல்பும் ஓரார்!

—சித்தியார் சுபக்கம்,

## கயிலைக் காட்சி

சிவமும் சத்தியும் சேர்ந்து ஒன்றிப் பிரிவற விரவி நிற்கும் அர்த்தநாரீசுவரத் திருவுருவின் விளைவாகவே, உலகுயிர்களின் உடலாகிய அச்சுக்கள் எல்லாம் இலிங்காங்கம் பகாங்கம் என இரு கூறாக அமைந்து திகழ்கின்றன. இங்ஙனம் எல்லாப் புற்பூண்டுகளும் மரஞ்செடி கொடிகளும் விலங்குகளும் மக்களும் ஆகியன எல்லாம், சிவமும் சத்தியும்போல ஆண் பெண் வடிவில் இயைந்து வாழுந் தன்மையினையே, திருக்கயிலைக் காட்சியாகத் திருநாவுக்கரசர் திருவையாற்றிற் கண்டு மகிழ்ந்தார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது.

''பொன்மலைக் கொடியுடன் அமர்
வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியும்
சிவமுமாம் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும்
பயில்வன பணிந்தே
மன்னும் மாதவர் தம்பிரான்
கோயில்முன் வந்தார்''

## தொன்மைக்கோலம்

''கந்தழி'' எனப்படும் கடவுளின் இயல்பினை உண்மையாற் கண்டுணர்ந்த சான்றோர் என நச்சினர்க்கினியர் நயந்து புகழ்ந்து மகிழும் மாணிக்கவாசகப் பெருமான், இறைவனின் திருவுருவங்களுள் மிகவும் பழமையும் பெருமையும் மிக்க ''தொன்மைக்கோலம்'' அர்த்தநாரீசுவர மூர்த்



மாணிக்க வாசகர்

MADRA P BLIC LIBRARY
8 - AUG 1965
MADRAS



திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர்.

**அர்த்த நாரீசுவரர்,**
திருச்செங்கோடு

தமேயாகும் எனப் பின்வரும் திருப்பாடலில் குறிப்பிடுகின்ருர்;

“தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ”

இறைவன் தன்பாதி ஆண் வடிவத்தில் தோல் உடுத்துக் குழையணிந்து, பால் வெள்ளை நீறுபூசிச் சூலம் ஏந்தித் திகழ்கின்ருன்; பிறிதொருபாதி பெண் வடிவத்தில் துகில் உடுத்துத் தோடு அணிந்து, பசுஞ்சாந்து பூசிப் பைங்கிளி ஏந்தி வளையல்கள் தரித்து வயங்குகின்ருன் எனக் குறிப்பிட்டு, இத்தகைய இறைவனின் திருவுருவத்தினைத் “தொன்மைக்கோலம்” என மாணிக்கவாசகர் விதந்து வியந்து குறிப்பிட்டிருத்தல், அறிந்து மகிழற்பாலது.

“தொன்மைக் கோலம்” ஆகிய இவ் அர்த்தநாரீசுவர வடிவத்தினைக் குறித்து மாணிக்கவாசகர் பல இடங்களிற் சிறப்பித்துப் பாடியுள்ளார். திருவெம்பாவையின்கண் மகளிர் நீராடும் பொய்கையானது, ‘கருங்குவளை மலர்களாலும், செந்தாமரை மலர்களாலும், குருகுகள் ஆகிய நீர்ப்பறவைகளை யுடைமையாலும், அரவங்கள் மிக்கிருத்தலாலும், தங்கள் மலங் கழுவுவார் வந்து சார்தலினுலும், எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்துள்ளது’ எனப் பாடியிருப்பது யாவரும் அறிந்ததொன்று.

“பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தாற்
பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு
வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும்
எங்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடு”

— திருவெம்பாவை: 13.

தலைவனும் தலைவியும் உடன்போக்கின் கண் பாலைநில வழியில் தம்முள் ஒன்று சேர்ந்து இயைந்து சென்ற காட்சி, ஆண் வடிவும் பெண் வடிவும் ஒருங்கே அமைந்த அர்த்தநாரீசுவரர் வடிவத்தினை நினைப்பிக்கும் தகைமையில் இருந்தது



எனக் கண்டோர் கூற்ருக “இயைபு எடுத்துரைத்தல்” என்னும் துறையில்,

“மின்தொத் திடுகழல் நூபுரம்
வெள்ளைசெம் பட்டும்இன்ன
ஒன்ருெத் திட,உடை யாளொடு
ஒன்ரும் புலியூரன் என்றே,
நன்ருெத் தெழிலைத் தொழவுற்
றனம். என்னதோர் நன்மைதான்!
குன்றத் திடைக்கண் டனம்.அன்னை
நீசொன்ன கொள்கையரே”

எனப் பாடியிருத்தலும்; தலைவி ஊடல் நீட்டிப்ப அதனுல் வருந்திய தலைவனின் கூற்ருக “ஊடல் நீட வாடியுரைத்தல்” என்னும் துறையில்,

“திருந்தேன் உயநின்ற சிற்றம்
பலவர்தென் அம்பொதியில்
இருந்தேன் உயவந்து இணைமலர்க்
கண்ணின்இன் நோக்கருளிப்
பெருந்தேன் எனநெஞ் சுகப்பிடித்து
ஆண்டநம் பெண்அமிழ்தம்
வருந்தேல் அதுவன்று! இதுவோ
வருவதோர் வஞ்சனையே”

என இருபொருள் நலம் அமையும்படி, தம்மை எளிவந்து அருளால் ஆண்டு கொண்ட அம்மையப்பர் பற்றிக் குறிப்பிட்டு, அவ்வம்மையப்பரைப் “பெண்ணேடு கூடிய அமிழ்தம் போன்றவர்” எனச் சிறப்பித்துப் பாடியிருத்தலும் ஆகிய அருமைப்பாடுகள், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறற்பாலன.

## திருஞான சம்பந்தர்

திருஞானசம்பந்தர் மதுரையிற் சமணர்களோடு அனல்வாதம் புரிய நேர்ந்தபோது, தமது பதிகங்கள் எழுதப்பெற்ற ஏட்டுச் சுவடியினை எடுத்துக் கயிறு சார்த்த, “போகமார்த்த பூண்முலையாள்” என்ற திருநள்ளாற்றுப் பதிகம் கிடைத்தது. அவ்வேட்டைக் கையில் எடுத்து, நள்ளாறரை நினைந்து வணங்கித் “தளிர் இள வளரொளி மலைமகள் வனமுலை இணையவை குலவலின், நள்ளாறர் தம் நாமமே மிளிர் இளவளர் எரியிடில் இவை பழுதிலை மெய்ம்மையே” என்னும் திருவிராகப் பதிகம்பாடி, அனைவரும் காணத் தீயில் இட்டனர். அவ்வேடு வெந்து எரிந்து போகாது பச்சையாய் விளங்கிற்று. அதற்குக் காரணம், ‘அத்திருப்பதிகம் அர்த்தநாரியாகவும் அட்டமூர்த்தியாகவும் விளங்கும் இறைவனைப் பொருளாக

உடைமையேயாம்' எனச் சேக்கிழார் சிறப்புற எடுத்து விளக்கியருளியிருத்தல், ஈண்டு உணரற்பாலது.

"இட்ட ஏட்டினில் எழுதிய
 செந்தமிழ்ப் பதிகம்,
மட்டு லாங்குழல் வனமுலை
 மலைமகள் பாகத்து
அட்ட மூர்த்தியைப் பொருள்என
 உடைமையால், அமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையால்
 விளங்கிய நன்றே"

—சம்பந்தர் 786.

## திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் பெருமான் தமது பாடல் ஒன்றில் அர்த்தநாரீசுவர வடிவம் பற்றி நகைச்சுவை யமையப் பின்வரும் கருத்தமையப் பாடியுள்ளார்: 'சிவபெருமான் மூன்று கண்களையுடையவன் என்று சொல்வர். ஆனால் அப்பெருமானின் வடிவில் பாதி அம்மைக்கு உரியது ஆதலின், அவருக்கு உரிய பாதி வடிவத்தில் அவர் பெற்றிருக்கும் கண் ஒன்றரைக் கண்ணே யாகும்.'

"இன்றரைக் கண்ணுடை யார்எங்கும்
 இல்லை. இமயம் என்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்
 பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணும் கொடுத்து,
 உமையாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர்!
 ஒற்றியூர் உறை உத்தமனே"

## சுந்தரமூர்த்தி

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குண்டையூரில் நென்மலை பெற்றபோது, அதனைத் திருவாரூரிற் பரவையார் மாளிகையிற் சேர்ப்பிக்க இறைவனை வேண்டுகின்றார். அதுபோது "இறைவனே! நீ நின் உருவத்திற் பாதியில் உமையம்மை அகிய ஒரு பெண்ணை வைத்திருக்கின்றாய் சடையின்மேல் கங்கை ஆகிய ஒரு பெண்ணை வைத்திருக்கின்றாய். ஆதலின் என்னைப்போல நீயும் மனைவிமார்களால் ஏற்படும் வருத்தத்தின் இயல்பினை அறிந்திருக்கின்றாய்! ஆதலின் அருள்கூர்ந்து, இந்நெற்குவியலைத் திருவாரூரிற் சேர்த்தருளல் வேண்டும்"

பாதிஓர் பெண்ணை வைத்தாய்!
 படர்சடைக் கங்கை வைத்தாய்!
மாதர் நல்லார் வருத்தம்
 அதுநீயும் அறிதி யன்றே!
கோதில் பொழில் புடைசூழ்
 குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்!
ஆதியே எம்பெருமான்! அவை
 அட்டித் தரப் பணியே!

## குமரகுருபரர்

இத்தகைய அர்த்தநாரீசுவரத் திருவுருவின் சிறப்புக் குறித்துக் குமரகுருபர சுவாமிகள், தமது செந்தமிழ் இலக்கணப் புலமை நலந்தோன்றப் பின்வரும் கருத்தமையப் பாடுகின்றார்: "உலகப்பற்றை நீத்த மெய்ஞ்ஞானிகளுக்கு ஐந்தொழில் நிகழ்த்தும் தனது ஆனந்த நடனத்தைக் காட்டுதற்காக, அட்டமூர்த்தியாக விளங்கும் சிவபெருமானுக்கும் உமையம்மைக்கும் உருவம் ஒன்றாகவே உள்ளது. அவ்வுருவத்தினை ஆண்பால் வடிவம் பற்றி 'ஒருவன்' என்று சொல்வேனோ? அல்லது பெண்பால் வடிவம் பற்றி 'ஒருத்தி' என்று சொல்வேனோ? இருபாலுள் எது பற்றிக் குறிப்பிடினும் பிறிதொருபால் விடுபட்டே போகும்.

"ஒருவர் என்பது உயர்இரு பாற்றுப்ப்
 பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப"

என்னும் இலக்கணச் சூத்திரம், 'ஒருவர்' என்னும் சொல் இருபாலையும் குறித்து ஏற்றபெற்றி வரும் என விளக்குமாறு போல, ஆண் பெண் ஆகிய இருபாலாரையும் ஒன்று சேர்த்துக் குறிப்பிடத்தக்க நிலையில், தமிழ் மொழியில் "ஒருவர்" என்னும் அழகிய சொல் இல்லாமற்போயிருக்குமாயின், யான் வேறு எச்சொல்லால் அத்திருவுருவத்தினைக் குறிப்பிடுதல் இயலும்?"

"...ஒருவனுக்கும் ஒருத்திக்கும்
 உருவொன் றால்! அவ்
உருவைஇஃது ஒருத்தன் என்கோ?
 ஒருத்தி என்கோ?
இருவருக்கும உரித்தாக
 ஒருவர் என்றோர்
இயற்சொல்இலது எனின்,யான்
 மற்றுஎன் சொல்கேனே?"

இவ்வாறே மற்றோர் இடத்திலும் குமரகுருபரர் அர்த்தநாரீசுவர வடிவம் பற்றி அழகுறப் புனைந்துபாடி மகிழ்வுறுத்துகின்றார்: "செவ்வாயையும் கருங்கண்ணையும் உடைய பைந்தோகை ஆகிய

உமாதேவிக்கும், சந்திரனைத் தலையில் அணிந்துள்ள சிவபெருமானுக்கும் திருவுருவம் ஒன்ருகவே உள்ளது. அவ்வுருவினை யாம் எந்தச்சொற்பொருள்கொண்டு எடுத்துக் கூறவல்லேம்? இருவருக்கும் பொருந்துமாறு பொதுப்பட "எந்தாய்" என (எம் தந்தையே; எம்முடைய தாயே என இருவகைப் பொருளும் அமையுமாறு) நாம் பாடிவிடுவோம்.

"செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும்,
வெண்மதிச் சென்னியற்கும்
ஒவ்வாத் திருவுரு ஒன்றேஉளது!
அவ்வுரு வினைமற்று
எவ்வாச் சியம்என்று எடுத்திசைப்பேம்?
இன்னருட் புலியூர்ப்
பைவாய்ப் பொறியரவு அல்குல்
எந்தாய் என்று பாடுதுமே"

## காளிதாசர்

"அர்த்தநாரீசுவரன் என்னும் பார்வதி பரமேசுவரன் போன்று, சொல்லும் அதன் பொருளும் பேதாபேதமாய் வரும் என்பாரும் உளர். **காளிதாசனும்** 'வாகர்த்தாவிவ' என்னும் சுலோகத்தால் அவ்வாறு கூறுவன்" எனவரும் பிரயோக விவேக வுரைப் பகுதியும் (18) பிறவும் ஈண்டு எண்ணி மகிழ்ந்து இன்புறற்பாலன.

"சொல்லும் பொருளும் எனநடம்
ஆடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே!
நின்புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே
அழியா அரசும்
செல்லும் தவநெறி யும்சிவ
லோகமும் சித்திக்குமே"

—அபிராமி அந்தாதி 28.

## சிவப்பிரகாசர்

பிற்காலத்தில் விளங்கிய பெருங்கவிஞர்களுள் துறைமங்கலம் சிவப்பிரகாசர் ஒருவர். அவர் ஏனைய எத்துணையோ பல புலவர்களைப் போலவே, திருக்குறளின்பாற் பெரிதும் ஈடுபாடு மிக்கவர். திருக்குறட் பாக்களின் கருத்துக்களைத் தமது நூல்களில் ஆங்காங்கே அழகுற அமைத்து, அவர் சுவை துளும்பப் பாடியுள்ளார். இங்ஙனம் திருக்குறள் நூலிற் பெரிதும் ஈடுபாடு வாய்ந்த அவர், அதன் சிறப்பினை நயமுற எடுத்து நன்கினிது விளக்குதற்குச் சிவபிரானின் அர்த்தநாரீசுவரத் திருவுருவத்தினையே நினைவு கூர்ந்தருளுகின்ருர். திருக்குறள் இரண்டு அடிகளையுடையது; இரண்டுமே இணையற்றவை; ஆனல் அவற்றுள் ஒன்று நாற்சீர்த்தாய்ச் சற்றுப் பெரிதாகவும், மற்றொன்று முச்சீர்த்தாய்ச் சற்றுச் சிறிதாகவும் இருக்கும். திருக்குறளின் இவ்வியல்பு, 'அர்த்தநாரீசுர வடிவத்தின் இணையற்ற திருவடிகள் இரண்டனுள் ஆண் பகுதியின் கால் நீண்டும், பெண் பகுதியின் கால் சிறியதாய்க் குறுகியும் இருத்தல் போன்றுளது' எனச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்ருர். செந்தமிழ் நூலாகிய திருக்குறளுக்கு அவர், சிவபிரானின் திருவடிகளையே உவமை கூறுதலால், அவர் தம் செந்தமிழ்ச் சிவநலங்கள் இணைய என நாம் எண்ணியுணர்ந்து மகிழ்கின்ருேம்!

"என்அடிகள் வெண்குறள்நேர் அடிஇரண்டும்
என்தலையில் இருத்தும்இறை வெங்கைநாட்டில்,
முன்அடிகள் இரண்டும்நெடில் அடிகள் பின்னர்
முயங்கடிகள் இரண்டும்நேர் அடிக ளாகப்
பன்அடிகள் ஒருநான்கு கொடுநடக்கும்
பழுதகல்வெண் டுறைபோலப் படர்த லாலே
பின்அடிகள் எங்கள்திரு வடிகள், முன்னர்ப்
பெயர்ந்தஅடி எழில்இளஞ்சேய் அடிகள் ஆமே"

இப்பாடல் **திருவெங்கைக் கலம்பகம்** என்னும் நூலில், "மகட் போக்கிய செவிலித்தாய் சுவடு கண்டு இரங்கிக் கூறல்" என்னும் துறையாக வருவதாகும்.

## திருத்தக்க தேவர்

சிவபெருமானின் அர்த்தநாரீசுவரத் திருவுருவின் சிறப்பினைப் பிற சமயத்தாரும் வியந்து போற்றியுள்ளனர். சமண முனிவர் ஆகிய திருத்தக்கதேவர், சீவக சிந்தாமணியின்கண் சச்சந்தனும் அவன் மனைவி விசயையும் ஒருவர் ஒருவரிற் பிரியாது கலந்து இன்பம் நுகர்ந்தனர் என்பதனை, அழகுறப் பின்வருமாறு பாடியுள்ளார்:

"பொனங்கொடி அமிர்த னும்
பொன்நெடுங் குன்ற னும்
அனங்கனுக் கிலக்கம் ஆகி
அம்புகொண் டழுத்த வில்லார்,
இனந்தமக் கெங்கும் இல்லார்
இயைந்தனர் என்ப! முக்கட்
சினந்திகழ் விடையி னும்
செல்வியும் சேர்ந்த தொத்தே."

மேலும், அவர் பிறிதோர் இடத்திற் சிவபெருமானைப் **"போகம் ஈன்ற புண்ணியன்"**

எனக் குறிப்பிடுதலும், அதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர்,

"தான் சத்தியும் சிவனுமாய் இயைந்து நின்று உலகத்துக்கெல்லாம் போகத்தை யுண்டாக்குதலின் **போகம் ஈன்ற** என்றார். திரிபுரத்தை அழித்தும் நஞ்சுண்டும் பல்லுயிர்களையும் காத்த வின் **புண்ணியன்** என்றார்"

என விளக்கச் சிறப்புரைகள் எழுதியிருத்தலும், ஈண்டு நாம் அறிந்து இன்புறற்பாலன. "போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புணர்த்தல் ஓரார்" "பெண்ணினைப் புணர்ந்து உயிர்க்குப் பேரின்பம் அளித்தது ஓரார்" என **அருள் நந்தி சிவம்** சிவஞான சித்தியாரிலும்,

"தென்பால் உகந்தாடும்
தில்லைச் சிற்றம்பலவன்,
பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காணேடீ!
பெண்பால் உகந்திலனேல்,
பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகுஎய்தி
வீடுவர்காண்! சாழலோ"

என **மணிவாசகர்** திருவாசகத்திலும் கூறுவன போல்வன பலவும், ஈண்டு நம்மனோர் சிந்தித்துத் தெளிதற்கு உரியனவாகும்.

## முடிவுரை

ஆணும் பெண்ணும் தம்முள் அயன்மை இன்றி, அன்பினால் ஒருவருக்கொருவர் ஒன்றித் தொடர்பு கொள்ளும் அரிய இனிய நெறியின் சிறப்பினை, இந்திய மக்கள் தெளிவுறத் தெரிந்திருந்த தன்மையினை அர்த்தநாரீசுவரத் திருவுருவம் புலப்படுத்துகின்றது.* ஓர் ஆணோ பெண்ணோ தனியே இருக்கும் அளவும் நிறைநிலை பெறுவதில்லை. இருவரும் ஒன்று சேரும்பொழுதுதான், அவர்கள் முழு நிறைவை அடைகின்றனர். ஒருவருக்கு ஒருவர் இன்றியமையாதவராக, வாழ்க்கையில் உற்றுழியுதவிக் கொள்ளும் உயிர்த்துணைவர்களாக, ஆணும் பெண்ணும் அன்பினாற் பிரிவற ஒற்றுமைப்பட்டு உலகில் வாழ்தல் வேண்டும். கணவனும் மனைவியும் தம்முள் மிகச் சிறந்த நண்பர்களைப்போன்று திகழத் தக்கவர்கள் ஆவர். 'கணவன் மனைவி' என்னும் தொடர்பினும் சிறந்த புனிதம் மிக்க தொடர்பு பிறிதெதுவும் உலகத்தில் இல்லை. மனித வாழ்வின் விருப்பங்கள் அனைத்தும் அத்தொடர்பாற் புனிதமும் நிறைவும் பெறுகின்றன. உலக வாழ்வு என்பதே அதுதான்! இத்தகைய பற்பல சிறந்த தத்துவங்களையெல்லாம் நம்மனோர்க்கு நன்கினிது உணர்த்துவதே, அர்த்தநாரீசுவரத் திருவுருவமாகும். இவ்வுலகத்திற் சிறந்த கணவன் மனைவியராகத் திகழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக ஆற்றி, வையத்து வாழ்வாங்கு வாழ விரும்புவோர் அனைவரும், அர்த்தநாரீசுவரப் பெருமானை வழிபட்டு உய்ய முயலுவார்களாக!

* "The image of 'ARTHA NARISWARA' is India's recognition of the mutual relationship of man and woman, the idea of the co-operative, interdependent, separately incomplete but mutually masculine and feminine functions.

The husband and the wife are to each other the best of friends, the essence of all relationship, the fulfilment of all desires, the very life itself. So is the husband to the wife and the wife to the husband ....."

—Dr. S. Radhakrishnan.

---

**திருநெல்வேலி:**—திருஞான சம்பந்தர் கோயிலில் திருவாதிரைத் திருவிழா.

**செப்பறை:**—அழகியகூத்தர் கோயிலில் மார்கழித் திருவாதிரை விழா.

**திருநறையூர்:**—சித்தநாத சுவாமி கோயிலில் இடபவாகன வீதியுலாக் காட்சி விழா.

**திருநறையூர்:**—சித்தநாத சுவாமி கோயிலில் ஆருத்திரா உற்சவம்.

**திருவாலங்காடு:**—இரத்தின சபாபதீசுவரர் கோயிலில் ஆருத்திரா விழா.

**நெரிஞ்சிப்பேட்டை:**—காசி விசுவநாத சுவாமி கோயிலில் திருவாதிரை ஆருத்ரா தரிசன விழா.

**திருவள்ளூர்:**—வீரராகவ சுவாமி கோயிலில் தைப் பிரம்மோற்சவம்.

**திருப்புகலூர்:**—அக்னீசுவர சுவாமி கோயிலில் ஆருத்திர தரிசன உற்சவம்.

**திருப்பாதிரிப்புலியூர்:**—பாடலீசுவரர் கோயிலில் அப்பர் விழாவும், நடராஜர் அபிஷேகமும், வசந்தோற்சவமும்.

# வித்தகச் சான்றோர் விவேகானந்தர்



## முன்னுரை :

சுவாமி விவேகானந்தர் அவர்களின் நூருவது பிறந்தநாள் விழா, 17—1—1963 அன்று மிகப்பெருஞ் சிறப்பாக நாடெங்கணும் நன்கினிது கொண்டாடப்பெற்றது.

## நரேந்திரர் :

நம் இந்திய தேசம் தொன்றுதொட்டே சான்ருேர்கள் பற்பலர், வாழையடி வாழையாகத் தோன்றி வரும் பெருமை மிக்கது. அங்ஙனம் தோன்றியருளிய சான்ருேர்கள் பற்பலரில், அண்மைக் காலத்தில் (12—1—1863 திங்கட்கிழமை) தோன்றி, அரும்பெருஞ் செயல்களைச் செய்தருளிய சான்ருேர், சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஒருவர் ஆவர்.

"அனுச யப்பட்டு அதுஇது என்னுதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித ஊைப்பூவ னுரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே"

எனத் திருநாவுக்கரசர் பாடுவது போல, "மனிதரில் தலையான மனிதர்" சுவாமி விவேகானந்தர்! "நரேந்திரர்" என்னும் அவர்தம் இயற்பெயருக்கும் பொருள் இதுவேயாதல் கருதி மகிழத் தக்கது.

## மிக்க விழுத்தவ வேந்தர் :

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்னும் சிறந்த உண்மைக்குச் சுவாமி விவேகானந்தர் அவர்களின் தூய தவ வாழ்க்கை, இனிய நல்ல எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. அவர்தம் அழகிய இனிய அருமைத் திருவுருவம்,

"ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்"

எனவரும் பெரியபுராணத் திருப்பாடலை, நம்மனோர்க்கு நினைவூட்டி இன்புறுத்துகின்றது. சுவாமி விவேகானந்தர் அவர்களின் தூய தவத் துறவுத் திருக்கோலம், எவர் உள்ளத்தையும் கவரும் பெற்றியினதாகப் பிறங்குகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுவதுபோல, "மிக்க விழுத்தவ வேந்தர்" (6 : 130) எனச் சுவாமி விவேகானந்தர் அவர்களைப் பற்றியும் நாம் கூறி மகிழலாம்.

## தாய் தந்தையர் :

புறச்சமயங்களால் சைவசமயம் நலிந்திருந்த பொழுது திருஞானசம்பந்தப் பெருமான் தோன்றியருளியது போல, விவேகானந்தர் அவர்களும், இந்துமதமும் இந்திய

தேசமும் மிக நைந்து நலிந்திருந்த காலத்துத் தோன்றியருளினர். உலகத்தை உய்விக்கத் தோன்றியருளும் சான்றோர்கள் அனைவரும், இறைவன் அருளாலேயே உலகத்தில் உதிப்பர். சிவபாத இருதயர் பகவதியார் என்னும் இருமுது குரவர்களின் தவத்தின் பயனாக ஞானசம்பந்தர் தோன்றியவாறு போல, விசுவநாததத்தர் புவனேசுவரி அம்மையார் என்னும் தலைமக்கள் இருவர்க்கும் மைந்தராக, விவேகானந்தர் தோன்றியருளினர் "விளையும் பயிர் முளையில் தெரியும்" என்பதற்கு ஏற்ப, மிக இளமையிலேயே பல அரிய பண்பு நலங்கள் அவர்பால் அமைந்திருந்தன.

## அறிவாற்றல் நலங்கள் :

விவேகானந்தர் பன்னிரண்டாம் வயதிலேயே "முக்த போத வியாகரணம்" என்னும் சம்ஸ்கிருத இலக்கண நூலை மனப்பாடஞ் செய்துவிட்டார். பிறிதொரு சமயம் பாணினியின் "அஷ்டாத்யாயி" என்னும் வடமொழி இலக்கண நூலை ஐயந்திரக் கற்று, ஒருசில நாட்களில் முடித்துவிட்டார். வங்காள மொழியில் அவருக்கு மிகச்சிறந்த தேர்ச்சி அமைந்திருந்தது. கணிதத்தையும் வான சாத்திரத்தையும் அவர் நன்கு கற்று வல்லவரானர். வோர்ட்ஸ்வொர்த், ஷெல்லி முதலிய ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளை அவர் ஆழ்ந்து பயின்று சுவைத்து மகிழ்ந்தார். ஹெர்பர்ட் ஸ்பென்சர், கேண்ட், ஷோப்பனேர், ஜான் ஸ்டுவர்ட் மில் முதலிய மேலைநாட்டறிஞர்களின் நூல்களையெல்லாம் நுணுகிக் கற்றார். சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய பலரின் தத்துவநூற் கொள்கைகளையெல்லாம் அவர் தெளிவாகத் திறம்பட அறிந்திருந்தார். சமணம் பௌத்தம் கிறித்தவம் இசுலாமியம் ஆகிய பல சமய நூல்களிலும் அவருக்கு ஆழ்ந்த பயிற்சியும் புலமையும் இருந்தன. இசைக்கலை, நாடகக்கலை, ஆகியவற்றிலும் அவருக்கு மிக்க ஈடுபாடும் பயிற்சியும் உண்டு. நாவன்மையும் சொற்போர்த் திறனும் இயல்பாகவே அவர்பால் மிகுந்து காணப்பெற்றன. சுரேந்திரநாத பானர்ஜி, ஈஸ்வர சந்திர வித்யாசாகரர் போன்ற பேரறிஞர்கள் பலரும், இளமையிலேயே சிறந்து விளங்கும் இவர்தம் அறிவாற்றல் நலங்களைக் கண்டு வியந்து பாராட்டி மகிழ்ந்தனர்.

## அருட்குரவர் தலைப்பாடு:

ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்ஸரை முதன்முதலாக நரேந்திரர் 1881ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் சந்திக்கும் பேறுபெற்றார். நரேந்திரரின் கல்லூரித் தலைவராகிய வில்லியம் ஹேஸ்டி என்பவர், வோர்ட்ஸ் வொர்த் இயற்றிய "The Excursion" என்னும் ஆங்கிலக் கவிதையினை வகுப்பிற் பாடமாக நடத்திக்கொண்டிருக்குங்கால், 'வோர்ட்ஸ் வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர் இயற்கை எழிலில் ஆழ்ந்து சமாதிநிலை கைவரப் பெற்றவராக விளங்கியிருந்தார்' என்னும் கருத்தினை விளக்க நேர்ந்தபோது, 'தட்சிணேசுவரத்திலுள்ள இராமகிருஷ்ணர் என்னும் பெரியார் அத்தகைய அனுபூதி நிலையினைப் பெற்றுள்ளார்' எனக் குறிப்பிட நேர்ந்தது. அவர்தம் சொற்களின் பயனாகவே, நரேந்திரர் ஸ்ரீ இராமகிருஷ்ணரைச் சந்திக்கும் பேறு பெற்றார். அச் சந்திப்பு விவேகானந்தரின் வாழ்க்கையில் மட்டுமேயன்றி, இந்தியநாட்டு வரலாற்றிலேயே மிக்க சிறப்பிடம் பெறத்தக்க தொன்றாக அமைந்து விட்டது

## திருவடித் தீக்கைத் தெய்விக அனுபவம்:

காந்தம் இரும்பை ஈர்த்துக் கொள்ளுவதுபோல, இராமகிருஷ்ணரின் இணையற்ற தவஆற்றல் இளைஞராகிய நரேந்திரரைப் பெரிதும் ஈர்த்து ஆட்கொண்டு விட்டது. எல்லோரிடமும் இதற்குமுன் கேட்டு வந்தது போலவே, இராமகிருஷ்ணரையும் 'ஐயனே! தாங்கள் கடவுளை நேரிற் கண்டு தரிசித்து மகிழ்ந்திருக்கின்றீர்களா?' என்று வினவினர். அதற்கு அவர் ஏனையோரைப் போலச் சிறிதும் தயங்காமல் 'ஆம்! நான் கண்டறிந்திருக்கின்றேன்' என விடையிறுத்தார். உடனே நரேந்திரர், 'அக் கடவுளை எனக்குக் காட்டத் தங்களால் இயலுமா?' என வினவினர். 'நிச்சயமாகக் காட்டுவேன்' என்ற மறுமொழி கிடைத்தது. இராமகிருஷ்ணர் தம் வலக் காலை நரேந்திரரின் உடல்மீது வைத்தார். அத் திருவடித் தீக்கையால்,

> "சொல்லுவ தறியேன்! வாழி முறையோ!
> தரியேன் நாயேன்! தான்எனைச் செய்தது
> தெரியேன்! ஆவா செத்தேன்! அடியேற்கு
> அருளியது அறியேன்! பருகியும் ஆரேன்!
> விழுங்கியும் ஒல்ல கில்லேன்!
> செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து,
> உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப,
> வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
> தேக்கிடச் செய்தனன்! கொடியேன்

[ஊன் தழை

குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி, [நிரம்பிய
அற்புதம் ஆன அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்! உருகுவது
உள்ளங் கொண்டுஓர் உருச்செய்து, [ஆங்கெனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்! ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறுஎனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன்! என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராஅமுது ஆக்கினன்..."

என மாணிக்கவாசகர் பாடுவதுபோல, ஒரு வகைச் சிறந்த ஆன்மீக அருளனுபவ வயப் பட்டு நின்றார். பின்னர் ஒருகாற் பஞ்சவடியில் ஓர் ஆலமரத்தின்கீழ் யோக சாதன நெறியில் மிக அரியனவும், மறைபொருளானவும் ஆகிய செய்திகள் பலவற்றை, இராமகிருஷ்ணர் அவருக்கு அறிவுறுத்தி அருளினார்.

### அருளனுபவ வளர்ச்சி:

இவற்றாலும், எதிர்பாரா நிலையில் நேர்ந்த தம் தந்தையின் திடீர் இறப்பினாலும் பிறவற்றாலும், நரேந்திரநாதருக்கு உலகியல் வாழ்வில் உவர்ப்புணர்வு முறுகி வளர்ந்து வந்தது. அருளியல் வாழ்வில் அவருக்கு நாளுக்கு நாள் ஆர்வம் மிகுதிப்படலாயிற்று. பகவான் இராமகிருஷ்ணரின் பரிவால்,

"நூலேணி விண்ணேற
நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிநன்னூற்
போதம் பராபரமே"
"சின்னஞ் சிறியார்கள்
செய்தமணற் சோற்றையொக்கும்
மன்னும் கலைஞான
மார்க்கம் பராபரமே"

எனத் தாயுமானவர் பாடுவதுபோல, வெறும் புத்தகங்களின் அறிவு பயனற்றது என நரேந்திரர் தெளிந்துகொண்டார். அருளனுபவங்களும் தியான சமாதிநிலைகளும், அவருக்கு மேன்மேல் சிறப்புறக் கைகூடி ஓங்கி வந்தன.

### இராமகிருஷ்ண மடம்:

இந்நிலையில் இராமகிருஷ்ணர் 1886ஆம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 16ஆம் நாள், தமது பூதவுடலை நீத்துத் திருவருளிற் கலந்து மறைந்தார். அனைவரும் பெருந்துயரத்தில் ஆழ்ந்து வருந்தினர். நரேந்திரர் ஒருவாறு மனந்தேறி, இராமகிருஷ்ணரின் சீடர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து, மிகவும் முயன்று "ஸ்ரீ இராமகிருஷ்ண மடம்" என்னும் சிறந்த அமைப்பினை நிறுவியருளினார். ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் 1886 முதல் 1892 வரை பெரநாகூரிலும், 1892 முதல் 1897 வரை தட்சிணேசுவரத்திற்குச் சிறிதுதொலைவிலுள்ள அலம்பசாரிலும், பின்னர்ப் பெரநாகூர்க்கு நேராகக் கங்கையாற்றின் அக்கரையிலுள்ள நிலம்பார் முகர்ஜியின் தோட்டத்திலும் இருந்து வந்தது. இதுவே இப்பொழுது பேலூர் மடம் எனப் புகழ்பெற்று விளங்குகின்றது.

### குமரிமுனையில் தவம்:

விவேகானந்தர் பின்னர்ப் "பரிவ்ராஜகர்" என்னும் நிலையை மேற்கொண்டு, இமயம் முதல் குமரி வரை இந்தியநாடு முழுவதும் பல பகுதிகளுக்கும் யாத்திரை செய்தார். கன்னியாகுமரியில் அவர் அம்பிகையைச் சிறப்புற வழிபட்டார். அங்கே அருகிற் சிறிது தொலைவிற் கடல்சூழ அமைந்திருக்கும் பாறை ஒன்றின்மீது சென்றமர்ந்து மோனத் தவம் புரிந்தார். தேவியின் அருளால் அவர்க்கு அங்கு முழுநிறைவான மெய்யுணர்வு முகிழ்த்து நிரம்பிற்று. நிர்விகற்ப சமாதிநிலையிலும் அவர் பரிபூரண சித்தியை அடைந்தார். சுவாமிகளுக்குக் கன்னியாகுமரியில் ஒருபெரும் புத்துணர்ச்சியும், ஒப்பற்ற தவவலிமையும் பிறவும் ஏற்பட்டன.

### மன்னுயிர்களுக்குத் தொண்டு:

இவ்யாத்திரையின் பயனாக இந்திய நாட்டின் பண்பாட்டு ஒருமைப்பாட்டினை விவேகானந்தர் நன்கினிது உணர்ந்துகொண்டார். இந்தியாவின் வன்மை மென்மைகளும், குணம் குற்றங்களும் அவர்க்கு நன்கினிது புலனாயின. முதற்கண் இந்திய மக்களின் வறுமையும் அறியாமையும் ஒரு சிறிதேனும் போக்கப்பட்டாலன்றி, இந்திய நாட்டிற்கு உய்வில்லை என ஐயமின்றித் துணிந்தார். 'இறைவனின் இன்னருளைப் பெறுவதற்கு ஏற்ற எளிய இனிய வழி, மன்னுயிர்களுக்குத் தொண்டுபுரிதல் ஒன்றே' என்னும் தமது முடிபினையும் கொள்கையினையும் அவர் தாம் செல்லும் இடங்களிலெல்லாம், எல்லோர்க்கும் அறிவுறுத்தினார்.

**சிகாகோ சமயப் பேரவை :**

1893 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் நாள், அமெரிக்க நாட்டிற் சிகாகோ நகரத்தில் நிகழ்ந்த உலக சமயப் பேரவை (World's Parliament of Religions) யிற் கலந்துகொண்டு அரியதொரு சொற் பொழிவாற்றினார். அதுவே அவர்தம் அனைத் துலகப் பெரும்புகழுக்குக் காரணம் ஆயிற்று. அங்கு இவர்க்குமுன் பேசிய ஏனையோரெல் லாம் தத்தம் புத்தகப் பயிற்சியாற் பெற்ற அறிவாற்றல்கொண்டு பேசினர். ஆனால் சுவாமிகளோ இறையருளாற்றல் கொண்டு, உரை நிகழ்த்தினார்.

"கீதம் வந்த வாய்மையாற்
கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதி வந்த வாய்மையால்
உணர்ந்துரைக்க லாகுமே?"

எனத் திருஞான சம்பந்தர் பாடுவதுபோல, வெறும் அறிவாற்றல் இறையருளாற்றலின் முன்பு என்செய்தல் இயலும்? "அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதரர்களே" என்று அவர் தொடங்கிய தொடக்கமே, அனைவர் உள்ளத்தையும் ஈர்த்துக் கொள்ளை கொண்டு விட்டது.

**சொற்பொழிவுகளில் வற்புறுத்தியவை :**

இந்துமதத்தின் பழமை, பெருமை, பரந்த மனப்பான்மை, இந்திய மக்களின் சமயப்பொறுமை, சமரச ஞானம், பிறசமய மக்களுக்கு இந்திய தேசம் புகலிடம் அளித்து ஆதரித்தமை ஆகிய பல செய்திகளைச் சுருங் கிய சொற்களில், சுவாமிகள் மிகத் திறம்பட விளக்கியருளினார்.

பல்வேறு இடங்களில் இருந்து புறப் படும் நதிகள் வெவ்வேறு வழிகளில் ஓடினும், அவைகள் ஒரே கடலிற் சென்று கலப்பது போல, மக்கள் தத்தம் மனநிலைகளுக்கு ஏற் பக் கைக்கொண்டு ஒழுகும் சமய நெறிமுறை கள் பலவாற்றால் வேறுபடினும், முடிவில் அவைகள் இறைவனது திருவடிகளிலேயே சென்று ஒன்றுபட்டு நிற்கின்றன.

"ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தார்களே"

—திருமூலர்.

"வேறுபடு சமயமெலாம்
புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே நின்
விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை!
முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல்
வயங்கிற் றம்மா!"

—தாயுமானவர்.

"விலகிவீழ் அருவித் தாரை
வேறுவே றாக ஓடிக்
குலநதிப் பாலி வைப்பின்
ஏகமாய்க் கூடும் தோற்றம்,
அலகில்பல் வழியும் மூதூர்
அணிமையின் ஒன்று மாறும்,
பலபல மதமும் ஈற்றின்
ஒருவழிப் படலும் போலும்!"

—சிவஞான சுவாமிகள்.

எவரெவர் எங்கெந்த வகையாக வழிபட் டாலும் அவரவர் விருப்பப்படி இறைவன் அவர்களுக்கு அருள்புரிகின்றான்;

"ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்"

—திருநாவுக்கரசர்.

எல்லாச் சமயங்களும் தத்தம் நிலையில் ஒத்த சிறப்புடையனவே. சமயங்களுள் உயர்வு தாழ்வு இல்லை. அவற்றுள் ஒன்றினை யுயர்த்திப் பிறிதொன்றினை இழித்துரைப் பது, கிணற்றுமை கடலாமையை நோக்கிக் கடல் கிணற்றை ஒக்குமோ? என வினவிய செய்தி (கூப மண்டூக நியாயம்) போலும் அறியாமையே யாகும்;

"கூவ லாமை குரைகடல் ஆமையைக்
கூவ லோடொக்கு மோகடல் என்றல்போல்,
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே"

—திருநாவுக்கரசர்.

என்பன போன்ற பல சிறந்த உயரிய கருத் துக்களைச் சுவாமிகள் பாங்குற மொழிந்தார். இவ்வாற்றால், அச் சமயப் பேரவையின் தலை சிறந்த சான்றோராக, மிகச் சிறந்த வெற்றி வீரராக, உலகை உய்விக்க வந்த ஒப்புயர் வற்ற அருள்ஞான ஆசிரியராக, விவேகா னந்தர் அனைவராலும் மிகமதித்துப் புகழ்ந்து போற்றப் பெற்றார்! இந்தியாவின் பெருமை

யும் இந்திய மக்களின் மதிப்பும், இங்ஙனம் சுவாமிகளால் உலகப் பேரரங்கில் மிகச் சிறந்த பெருநிலைக்கு உயர்த்தப் பெற்றன.*

## அமெரிக்காவில் தொண்டு :

சிகாகோ சமயப் பேரவைக்குப் பின்னர் விவேகானந்தர் அமெரிக்க நாட்டில் 3 ஆண்டுகள் தங்கினர். பலவேறு இடங்களில் இந்து மதம் பற்றி அரிய சொற்பொழிவுகளும் வகுப்புகளும் நடத்தினர். அதனால் அமெரிக்காவில் இவருக்குப் பலர் சீடர்கள் ஆயினர். அவர்கள் பலருள்ளும் சகோதரி நிவேதிதை (Miss Margaret Noble) என்பவர் மிகவும் குறிப்பிடத் தக்கவர். விவேகானந்தரைப் பற்றி அவ்வம்மையார் "தலைவர், யான் கண்டவாறு" (The Master As I Saw Him) என்னும் சிறந்த நூலை எழுதியுள்ளார். இவ்வாறே அமெரிக்கர் பலரும் சுவாமி கிருபானந்தர், அபயானந்தர், யோகானந்தர் என்னும் பெயர்கள் பூண்டு, சுவாமிகளுக்குச் சீடர்கள் ஆயினர். வேதாந்தக் கழகங்கள் பல அமெரிக்காவில் ஏற்பட்டன.

## இங்கிலாந்தில் ஞானப்பயிர் :

பின்னர் இங்கிலாந்திலும் சென்று சில காலம் தங்கி, அங்கும் இந்திய வேதாந்த ஞானப்பயிரை வளர்த்தார். இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் அவர் சுற்றுப்பயணம் செய்தபோது, மேக்ஸ் முல்லர் (Max Muller) பால் டியூசன் (Paul Deussen) எட்வர்ட் கார்ப்பெண்டர் (Edward Carpenter) பிரெடரிக் மையர்ஸ் (Frederick Myers) முதலிய இந்தியக் கலைப் பேரறிஞர்கள் (Indologists) பலரைச் சந்தித்தார்.

"திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்"

என்றபடி, அவர்கள் அனைவரும் விவேகானந்தரின் வியத்தகு பண்புகள் பலவும் கண்டுணர்ந்து, அன்புடன் பணிந்து அளவளாவி மகிழ்ந்தனர். இதன் பயனாக இந்திய தத்துவம் நாகரிகம் பண்பாடு வரலாறு முதலியன பற்றிய ஆராய்ச்சி, மேலைநாடுகளில் மிகுதியாகப் பரவ வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

## பிரான்சில் பேரவை :

பிரான்சு தேசத்தில் பாரிஸ் மாநகரில் 1900 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் "சமய வரலாற்றுப் பேரவை" (The Congress of the History of Religions) ஒன்று நடைபெற்றது. சுவாமி விவேகானந்தர் அதன் கண்ணும் கலந்துகொண்டு சொற்பெருக்கு ஆற்றினர்.

"உள்ளத்தில் உண்மைஒளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்"

என்றபடி, அங்கும் அவர்தம் சொற்பெருக்குகள் அனைவரையும் வியந்து பாராட்டச் செய்தன. 3 மாதங்கள் அங்குத் தங்கியிருந்து இந்திய ஞானத்தினை யாண்டும் பரப்பினர். பின்னர் வியன்னா கான்ஸ்டாண்டிநோபிள் ஏதென்சு முதலிய நகரங்களின் வழியாக, எகிப்து முதலிய நாடுகளுக்குச் சென்று திரும்பினர்.

## நிர்விகற்ப சமாதி நிலை:

இங்ஙனம் அரும்பெருந் தொண்டுகள் பல ஆற்றிய சுவாமி விவேகானந்தர், தமது 39 ஆம் வயதில், 1902 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் தேதி பேலூர் மடத்தில் நிர்விகற்ப சமாதி நிலை அடைந்து, இறைவன் திருவடியை எய்தினர்!

## சான்றோர்களிற் சான்றோர்:

விவேகானந்தர் அறிவிற் சங்கரர், அன்பிற் புத்தர், செயலாண்மைத் திறனில் திருஞான சம்பந்தர், தொண்டு நெறியில் திருநாவுக்

* If I were to look over the whole world to find out the country most richly endowed with all the wealth, power and beauty that nature can bestow—in some parts a very paradise on earth—I should point to India!

If I were asked under what sky the human mind has most fully developed some of its choicest gifts, has most deeply pondered on the greatest problems of life, and has found solutions for some of them which well deserve the attention even of those who have studied Plato and Kant—I should Point to India!

And if I were to ask myself from what literature we, here in Europe, we who have been nurtured almost exclusively on the thoughts of Greeks and Romans, and of one Semitic race, the Jewish, may draw that corrective which is most wanted in order to make our inner life more perfect; more comprehensive, more universal, in fact more truly human, a life, not for this life only, but a transfigured and eternal life—again I should point to India!

—Prof. MAX MULLER,
"India, what can it teach us?"

கரசர், ஞானத்தில் மாணிக்கவாசகர், தோற்றப் பொலிவிற் சுந்தரர், பக்திமைப் பண்பிற் சேக்கிழார், சமரச உணர்வில் தாயுமானவர், பொது நோக்கில் திருவள்ளுவர், தவ வாழ்வில் இளங்கோ அடிகள், அருளனுபவத்தில் ஆழ்வார்களைப் போன்றவர் என்றெல்லாம் கூறத்தக்க நிலையில் வீறுபெற்று விளங்கினர்.

**வீரத்தின் நிலைக்களம்:**

விவேகானந்தர் 'புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம்' என்றபடி, வீரத்தின் நிலைக்களமாக விளங்கினர். இந்திய மக்களின் கோழைத்தனத்தைப் போக்கி, வீரவுணர்வைப் புகட்டினர். உடல்வீரம் அறிவு வீரம் அன்புவீரம் தவவீரம் கருமவீரம் பக்தி வீரம் ஞானவீரம் ஆகிய வீரம் பலவற்றினையும் வற்புறுத்தி, அவற்றிற்கு ஓர் இனிய எடுத்துக்காட்டாகவும் அவர் இலங்கினர்.

"ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலர்
ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னல் விளம்பும் தகையதோ?"

—சேக்கிழார்.

உடலைப் பழித்துப் பேசிய ஒரு சிலர் போலாது உடலைப் பேணுவதன் இன்றியமையாமையைச் சுவாமிகள் பெரிதும் வற்புறுத்தினர். 'கீதைப் பயிற்சியைக் காட்டிலும் காற்பந்தாட்டப் பயிற்சியினுல் வீடுபேற்றை விரைவில் அடைதல் கூடும்' என அவர் அடிக்கடி கூறுவார்.

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்
[என்று
உடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே"

"உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

—திருமூலர்.

**விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்:**

கருமயோகம் பக்தியோகம் ஞானயோகம் இராஜயோகம் என்பவற்றையெல்லாம் திறம்பட விளக்கிய விவேகானந்தர், உலகியலுணர்விலும் தலை சிறந்து திகழ்ந்தார். மேலை நாட்டின் மெய்ஞ்ஞானமும் கீழை நாட்டின் மெய்ஞ்ஞானமும் ஒன்றனோடு ஒன்று தொடர்புகொண்டு, தம்முள்ளே "கொண்டும் கொடுத்தும்" இனிது இயைந்து வாழத் தலைப்பட்டால், மண்ணகமே விண்ணகமாக மாறிவிடும் எனச் சுவாமிகள் பலகாலும் வற்புறுத்திச் சொல்லுவர். பொது மக்கள் நலத்திற் கருத்து (Concern for the masses), பெண்கள் முன்னேற்றம் (Advancement and culture of womenfolk), நிறுவன அமைப்பாற்றல் (The Power of Organisation), செல்வச் செழிப்புவளம் (Material Prosperity) என்பன, மேலை நாடுகளிற் போல இந்தியாவிலும் பெருகுதல் வேண்டும் எனச் சுவாமிகள் மிகவும் பாடுபட்டார்!

**தேசபக்தியும் தெய்வபக்தியும்:**

சுவாமிகள் ஒரு சிறந்த சீர்திருத்தச் செம்மல்! ஒப்பற்ற தேசபக்தர்! ஏழை எளியவர்களுக்கு இரங்கும் இனிய துணைவர்! இணையற்ற நிறுவன அமைப்பாளர்! இன்று உலகின் பல பகுதிகளிலும் இராமகிருஷ்ண மடத்தின் கிளை நிலையங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட நிலையில் ஏற்பட்டுள்ளன. "தரித்திர நாராயணர்கள்" நலங்கருதித் தொண்டாற்றுதலே இறைவன் அருள்பெற எளிய வழி எனச் சுவாமிகள் பெரிதும் அறிவுறுத்தினர். இராமலிங்க அடிகள் போலவே,

"கலையுரைத்த கற்பனையே
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெல்லாம்
மண்மூடிப் போக!"

என விவேகானந்தரும் வலியுறுத்தினர்! வெறும் தெய்வபக்தியோடு நில்லாமல், தேசபக்தியும் (Patriotism) அவர்பாற் கொழுந்துவிட்டு மிளிர்ந்தது. காந்தியடிகள் போன்ற பெருமக்கள் பலருக்கும் விவேகானந்தர் ஒரு முன்னேடியாகவும் வழிகாட்டியாகவும் வாழ்ந்தார். இன்றைய இந்து சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் விவேகானந்தர் புரிந்தருளிய தொண்டு அளப்பரியது!

**இந்து சமய வளர்ச்சி:**

இந்துமதம் ஒரு குறுகிய மதம் அன்று. அஃது "இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கு இன்றி" (சித்தியார்: 265) எல்லாச் சமயங்களையும் தழுவிக்கொண்டு மகிழும் "அனைத்துலகப் பெருஞ்சமயம்" (Universal Religion) என உலகம் முழுவதற்கும் திறம்

பட உணர்த்தியருளிய பெருமை, விவேகானந்தருக்கே உரியதாகும். இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் விவேகானந்தர் ஆற்றிய தொண்டினை,

"படியில் நீடும் பத்திமுதல்
அன்புநீரிற் பணைத்தோங்கி
வடிவு விவேகா னந்தர்உயர்
செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகம்
முறுகி முதிர்ந்து விளைந்ததால்"

என ஆசிரியர் சேக்கிழாரின் அரிய திருமொழியின் துணைகொண்டே, ஒருவாறு உணர்த்துதல் இயலும்!

முடிவுரை:

இத்தகைய பெறலரும் வித்தகச் சான்றோர் ஆகிய விவேகானந்தரின் அரிய நெறியையும் அருளுபதேசங்களையும், நாம் பின்பற்றி வாழ்ந்து ஈடேற முயலுவோமாக.

---

## ஆணையர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்

—: :—

| | | | | |
|---|---|---|---|---|
| 29—12—62 | மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் கோயில் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடு. | | | |
| 31—12—62 | திண்டுக்கல் காளத்தீசுவரர் கோயில் | ,, | ,, | ,, |
| 1— 1—63 | பழனி தண்டாயுதபாணிசுவாமி கோயில் | ,, | ,, | ,, |
| 2— 1—63 | சிவகாசி விசுவநாதசுவாமி கோயில் | ,, | ,, | ,, |
| 3— 1—63 | சிவகிரி ஆர். கே. நாச்சியார் கட்டளை | ,, | ,, | ,, |
| ,, | ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார் கோயில் | ,, | ,, | ,, |
| 4— 1—63 | திருவாதவூர் திருமறைநாதசுவாமி கோயில் | ,, | ,, | ,, |
| ,, | மேலூர் கலியாணசுந்தரேசுவரர் கோயில் | ,, | ,, | ,, |
| 8— 1—63 | திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயில் | | ,, | ,, |

---

## பத்மநாபபுரம் தொகுதி மேற்பார்வையாளர் அலுவலகத்திலிருந்து வெளிவரும் விண்ணப்பம்

—: :—

இந்தத் தொகுதியைச் சேர்ந்த மண்டைக்காடு தேவஸ்தானத்தில் 1963 மார்ச்சு மாதம் 3-ம் தேதி ஞாயிறன்று திருக்கொடியேற்றமும், ஷை மாதம் 8-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று வலிய படுக்கையும், ஷை மாதம் 12-ம் தேதி செவ்வாய்க்கிழமையன்று குடையும் நிகழவிருப்பதால் மெய்யன்பர்கள் வருகைதந்து சிறப்பிக்கும்படி வேண்டப்படுகிறது.

பத்மநாபபுரம்
12—1—63

சு. நல்லகுற்றாலம் பிள்ளை, பி. ஏ.
மேற்பார்வையாளர்.

# திருப்பாவை ஆராய்ச்சி

[டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார், M.A., M.O.L., Ph.D. அவர்கள்]



ஆண்டாளம்மையாரின் திருப்பாவைப் பாடல்களை ஆராயப் புகுமுன்பு அவ்வம்மையார் காலத்தையறிதல் நல்லது. அம்மையார் பட்டர்பிரான் என்று சொல்லப்பட்ட பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளார் ஆதலின், பெரியாழ்வார் காலமே அம்மையார் காலமாகும். ஆகவே, பெரியாழ்வார் காலத்தை ஆராய்வது நலம் பயக்கும்.

## பெரியாழ்வார் காலம்

பெரியாழ்வார், "மன்னர் மறுக" என்று தொடங்கும் திருப்பாடலில் தம் காலத்துப் பாண்டியனைக் கோன் நெடுமாறன் என்ற ஒருவனைக் குறித்துள்ளார். கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்த பாண்டியர் பெயர்கள் வேள்விக்குடி, சின்னமனூர்ச் செப்பேடுகளில் தொடர்ச்சியாகத் தரப்பட்டுள்ளன.[1] அவை கீழ் வருமாறு:

1. கடுங்கோன் கி.பி. 575-600
2. மாறவர்மன் அவனி சூளாமணி கி.பி. 600-625
3. செழியன் சேந்தன் கி.பி. 625-640
4. மாறவர்மன் அரிகேசரி கி.பி. 640-670
5. கோச்சடையன் இரணதீரன் கி.பி. 670-710
6. மாறவர்மன் அரிகேசரி பராங்குசன் (சிவபக்தன்) (முதலாம்இராசசிம்மன்) கி.பி. 710-765
7. நெடுஞ்சடையன் பராந்தகன் கி.பி. 765-790
8. இரண்டாம் இராச சிம்ம பாண்டியன் கி.பி. 790-792
9. வரகுண மகாராசன் கி.பி. 792-835
10. சீமாறன் சீவல்லபன் கி.பி. 835-862
11. இரண்டாம் வரகுணன் கி.பி. 862-880
12. பராந்தக பாண்டியன் கி.பி. 880-900
13. மூன்றாம் இராசசிம்ம பாண்டியன் கி.பி. 900-920

பெரியாழ்வார் ஸ்ரீவல்லப தேவன் என்ற பாண்டியன் அவையில் சிறப்புற்று விளங்கினார் என்று குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன. பெரியாழ்வார் திருமாலிருஞ் சோலை பற்றிய பதிகத்தில்,

"கொன்னவில் கூர்வேற்கோன்
நெடுமாறன் தென் கூடற்கோன்
தென்னன் கொண்டாடுந் தென்
திருமாலிருஞ் சோலையே"

என்று தம்காலப் பாண்டியனைப் பாராட்டியுள்ளார்.

சோழர் இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களைத் தம்பெயர்க்கு முன்னர்த் தரித்திருந்தாற் போலவே பாண்டியர்களும்

1. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, பக். 37—82.

மாறவர்மன், சடையவர்மன் என்னும் பட்டங்களை மாறிமாறிப் பெற்றிருந்தனர். குருபரம்பரை நூல்கள் கூறும் ஸ்ரீவல்லபன், **ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்** என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறும் பாண்டியனாக இருத்தல் கூடும். இவன் 'மாறவர்மன்' என்னும் பட்டமுடையவன். இவனுக்கு ஏகவீரன், பரசக்கர கோலாகலன், அவனிப சேகரன் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. சிற்றண்ணல் வாயில் கல்வெட்டு ஒன்று,

"பார்முழு தாண்ட பஞ்சவர் குலமுதல்
ஆர்கெழு வைவேல் அவனிப சேகரன்
சீர்கெழு செங்கோல் சீவல்லபன்"

என்று இவனைப் பாராட்டிக் கூறுகிறது.

இம் மன்னன் குன்னூர், சிங்களம், விழிஞம் என்னும் இடங்களில் நடைபெற்ற போர்களில் வெற்றி பெற்றனன் என்றும், குடமூக்கில் தன்னை எதிர்த்த கங்கர், பல்லவர், சோழர் முதலியோரை வென்றனன் என்றும், சின்னமனூர்ச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. இவனது ஈழத்து வெற்றியை மகாவம்சம் கூறுகின்றது. இவன் தெள்ளாறு, குடமூக்கு, அரிசிற்கரை என்னும் மூன்று இடங்களிலும் பல்லவரை எதிர்த்தான். இங்ஙனம் இவன் பல மன்னர்களோடு செய்த போர்களையே "குறுகாத மன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச் சிறுகால் நெறியே போக்குவிக்கும் செல்வன்" என்னும் பெரியாழ்வார் திருப்பாடல் வரிகள் குறிப்பனவாகலாம். இச் சீவல்லபன் காலம் கி.பி. 836-862 ஆகும்.[1] இவன் பெருவீரனை வரகுண மகாராசன் திருமகனாவான்.

பெரியாழ்வார், நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி. 765-790) காலத்தவராகலாம் என்று கூறும் அறிஞர்[2] கருத்துக்கு இரண்டு தடைகள் உள்ளன.

(1) பெரியாழ்வார் காலத்துப் பாண்டியன் சீவல்லப தேவன் என்று குருபரம்பரை நூல்கள் கூறுவது.

(2) "மாறன் கொண்டாடும் தென் திருமாலிருஞ் சோலை"

என்று பெரியாழ்வாரே தம் காலத்துப் பாண்டியனை 'மாறன்' என்று குறித்திருத்தல் மற்றொரு காரணம். ஆழ்வார் கூறும் 'மாறன்' என்ற பெயரும் சேர்ந்து 'ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்' என்ற பாண்டியன் ஒருவனுக்கே உரிமையாக இருத்தல் பட்டயங்களும் கல்வெட்டுக்களும் கொண்டு அறியலாம். எனவே, பெரியாழ்வார் நெடுஞ்சடையன் பராந்தகன் காலத்தவன் என்று கூறுவதை விடச் சீமாறன் சீவல்லபன் காலத்தவர் என்று கூறுவதே பொருத்தமாகும். ஆகவே, பெரியாழ்வார் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்று கூறலாம்.[3] பெரியாழ்வார் எண்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தவர் என்று குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன. ஆதலால் அப்பெரியார் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் வாழ்ந்தவராகக் கொள்ளலாம்.

## ஆண்டாள் அம்மையார் காலம்

கோதையார் என்ற ஆண்டாள் அம்மையாரின் 13-ஆம் திருப்பாவைப் பாடலுள்,

"பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழம் உறங்கிற்றுப்
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்"

என வரும் வரிகளில் உள்ள, "வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று" என்பதுபற்றிப் பலர் உதவிகொண்டு ஆராய்ந்த பெரும்புலவர் திரு. மு. இராகவையங்கார் அவர்கள், வெள்ளி எழ வியாழம் உறங்கிய காலங்கள் நான்கினைக் கீழ் வருமாறு குறித்துள்ளார்கள்:[4]

| நூற்றாண்டு | கி.பி. ஆண்டு | மாதம் தேதி | வியா. வெ. தூர அளவு | | மணி |
|---|---|---|---|---|---|
| 7 | 600 | நவம்பர் | —272 | 171° | 3-20 |
| 8 | 731 | டிஸம்பர் | —182 | 177° | 3-50 |
| 9 | 885 | நவம்பர் | —252 | 180° | 5- 8 |
| | 886 | டிஸம்பர் | —142 | 165° | 5-20 |

இவற்றுள், பெரியாழ்வார் காலம் என்று மேலே துணியப் பெற்ற கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இரண்டு ஆண்டுகள் குறிக்கப் பெற்றுள்ளன. கி. பி. 885-ஐக் குறிக்கும் காலம் பின்னதைவிடப் பன்னிரண்டு மணித் துளிகள் முன்னர் இருப்பதால் வைகறை

1. இவன் காலம் கி. பி. 815—862 என்பர் K. A. நீலகண்ட சாத்திரியார்.—History of South India, P. 165. 2. பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, பக். 53. மு. இராகவையங்கார், ஆழ்வார்கள் கால நிலை, பக். 55-60. 3. R. Gopinatha Rao, History of Sri. Vaishnavas, P. 23. K. A. N. Sastry, History of South India, P. 415. 4. ஆழ்வார்கள் கால நிலை, பக். 81.

நீராடலுக்கு ஏற்புடையதாகக் கொள்ளலாம். இங்ஙனம் கொள்ளின் அம்மையார் திருப்பாவை பாடிய ஆண்டு கி. பி. 885 என்னலாம்.

**மார்கழி நீராடல்:**

மார்கழி நோன்பு, சங்க காலம் முதலே தமிழரிடம் இருந்து வரும் நோன்பாகும் என்பது பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் சங்ககால நூல்களால் அறியலாம். மார்கழி மாதத்தில்—நிறைமதி நாளாகிய திரு ஆதிரையில் ஆகமங்களை உணர்ந்த பூசகர்கள தெய்வத்திற்குத் திருவிழாவைத் தொடங்கினர். அப்போது கன்னிப்பெண்கள் ஒன்றுகூடி, 'நிலம் மழைவளம் பெற்றுக் குளிர்வதாகுக,' என்று சொல்லி அம்பா ஆடலை மேற்கொண்டனர். அந்நோன்பு முறையை அறிந்த முதிய பார்ப்பனிமார், அக்கன்னிப் பெண்களுக்கு நோன்பு நோற்கும் முறைமையைத் தெரிவித்தனர். அக் கன்னிப்பெண்கள், அவர்கள் தெரிவித்த படி, பனி நிறைந்த கதிரவன் தோன்றும் காலத்தில் வையையில் நீராடினர்; கரையில் தங்கியிருந்த அந்தணர்கள் வளர்த்த வேள்வித் தீயை வணங்கினர். இங்ஙனம் இளைய ஆண்மக்களோடு காமக் குறிப்பு இல்லாத விளையாட்டைப் புரியும் அக்கன்னிப் பெண்கள், தவமாகிய தைந்நீராடலை வாய்க்கப் பெற்றனர்.

இது பரிபாடல் என்னும் சங்க நூலில் பதினோராம் பாடலில் காணப்படும் செய்தி ஆகும். இப்பாடலில் வரும் 'அம்பா ஆடல்' என்பது அம்மன் பொருட்டு நிகழ்த்தப்படும் நீராட்டு என்று பொருள்படும்.[1] அம்பா, அம்மாள் என்பவை அம்மனைக் குறிப்பவை. நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்பவை இதனைத் 'தைந்நீராடல்' என்று குறித்துள்ளன.

"இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்" (நற்றிணை,80)

என்னும் வரிகள், களவுப் புணர்ச்சியில் சேட்படுத்தப்பட்ட தலைவன் ஒருவன் கூற்றாக வந்துள்ளன. இவ்வாறே கலித்தொகையில் கீழ் வரும் இரண்டு அடிகள் காணப்படுகின்றன:

"வையெயிற் றவர்நாப்பண்
வகையணிப் பொலிந்து நீ
தையினீ ராடிய
தவந்தலைப் படுவாயோ (செ. 59)

இந்த இரண்டு மேற்கோள்களும் தைந் நீராடலைக் குறிக்கின்றன. பரிபாடலில் மார்கழி நீராடல் சொல்லப்பட்டுள்ளது. இவை இரண்டும் ஒன்றா? இரண்டா?

முழு நிலவும் திருவாதிரையும், மார்கழி மாதம் பதினைந்தாம் நாளிலேனும், அல்லது அதன் பின்பேனும் ஒன்றுகூடுதல் இயல்பு. அக்காலத்தில் அமாவாசை தொடங்கி மறு அமாவாசையில் முடியும் கால அளவு ஒரு மாதம் என்றும், பௌர்ணிமை தொடங்கி மறு பௌர்ணிமையில் முடியும் கால அளவு ஒரு மாதம் என்றும் இருவகையாக முன்னோர் கணக்கிட்டனர். அவை முறையே 'அமாந்தம்' (அமாவாசையோடு முடிவுறும் மாத காலம்) பூர்ணிமாந்தம் (பௌர்ணமியோடு முடிவு பெறும் மாத காலம்) எனப் பெயர்பெற்றன. அம்முறைப்படி மார்கழித் திங்களின் இடையில் பௌர்ணமிக்குப் பின் வரும் மாதம்—மார்கழியின் பிற்பகுதியும் தையின் முற்பகுதியும் ஆகும். அதனால்தான் மார்கழி நீராடல் என்றும், தைந்நீராடல் என்றும் இருவகையாக வழங்கப்பெற்றது.[2]

"திருவாதவூரடிகள் புராணத்துட்கூறப்பட்டபடி மார்கழி நீராடல் திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன்பு தொடங்கித் திருவாதிரையில் முடிவு பெறும் என்பதும், தைந் நீராடல் மார்கழித் திருவாதிரையில் தொடங்கி நடைபெறும் என்பதும் இங்கே கண்ட வேறுபாடாம். நூற்பிரமாணம் உள்ளனவும் இல்லனவுமாய் மக்கள் வழக்கவொழுக்கங்களிற் காணப்படும் இன்னோரன்ன நிகழ்ச்சிகள், இங்ஙனம் காலாந்தரத்தில் வேறுபடுதல் இயல்பே"[3].

**பெண்கள் வயது**

காமக் குறிப்பு இல்லாத விளையாட்டுச் சிறுமியர் தம் தாய்மாரைத் துணையாகக் கொண்டு மார்கழி நீராடினர் என்று பரிபாடல் கூறுகிறது. பிங்கல நிகண்டில் ஐந்து முதல் ஒன்பது வயதுவரை உள்ள பெண்கள் பனிநீர் தோய்வர் என்பது கூறப்பட்டுள்ளது. (தொடரும்)

1. பேராசிரியர் மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, பக். 194—195.
2. ஆராய்ச்சித் தொகுதி, பக். 196.
3. பண்டிதமணி, திருவெம்பாவை, பக். 14.

| | | |
|---|---|---|
| 37. | சீனிவாசப்பெருமாள் கோயில், நாச்சியார்கோயில், தஞ்சை மாவட்டம் | 5,200 |
| 38. | வீரட்டேசுவரர் கோயில், வழுவூர், மாயூரம் வட்டம் | 3.000 |
| 39. | தியாகராஜசுவாமி கோயில், திருவாரூர், நாகை வட்டம் | 7,500 |
| 40. | பூமிநாதசுவாமி கோயில், சிறுகாலசந்தி அர்த்தசாமத் திருப்பணிக் கட்டளை, வீரவநல்லூர், அம்பாசமுத்திரம் வட்டம் | 5;000 |
| 41. | தண்டுமாரியம்மன்கோயில், ஒப்பிலிபாளையம், கோவை மாவட்டம் | 3,000 |
| 42. | சந்திரசேகர கிருஷ்ணசுவாமி தொகுதி கோயில்கள், வீராசிமங்கலம், தாராபுரம்வட்டம் | 300 |
| 43. | பட்டீசுவரர் கோயில், பேரூர், கோயம்புத்தூர் | 10,000 |
| 44. | மாரியம்மன்கோயில், கருவலூர், அவிநாசி வட்டம் | 1,000 |
| 45. | விநாயகர் கோயில், கூனூர், நீலகிரி மாவட்டம் | 1,000 |
| 46. | வாலீசுவரர் — கல்யாணவேங்கடரமணசுவாமி கோயில், செவ்வூர், அவிநாசி வட்டம் | 500 |
| 47. | பஞ்சவர்ணீசுவரர் கோயில், உறையூர், திருச்சி வட்டம் | 1,000 |
| 48. | பூலோகநாதசுவாமி கோயில், திருச்சி நகர் | 250 |
| 49. | பாலசுப்பிரமணியசுவாமி கோயில், எட்டிவயல், தஞ்சை மாவட்டம் | 200 |
| 50. | கரவீரநாதசுவாமி கோயில், கரவீரம், நன்னிலம் வட்டம் | 1,000 |
| 51. | வாகீசுவரசுவாமி கோயில், பெருஞ்சேரி, மாயூரம் வட்டம் | 500 |
| 52. | பந்தாளம்மன்கோயில், பல்லாவரம், லால்குடி வட்டம் | 2,000 |
| 53. | பீபிலிகேசுவரர் கோயில், திருவெறும்பூர், திருச்சி வட்டம் | 1,000 |
| 54. | வேணுகோபாலசுவாமி கோயில், மன்னார்குடி, தஞ்சை மாவட்டம் | 1,000 |
| 55. | சீதாராம ஆஞ்சநேயசுவாமி கோயில், பொள்ளாச்சி | 1,000 |
| 56. | சந்தானராமசுவாமி தொகுதி கோயில்கள், நீடாமங்கலம்,தஞ்சைமாவட்டம் | 7,000 |
| 57. | முத்துமாரியம்மன்கோயில், சோமரசம்பேட்டை, திருச்சிவட்டம் | 100 |
| 58. | தியாகராஜசுவாமிகோயில், திருவாரூர், தஞ்சை மாவட்டம் | 5,000 |
| 59. | சிதம்பரேசுவரர் கோயில், புல்லம்பாடி, திருச்சி மாவட்டம் | 500 |
| 60. | குழுந்தாளம்மன் கோயில், புல்லம்பாடி, ,, ,, | 2,000 |
| 61. | செல்லாண்டியம்மன் கோயில், மேட்டுமருதூர், திருச்சி மாவட்டம் | 1,000 |
| 62. | வள்ளீசுவரர் கோயில், அய்யலூர், முசிறி வட்டம் | 500 |
| 63. | நவநீதக்கிருஷ்ணப் பெருமாள் கோயில், அரசலூர், முசிறி வட்டம் | 1,000 |
| 64. | விஸ்வநாதசுவாமி கோயில், பொம்மசமுத்திரம் திருச்சி வட்டம் | 200 |
| 65. | கங்காதரேசுவரர் கோயில், புரசவாக்கம், சென்னை | 250 |
| 66. | மருதபுரீசுவரர் கோயில், அரசங்குடி, திருச்சி வட்டம் | 3,000 |
| 67. | இலட்சுமிநாராயணப் பெருமாள் கோயில், முசிறி, திருச்சி மாவட்டம் | 1,000 |
| 68. | சுப்பிரமணியசுவாமி கோயில், திருச்செந்தூர், நெல்லை மாவட்டம் | 25,000 |
| 69. | வேங்கடாசலபதி கோயில், கோட்டூர், மன்னார்குடி வட்டம் | 300 |
| 70. | விநாயகர் கோயில், மன்னார்குடி, தஞ்சை வட்டம் | 1,000 |
| 71. | கைலாச நாதர் கோயில், மன்னார்குடி, தஞ்சை வட்டம் | 200 |
| 72. | ஏடகநாதசுவாமி கோயில், திருவேடகம், நிலக்கோட்டை வட்டம் | 10,000 |
| 73. | சிவகங்கை தேவஸ்தானம், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம் | 17,000 |
| 74. | இராமநாதசுவாமி கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் | 40,000 |
| 75. | இராமநாதபுரம் சமஸ்தானம், இராமநாதபுரம் | 27,000 |

| | | |
|---|---|---|
| 76. | நாச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம் | 10,000 |
| 77. | மயூரநாதசுவாமி கோயில், பேத்தவநல்லூர், இராஜபாளையம், இராமநாதபுரம் மாவட்டம் | 5,000 |
| 78. | கொப்புடையநாயகி அம்மன் கோயில், காரைக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் | 5,000 |
| 79. | வடபழநி யாண்டவர் கோயில், சென்னை | 5,000 |
| 80. | பண்பொழி | 10,000 |

(தொடரும்)

## கோயில்கள் அளித்துள்ள

## தேசியப் பாதுகாப்பு நன்கொடைகள்

—: ✱ :—

| | | |
|---|---|---|
| 1. | திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை | ரூ. 6000/- |
| 2. | இராஜகோபாலசுவாமி கோயில், மன்னார்குடி | 1000 |
| 3. | சுவாமிநாதசுவாமி கோயில், சுவாமிமலை | 1000 |
| 4. | கல்யாணவெங்கட்டரமணசுவாமி கோயில், தாந்தோணிமலை, கரூர் வட்டம் | 1000 |
| 5. | நாச்சியார் கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் | 1000 |
| 6. | கன்னிகாபரமேசுவரி கோயில் தொகுதி, சென்னை | 501 |
| 7. | ஆதிகேசவப் பெருமாள் கோயில், மயிலாப்பூர், சென்னை | 501 |
| 8. | பிடை அரசாயி அம்மன் கோயில், ஸ்ரீரங்கம் | 200 |
| 9. | சுப்பிரமணியசுவாமி கோயில், திருச்செந்தூர் | 5000 |
| 10. | சங்கரநாராயணசாமி கோயில், சங்கரன் கோயில் | 5000 |
| 11. | திருக்குற்றாலநாதசுவாமி கோயில், குற்றாலம் | 3000 |
| 12. | நெல்லையப்பர் கோயில், திருநெல்வேலி | 3000 |
| 13. | திருமலைக்குமாரசுவாமி கோயில், பண்பொழி, தென்காசி வட்டம் | 1000 |
| 14. | பூவநாதசுவாமி கோயில், கோயில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் | 501 |
| 15. | கண்ணம்மன் புது அம்மன் கோயில், மேலவீரராகவபுரம், திருநெல்வேலி | 200 |
| 16. | காசிவிசுவநாதசுவாமி கோயில், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம் | 501 |
| 17. | கோபிநாதசுவாமி கோயில், ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் வட்டம் | 3000 |
| 18. | ஏடகநாதசுவாமி கோயில், திருவேடகம், நிலக்கோட்டை வட்டம் | 1000 |
| 19. | காளத்தீசுவரர் கோயில், திண்டுக்கல், மதுரை மாவட்டம் | 1000 |
| 20. | சிவகங்கை தேவஸ்தானம், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம் | 3000 |
| 21. | இராமநாதசுவாமி கோயில், இராமேசுவரம் | 2000 |
| 22. | இராமநாதபுரம் சமஸ்தானம் கோயில்கள், இராமநாதபுரம் | 3000 |
| 23. | வெட்டுடையார் காளியம்மன் கோயில், அரியகுறிச்சி, இராமநாதபுரம் மாவட்டம் | 1000 |
| 24. | மயூரநாதசுவாமி கோயில், பேத்தவநல்லூர், இராஜபாளையம், இராமநாதபுரம் மாவட்டம் | 1000 |
| 25. | பராசக்தி மாரியம்மன் கோயில், விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டம் | 1000 |
| 26. | கொப்புடைய நாயகியம்மன் கோயில், காரைக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் | 1000 |
| 27. | ஆர். கே. நாச்சியார் அறக்கட்டளை, சிவகிரி, திருநெல்வேலி மாவட்டம் | 2000 |

(தொடரும்)



திருமாகறல் இராசகோபுரத் திருப்பணித் தொடக்க விழாவிற் கலந்து கொண்ட
அறநிலைய அமைச்சர், ஆணையர், தவத்திரு சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் முதலிய பெருமக்கள்

## ஆழ்வார் திருநாட்கள்

தை—பிப்ரவரி

22— 4 திருக்கோவிலூர் எம்பெருமானார் ஜீயர்

24— 6 எம்பார்

27— 9 திருமழிசை ஆழ்வார்

மாசி

4— 16 திருநகர் ஆழ்வார்

6— 18 சிறிய கோவிந்தப் பெருமாள்

## நாயன்மார் திருநாட்கள்

தை—பிப்ரவரி

22— 4 கண்ணப்பர்


23— 5 அரிவாட்டாயர்

29— 11 சண்டேசுரர்

மாசி

8— 20 காரியார்

12— 24 கோச்செங்கட்சோழர்.



மேல்: ஆக்கூர்த் தன்றோன்றீசர் மாடக்கோயில் 卐 கீழ் : திருமாகறல் திருமுறையுலா



Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments